




கல்கி
KALKI 12.1.2003
ரூ. 6.00
இளமை
ஸ்பெஷல்
2 புத்தகங்கள்
சபாஷ்
கணேசன்!


Kalpa Druma™
A Division of


குல்லு மல்லு
ஹாய் மல்லு
ஹாய் குல்லு ஸ்வீட்டி!
மிமி மியாய்
வீட்ல பாத்திரம் உருளுதா?
மம்மா மியா!
சேசே!. மனசைக் கொட்டிப் போட்ட டியூன்... நத்திங் பட் மைண்ட்!
இளைய ராஜா - II
ஹ ஹ! 'நத்திங் பட் நாய்ஸ்' இன்னும் பொருத்தமாயிருக்கும்.
ஆசையே அலை போலே...!
—கதிர்



அ.தி.மு.க அரசின் ஆபத்தான ஆட்டம்!



• குறுக்குக் கம்பி நீக்கப்பட்டுள்ளது





• ஈக்காடுதாங்கல் மாநகராட்சிப் பள்ளி மேற்கூரை!



• சோதனை என்ற பெயரில்...

தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்ட மேம்பாலங்கள் மற்றும் பள்ளிக் கட்டடங்களில், ஊழல் நடந்திருப்பதாகச் சொல்லி, அதைக் கண்டுபிடிக்கும் நோக்கில் ஒரு ஆபத்தான விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறது அ.தி.மு.க அரசு. இதன் காரணமாக பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்கிறார்கள்.

"ஸ்டாலின் மேயராக இருந்தபோது ஐந்து வருட காலத்தில் 110 கோடி செலவில் சென்னை மாநகரில் 300க்கும் மேற்பட்ட கட்டடங்கள் கட்டப்பட்டன. இது தவிர, மேம்பாலங்களும் கட்டப்பட்டன. இவைகளில், மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல், என்று ஆட்சிக்கு வந்த புதிதில் கலைஞர், ஸ்டாலின் ஆகியோரைக் கைது செய்தார்கள்.



ஆனால் குற்றப் பத்திரிகை இதுவரை தாக்கல் செய்யவில்லை. இப்போது, பள்ளிக் கட்டடங்களில் ஊழல் நடந்திருக்கிறது, என்று புது விவகாரத்தைத் துவங்கியிருக்கிறார்கள்" என்கிறார் தி.மு.க கவுன்ஸிலரும், சைதை மண்டலத் தலைவருமான மா. சுப்பிரமணியன்.

கட்டடங்களும், மேம்பாலங்களும் தரக் குறைவான கட்டுமானப் பொருட்களில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நிரூபிக்கும் பொருட்டு, பரிசோதனை செய்ய, சகட்டு மேனிக்கு, பாலங்களிலும், கட்டடங்களிலும், கான்க்ரீட் மற்றும் கம்பிகளைப் பெயர்த்தெடுக்கிறார்கள். எடுத்ததை சரி செய்யாமல் விட்டதால்தான் இப்போது பிரச்னை!

"இது போல இடித்தெடுத்துத்தான் சோதனை செய்ய வேண்டுமென்ற அவசியமே இல்லை. நவீன முறைப்படி சென்னை ஐ.ஐ.டி மற்றும் கட்டுமான பொறியியல்



• காந்தி மண்டபம் பாலம்



• பூமியைத் தோண்டி...

ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன், கம்ப்யூட்டர் துணையுடன், கான்கிரீட் மற்றும் கம்பிகளின் தரத்தை இடிக்காமலேயே சோதனை செய்ய முடியும். ஆனால் திமுக அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்குவதற்கென்றே, இதுபோல் செய்திருக்கிறார்கள். சென்னை நகரில் உப்புக் காற்று வீசுகிறது. இடித்ததைச் சரி செய்யாததால், கம்பிகள் மழை மற்றும் உப்புக் காற்றில் அரிக்கப்பட்டு பலவீன மாகப் போய், பாலங்களுக்கும், கட்டடங்களுக்கும் ஆபத்து காத்திருக்கிறது. மக்கள் உயிர் போனாலும் பரவாயில்லை; தி.மு.க.வுக்குக் கெட்ட பெயர் வர வேண்டுமென்று இப்படிப் பட்ட ஆபத்தான ஆட்டத் தில் ஜெ. அரசு இறங்கியிருக்கிறது" என்றார் மா. சுப் பிரமணியம்.

பள்ளிக் கட்டடங்களையும், பாலங்களையும் இப் படி இடித்தது குறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப் பட்டிருக்கின்றன. இது போன்ற இடிக்கும் பணியில் இறங்கியுள்ள ஜெ. ஆட்சியில், கடந்த ஒன் றரை வருடங்களில் ஒரு வகுப்பறை கூட புதிதாகக் கட்டித் திறக்கப்படவில்லையென்று சொல்கிறார் மா. சுப்பிரமணியம்.

- கௌசி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2 234 5622 / 23 / 24
தொலைநகல் :
044 - 2 234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

கானலும் புழுதியும் கைகோத்துக் கொள்ளும் கடும் கோடை. திடுமென, கிழிந்த வானம், எங்கோ தூரத்தில் பூமி நனைகிறது. அந்த மழையின் முகத்தை மண் வாசனையாய் மொழிபெயர்த்து அனுப்பும் வாடைக் காற்று, சுவாசத்தில் தவழ்ந்து மனசை நனைக்கும். அதுபோன்றதொரு அனுபவத்தைத் தருகிறது இந்தப் படமும்.

ஜாதிப் பிரிவினையும், அரசியல் பாகுபாடும் ஆதாயத்திற்காக முடுக்கி விடப்பட்ட ஒரு மதுரை கிராமம். அங்கே அடிக்கடி பிடிக்கிறது தீ. அதை அணைக்க வந்த தீயணைப்பு வீரர் சிவனுக்கும், கிராமத்துப் பெண் தவமணிக்கும் இடையே காதல் நெருப்பு பற்றிக் கொள்கிறது. ஒட்டுமொத்த ஊரும், அவர்களது காதலை அணைக்க அணி திரள, எதிர்ப்பை மீறி அவர்கள் எப்படிக் கரம் பிடிக்கிறார்கள் என்பதை சிக்கலோ, சிடுக்கோ இல்லாத ஸ்வெட்டர் பின்னல் போன்ற சூப்பர் ஃபாஸ்ட் திரைக்கதை மூலம் சொல்லியிருக்கிறார்



சுசு கணேசன்.

இதற்கு முன் கையாளப்படாத புதிய விஷயம் கதை. கவனிக்க! கதைக்களம் தமிழக கிராமம்! நல்லவேளையாக அதன் ஆத்மாவை கோடம்பாக்கத்து ஜிகினாத் தனங்களால் சிதைத்து விடாமல், வழக் கொழிந்து கொண்டிருக்கும் கிராமத்து வாழ்க்கை முறையை மீட்கும் விதமாக, காட்சிகளை உயிரோட்டத்துடன் அமைத் திருக்கிறார்.

தம்பிகளுக்காக தனக்குள்ளிருக்கும் ஆசைத் தீயை அணைத்தே வைத்திருக்கும் பாசமுள்ள அண்ணன், கண்ணெதிரில் தீயைக் கண்ட மாத்திரத்தில் தண்ணீர்க் குழாயை லாவகமாய்த் தூக்கித் தோளில் வைத்து ஓடி, துணிச்சலாய்த் தீயோடு போரா டும் ஒரு தொழில் முறைத் தீயணைப்பு வீரன்; காதலியே மாபெரும் தவறு செய்கிற போது தயங்காமல் தட்டிக் கேட்கிற நேர்மை யான காதலன், என்று நிறைவாய்ச் செய் திருக்கும் பிரசாந்த்தின் நடிப்பில் உழைப்பு கண் கூடாய்த் தெரிகிறது.

தங்கைகளுக்காக வாழும் கிராமத்துப் பெண் தவமணியாக சினேகா ஜொலிக் கிறார். வீட்டை விட்டு ஓடு, என்று விரட்டு கிற அப்பாவிடம், "நான் எதுக்கு ஓடணும்? மனசுக்குப் பிடிச்சவனோடு வாழணும்னு நினைக்கிறது தப்பா? தள்ளுங்க, எனக்கு நிறைய வீட்டு வேலை கிடக்கு" என்று துடுக் கும், துணிச்சலுமாய் வெடுக்கென்று பேசுகிற போதும், மகளுக்கு வந்த காதல் கடிதங்களை, மூன்றாம் மனிதர்கள் முன்னிலையில் அப்பா நாசர் படிக்கச் சொல்லும்போது,

விரும்புகிறேன்!

"அக்கா லெட்டரைப் படிக்காதடா தங்கம்" என்று கூனிக் குறுகி தங்கையிடம் கெஞ்சும் போதும், நெகிழ்ச்சியோடு ஆச்சர்யமும் ஏற்படுத்துகிறார்.

பசுமை சூழ்ந்த கரும்பு வயல்கள், பாசி படிந்த மொட்டைக் கிணறு, ஒட்டுமொத்த கிராமத்திற்கும் ஒரே திண்ணை போல, இளைப்பாறும் கல் மண்டபமுள்ள கிராமத் துப் பொட்டல், என்று நிஜமான தமிழகக் கரிசல் கிராமமொன்றைப் பளிச்சென்று கண் முன் நிறுத்தும் கே.வி. ஆனந்த், ராம்ஜி ஆகியோரின் கேமரா, சவாலான தீப்பிழம்பு காட்சிகளில் தான் பரத்தியிருக்கிறது.

தேவாவின் இசையில் மாறுபட்ட டியூன் களைக் கேட்க முடிகிறது. ஆனால் வியாபார நோக்கிலான பாடல்களை சினிமாத்தனமாய் உள்ளீடு செய்திருப்பதில் இயக்குனரின் காம்ப்ரமைஸ் தெரிகிறது.

ஒரு கிராமத்துக் காதலை மாறுபட்ட பின்னணியில் சொல்வதோடு நின்றுவிடா மல், கிராம மக்களைக் கூறுபோடும் சக்தி களுக்கு எதிராக, மண் வாசனையோடு, குரல் கொடுத்திருக்கும் சுசி கணேசன், வளர்க் கப்பட வேண்டிய இளம் இயக்குனர்.

- விஷுவல்தாசன்

○ ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ் ○ அபவ் ஆவரெஜ் ● டிஸ்டிங்ஷன்

"வன்னிவேலம்பட்டி! பத்து வருடங்களுக்கு முன்புவரை பிளவு படாத எனது சொந்தக் கிராமம். இந்த ஊரின் இன்றைய முகத்தைத் தான் 'விரும்புகிறேன்' படத்தில் பதிவு செய்திருக்கிறேன். படம் பார்த்து நிஜம் உணர்ந்து நெகிழ்ந்த எனது மக்கள், புத்தாண்டு தினத்திற்கு முதல் நாள், எங்கள் ஊரிலேயே எனக்குப் பாராட்டு விழா எடுத்தனர். ஒற்றுமைதான் கிராமத்தின் உயிரென்று படத்தில் சொன்னதையே, விழா மேடையிலும் சொன்னேன். அந்தக் கணத்தில் அங்கே திரண்டிருந்த அத்தனை பேரும் உணர்வு பொங்க கைதட்டினார்கள். எனது இதய அறைகளில் இன்னமும் எதிரொலித் துக் கொண்டிருக்கும் அந்தக் கரவொலியின் அர்த்தம், பிரிந்த ஊர் இணைந்துவிட்டது என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண் டிருக்கிறது. எனக்கு அது போதும்."

- சுசி. கணேசன்



பொதிகையில் 'வளையாபதி' என்ற தமிழ்க் காப்பியம் குறித்து ஒளிபரப்பினார்கள். முழுமையாக நமக்குக் கிடைக்காத நூல் அது. என்றாலும் கிடைத்ததில் களிக்க வைக்கும் பகுதிகள் உண்டு. நெற்பயிர் கரும்புடன் போட்டி போட்டுக் கொண்டு உயர, கரும்பு பாக்கு மரத்துடன் போட்டியிடுகிறது! இதனால் நாணமடைந்த பாக்கு மரம், வெட்கத்தில் தன் முகத்தை மேகங்களுக்கிடையே மறைத்துக் கொள்கிறதாம். 'அட' என்று வியப்பாக இருந்தது. கவிஞர் மட்டுமல்ல, அந்தக் காட்சியை சுட்டிக் காட்டியவரும் வியப்பை அளித்தார். இரட்டை இலையில் ஐக்கியமான பிறகு நெடு நாட்களாக அஞ்ஞாதவாசத்தில் இருந்த தமிழ்க்குடிமகன்.

'பாப் ஐ' என்றால் கார்ட்டூன் பிரியர்களுக்கு நன்றாகவே தெரியும். கீரையைத் தின்று பலம் பெருகி செயற்கரிய செயல்களை இந்திய சினிமாக் கதாநாயகன் போல செய்து முடிப்பவன். இந்தப் பாத்திரம் டீ.வி.யில் உருவாகி இருபது ஆண்டுகள் ஆனதைக் கார்ட்டூன் நெட்வொர்க்கில் கொண்டாடி மகிழ்ந்தார்கள். பாப் ஐயின் ஜோடியாக வரும் பெண்ணின் பெயர் ஆலிவ் ஆயில்!

தனது நகவெட்டியால் மண்ணைக் கீறிப் பார்த்தார் கவாஸ்கர். 'பிட்ச் இறுகிப் போயிருக்கிறது. எனவே டாஸில் ஜெயிப்பவர்கள் எதிரணியையே முதலில் பேட் செய்யச் சொல்வார்கள்' என்றார். பூவா தலையாவில் வென்ற (ஏதோ நியூசிலாந்தில் இதிலாவது வெற்றி கிடைத்ததே) கங்குலி, கவாஸ்கர் கருத்து தெரிவித்தது போலவே நம் அணி முதலில் பந்து வீசும் என்று தீர்மானித்தார். ஈ.எஸ்.பி.என்.னில் கவாஸ்கர் 'நம் அணிதான் ஜெயிக்கும்' என்று கூறவில்லை. கங்குலியின் அணியால் அதை செயலில் வழிமொழிந்திருக்க முடியுமா என்பதில் ஏற்பட்ட நியாயமான சந்தேகம்!

ஜெயா டீ.வி.யின் 'மார்கழி மகா உத்சவம்' கர்நாடக இசைப் பிரியர்களின் பரவலான பாராட்டுதல்களைப் பெற்றுவிட்டது. பங்கேற்ற விஐபி கலைஞர்கள் ஈடுபாட்டுடன் இசைத்தது மட்டுமல்ல, நிகழ்ச்சிகள் துல்லியமாகப் படமாக்கப்பட்டிருந்ததும் முக்கியக் காரணம்.

ஏ.எக்ஸ்என். சானலில் 'தி ப்ரின்ஸ் ஆஃப் இஜிப்ட்' திரைப்படம். மோசஸின் கதை. அனாதையாக்கப்பட்ட அவர், முட்டி மோதி உயர்நிலையை எய்துகிறார். அனிமேஷன் படம்தான். பல்வேறு இயற்கைக் காட்சிகளை மிக மிக அற்புதமான வண்ணக் கலவையில் வரைந்திருந்த ஓவியர்கள் குழுவைக் கைவலிக்கும்வரை கை குலுக்க வேண்டும் போலிருந்தது.



அண்ணி வைத்த பொட்டு!

'அண்ணி' தொடர் விரைவில் முடிந்துவிடும் என்பதற்கான அறிகுறிகள் ஒரு மாதத்திற்கு முன்பே தோன்றி விட்டன. பொதுவாக சீராகவும் நம்பும்படியும் சென்று கொண்டிருக்கிறது (முக்கியமாக நீதிமன்றக் காட்சிகளில் வழக்கமாக இடம் பெறும் நீதிமன்றச் செயல்பாட்டு அபத்தங்கள், இதில் இல்லாததைக் குறிப்பிட வேண்டும்). ஆனால் கலப்பினக் குடும்பத்தில் பெண் எடுக்க அடியோடு மறுப்பவரை, அவருக்குச் சற்றும் சம்பந்தமில்லாத கவிஞர் வாலி சந்தித்து, சரமாரியாக வரைமுறையின்றித் திட்டுவதும், உடனே முன்னவர் மனம் மாறுவதும் பெரிய திருஷ்டிப் பொட்டு.

— ஆதர்ஷ்

ரிமோட்

26-வது சென்னை புத்தகக் கண்காட்சியில்

வர்த்தமானன் பதிப்பக நூல்கள்

9.1.2003 - 19.1.2003 - இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி.

	விலை* ரூபாய்
சிலப்பதிகாரம் (மூலமும் தெளிவுரையும்) - கையடக்கப்பதிப்பு	40
மணிமேகலை (மூலமும் தெளிவுரையும்) - கையடக்கப்பதிப்பு	40
வில்லிபாரதம் (மூலமும் தெளிவுரையும்) 4 தொகுதிகள் (இலவசம் : வில்லிபாரதத்தில் கண்ணன்)	400
பெரியபுராணம் (மூலமும் தெளிவுரையும்) - 6 தொகுதிகள் (இலவசம் : நாயன்மார் அவதாரத்தலங்கள்)	400
திருமந்திரம் (மூலமும் தெளிவுரையும்) - 3 தொகுதிகள்	225
திருவிளையாடற்புராணம் (மூலமும் தெளிவுரையும்) - 5 தொகுதிகள்	300
கந்தபுராணம் (மூலமும் தெளிவுரையும்) - 10 தொகுதிகள்	600
நாலாயிர திவ்வியப்பிரபந்தம் (மூலமும் தெளிவுரையும்) - 9 தொகுதிகள்	600
அரிச்சந்திர புராணம் (மூலமும் தெளிவுரையும்)	90
திருக்குறள் உரை விளக்கம்	80
சிவபுராணம் (மூலமும் விளக்கவுரையும்)	70
ஜெயகாந்தன் நாவல்கள் 5 தொகுதிகள்	1080
சீவகசிந்தாமணி ஓர் ஒப்பற்ற காப்பியம்	90
சிகரத்தைத் தொடுவோம்	50
திருமுறைத் தலங்கள்	337
ENG - ENG-TAMIL DICTIONARY (FREE : LETTER WRITING)	200
TIRUKKURAL WITH ENGLISH EXPLANATION	270
நாயன்மார் வரலாறு- கையடக்கப்பதிப்பு	36
கீதைப்பேருரை- கையடக்கப்பதிப்பு	54
பொன்னியின் செல்வன் 6 தொகுதிகள் - கையடக்கப்பதிப்பு	150
சிவகாமியின் சபதம் 4 தொகுதிகள்- கையடக்கப்பதிப்பு	100
பார்த்திபன் கனவு - கையடக்கப்பதிப்பு	35
வாழ்விக்க வந்த காந்தி - கையடக்கப்பதிப்பு	36
நாலடியார்(மூலமும் தெளிவுரையும்) - கையடக்கப்பதிப்பு	14
திருக்குறள் நாமக்கல் கவிஞர் உரையுடன்- கையடக்கப்பதிப்பு	20
இவ்வளவு தான் ஆங்கிலம் (FREE : SPEAKING COURSE)	150

*10% புத்தகக் கண்காட்சி சிறப்புக் கழிவு போக

– தராசு

● வளர்மதி ஆசைத்தம்பி,
தஞ்சாவூர் - 7.

? தீவிரவாதம் என்றால் என்ன என்று ஐ.நா. சபை விளக்க வேண்டும் என்கிறாரே முஷாரஃப்?

! அவர் நாகநந்தியின் மறு அவதாரம். அப்படித்தான் தந்திரமாகப் பேசுவார்! கொடுமையாக நடந்து கொள்வார். உலக அரங்கில் ஏமாறுவதற்கு ஆட்களும் இருக்கிறார்கள். இங்கே ஒரு மகேந்திர பல்லவர் இல்லாதது தான் பெரும் குறை.

● டி. சுப்ரமண்யம், மேலையூர்.

? பதவி ஏற்பு விழாவில் வந்து கலந்து கொள்ளுமாறு ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுத்த நரேந்திர மோடி, தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கருணாநிதியை அழைக்காதது ஏன்?

! ஒரே உறையில் இரண்டு கத்திகளை வைக்க முடியாது என்பது மோடிவித்தைக்காரருக்குத் தெரியாதா என்ன!

● ஆர். அப்துல் சலாம்,
திருச்சி - 20.

? குமாரதாஸ் தலைமையில் 'தமிழ் மாநில காமராஜ் காங்கிரஸ்' உதயமாகி இருக்கிறதே?

! அவரவரும் தங்கள் தங்கள் கட்சிக்கு, மறைந்த பெருந்தலைவர்களின் பெயரை வைப்பது தான் ஆட்சேபணைக்குரியது. பாவம், அந்தப் பெருந்தலைவர்கள்!

● கா.மு. ஜக்கரியா, எலந்தங்குடி.

? பணத்தாசை காட்டி, வெளி மாகாணத்து வீரர்களை இறக்குமதி செய்து, பதக்கங்களை வென்ற சந்திரபாபு நாயுடுவுக்குப் பெருமை சேரவல்லதா...?

! உலக அரங்கிலேயே இந்த வழிமுறை ஏற்கப்படுகிற ஒன்றாகிவிட்டது. சந்திரபாபு நாயுடுவின் இந்த சாமர்த்தியம் கூட மற்ற மாநிலத்தவருக்கு இல்லையே!

● ஆர்.ஜி. விநாயகா, திசையன்விளை.

? 'அம்மா தினசரி இருபத்தெட்டு மணி நேரம் உழைக்கிறார்' என்று புலமைப்பித்தன் பேசியிருக்கிறாரே, என்ன கணக்கு?

! poetic licence!

● காமேதா, பொறையாறு.

? நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி, கியூ பிராஞ்ச், எஸ்.பி.சி.ஐ.டி., செக்யூரிட்டி போலீஸாருக்கு வழங்க வேண்டிய பயணப்படி இரண்டு கோடி ரூபாயை, கடந்த பத்து மாதங்களாக அரசு நிறுத்தி வைத்துள்ளது பற்றி...?

! இந்த லட்சணத்தில் இங்கே ஆட்சி நடந்தால் அமைதிப் பூங்கா படிப்படியாக பயங்கரவாதத்தின் நிலைக்களனாக மாறுவதில் வியப்பென்ன?

கலைஞரின் ஹிந்துமத எதிர்ப்பு பற்றி...?



• சங்கட சீரியல்!

● வி.எஸ். மோகன் ராஜ்,
மணக்குப்பம். ❑

? கலைஞரின் ஹிந்து மத எதிர்ப்புப் பிரசாரம் பற்றி கருத்து கூறாதது ஏன்?

! இதோ சொல்கிறேன்: இந்து மதத்தில் சில குறைகள், மூட நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை இதமாகச் சுட்டிக்




• நேசத்தால் நீக்கம்!



• எதிர்ப்புப் பிரசாரம்



• சாமர்த்தியம்!



• வித்தைக்காரர்

காட்டினால் மக்கள் திருந்துவார்கள். ஆனால் மனம் புண்படும்படி பேசினால் கலைஞருக்கும் அவப்பெயர்; அவர் நோக்கமும் நிறைவேறாது. ஹிந்துமத அடிப்படைவாதிகளின் கைதான் ஓங்கும். அது நாட்டுக்கும் நல்லதல்ல.

● **ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்.**

? இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ஐ.சி.சி. இடையே மோதல் மீண்டும் வலுக்க ஆரம்பித்துள்ளதே?

! இந்தச் சூழலில், டால்மியா உலகக் கோப்பை ஒப்பந்தக் கமிட்டியிலிருந்து விலகியிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

● **கே.வி. ராமன், சென்னை – 73.**

? கருவூர் தெய்வத் தமிழ் மாநாட்டில், கோவில்களில் வழிபாட்டுச் சடங்குகள் தமிழில் நடக்க தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளதே?

! சமீபத்தில் கபாலீஸ்வரர் கோயில் போயிருந்தேன். வடமொழியில் அர்ச்சனை – ஆராதனை செய்து, ஈசனுக்கு முறையாக ஷோடச உபசாரங்கள் நடந்தன. இறுதியில் ஓதுவார் தேவாரப் பதிகங்கள் பாடினார். கூடியிருந்த பக்தர்கள், மொழியைப் பிரித்துப் பாராமல் மனம் ஒன்றியிருந்தனர். வடமொழியும் தமிழும் கலந்த இந்த வழிபாட்டு முறையை, எந்தச் சட்டமும் திணிக்கவில்லை. இயல்பாக உருவாகி, வலுவாகத் தொடர்கிறது. சட்டங்கள் கொண்டு வந்து கடவுளை இப்படித்தான் வழிபட வேண்டும் என்று திணிப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. அந்தந்த கோயிலில் உள்ள மரபுகள் மதிக்கப்பட வேண்டும்.

● **கே. சம்பத், திருக்கழுக்குன்றம்.**

? தேசிய அரசியலில் பங்கு பெறும் அளவுக்கு ஜெயலலிதா பக்குவப்பட்டு விட்டாரா...?

! அதனாலென்ன! மற்ற தேசியத் தலைவர்கள் பக்குவப்பட்ட பண்பாளர்களா? பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று!

● **சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.**

? தனியார் நிறுவனம் ஒன்று நடத்தியுள்ள ஆய்வில், அரசு அலுவலகங்களில் ஆண்டொன்றுக்கு 26,728 கோடி ரூபாய் லஞ்சம் கைமாறுகிறது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதே?

❐ ரூ.100/- பரிசு பெறுபவர்:

வி.எஸ். மோகன்ராஜ்,
மணக்குப்பம். 607 209.

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

கே. சம்பத்,
10, பெரிய தெரு, மங்கலம்,
திருக்கழுக்குன்றம். 603 109.

! ஏற்கெனவே கொழுத்த கறுப்புப் பணச் சந்தைக்குத்தான் அது போய்ச் சேரும். பட்டுப்புடைவை, நகைக் கடைகளில் முள்ளங்கி பத்தை போல் நோட்டுகள் கொடுத்துப் பொருள் வாங்குவது பலருக்கு எப்படிச் சாத்தியம் என்பது புரிகிறதா! ஒரு பக்கம் நேர்மை வீழ்ச்சி, மற்றொரு புறம் போலியான பொருளாதாரப் பெருக்கம்!

● **எம். செல்லையா, சாத்தூர்.**

? ஆபாசக் காட்சிகள் வந்தால் ரசிகர்கள் தியேட்டரை விட்டு வெளியேற வேண்டும் என்கிறாரே தங்கர்பச்சான்...?

! ஆபாசக் காட்சி என்பது மனித



• நாகநந்தி!



• கவிஞர் கணக்கு!



• கண்ணாடி வீடு!

பலவீனத்தை வியாபாரமாக்கும் அப்பட்ட முயற்சி.

அப்படிப்பட்ட காட்சிகளை வழங்கக் கூடாது என்கிற நெஞ்சுரம் திரைத்துறைக் கலைஞர்களுக்கு இல்லாத போது, ரசிகர்களுக்கு மட்டும் எங்கிருந்து வரும்!

● **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி.**

? பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்ட முனைந்துள்ள கேரள அரசின் திட்டம் பற்றி...?

! தமிழக அரசு நேரத்தோடு விழித்துக் கொண்டு தட்டிக் கேட்பது நல்ல அறிகுறி.

● **பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.**

? விலங்குகள் பரிசோதனைக் குழுவிலிருந்து மேனகா காந்தி நீக்கப்பட்டது குறித்து...?

! விலங்குகளை வைத்து மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவதில், கொடூரமும் குரூரமும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார் மேனகா. ஆராய்ச்சியே இதனால் தடைப்படுகிறது, என்ற கருத்துடைய மனித விலங்குகள் அடைந்துள்ள தற்காலிக வெற்றி இது!

● **என்.சி. தர்மலிங்கம்,**
நாமக்கல் – 1.

? ஈராக் மீது மறுபடியும் அமெரிக்கா போர் தொடுப்பது சரியாகுமா? பேரழிவு ஏற்படாதா?

! போர் தொடுப்பதாக மிரட்டியதால்தான் ஐ.நா. சபை ஆய்வுக் குழு வந்து ஆய்வுகளை நடத்த ஈராக் அனுமதித்துள்ளது. இன்று வரை ஆய்வுக் குழுவினால் அணு குண்டு, ரசாயன விஷ ஆயுதங்கள் எதையும் ஈராக்கில் காண முடியவில்லை.

● **தா.பகவதி, திருநெல்வேலி.**

? இசைக் கலைஞர்கள் மேடையில் பாடும்போது கீர்த்தனைகளைப் புத்தகம் பார்த்துப் பாடலாமா...?

! கர்நாடக சங்கீதத்துக்கு மட்டுமே உரிய அரிய வடிவம் கீர்த்தனை. இது படைக்கப்படும் போதே மொழியும் இசையும் இணை பிரியாத கலவையாகப் பிறக்கிறது. அதனைப் பாடுவோர், படைப்பாளியின் உணர்வைப் புகுத்திப் பாட வேண்டுமானால், மொழியையும் இசையையும் சேர்த்து உள்வாங்கிக் கொண்டு வெளிப்படுத்த வேண்டும் – எனவே, ஒரு கச்சேரியில் புதிதாக ஒரு பாடலைப் பாட வேண்டும் என்று நினைக்கிற கலைஞர், அதை நன்கு சாதகம் செய்து கொண்டு வந்து பாடும்போதுதான் படைப்பாளிக்கு நியாயம் செய்தவராகிறார். புத்தகம் பார்த்துப் பாடினால் அது அநியாயம்தான்!

● **எஸ்.ஆர். கௌஷிக், பெங்களூர் – 11.**

? 'கங்கா, யமுனா, சரஸ்வதி சங்கமம்' அறுநூற்று அறுபத்து ஏழு எபிசோடுகளுடன் முடிந்தது பற்றி...?

! பேசாமல் கங்கா, யமுனா, சரஸ்வதி 'சங்கடம்' என்று தலைப்பை மாற்றிவிடலாம்.

ஞானியின் சந்நதியில்

ஞானம் - தியானம் - ஆனந்தம்



- சத்குரு ஜகி வாசுதேவ் அவர்களுடன் ஒரு சத்சங்கம்

19.01.2003 ஞாயிறு மாலை 5.50 மணி
சீரணி அரங்கம், மெரீனா கடற்கரை, சென்னை

- இசை வணக்கம் : திருமதி. சுதா ரகுநாதன்

வாருங்கள், ஞானம்–தியானம்–ஆனந்தம் உணர்ந்திடுங்கள்

Wish you all a happy & prosperous

New Year 2003

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 2434 4442, 2432 7764 TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-


(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க
ராசியான கடை **P.R.**ஜுவல்லரி.
எங்கு ஜோதிடம் பார்த்தாலும்
எங்களிடம் வந்து ஒவ்வொரு
ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-க்கு வாங்கிப்
பயன்பெறுங்கள். உடனடியாகக் கிடைக்கும்.
கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம்
தருகிறோம். தங்கத்தில்
2 கிராம் முதல் 8 கிராம் வரை
ரூ. 1800/- முதல் ரூ. 5000/-ம் வரை
உடனடியாகக் கிடைக்கும்.

தபால் எழுதினால் முழு
விவர பாம்லட் இலவசமாக
அனுப்புகிறோம்.

குறிப்பு : ராஜ் டீ.வி.யில் தினசரி காலை 6.55 மணிக்கு
சிறப்புப் பேட்டியைப் பார்க்கவும்.



அக்பர் பாதையா? ஔரங்கசீப் பாதையா?

புத்தாண்டில் பிரதமர் பேசியிருக்கிறார். அனைவரும் அறிந்த உண்மையைப் புதிது போல் எடுத்துச் சொல்லியிருக்கிறார்:

"ஹிந்துத்வா என்பது மனித குலத்தைச் சமமான அன்போடு அரவணைக்கும் தத்துவம்; சிலர் கருதுவதுபோல், அது குறுகிய எல்லைகளையுடைய தீவிரவாதக் கோட்பாடு அல்ல..."

கோவாவிலிருந்து இச் சிந்தனையை வெளியிட்ட பிரதமரை எதிர்க்கட்சியினர் விளாசித் தள்ளி விட்டனர். குஜராத்தில் மோடி அராஜகம் புரிந்தபோதோ, தாக்கரே எல்லை மீறிய போதோ, தொகாடியா வெறித்தனமாக முழங்கியபோதோ வாய் திறந்து எதிர்ப்புத் தெரிவிக்காத பிரதமர், இப்போது திடீரென்று மிதவாதம் முழங்குவதில் அர்த்தம் இல்லை என்று காட்டமாக விமர்சித்துள்ளனர்.

எதிர்க்கட்சியினரைப் போலன்றி, நாம் பிரதமரின் பேச்சில் நம்பிக்கை வைக்கிறோம். ஆனால் அந்த நம்பிக்கை நிலைக்க, அவர் பேச்சோடு நில்லாமல் செயல்படவும் வேண்டும்.

பிரதமரின் பேச்சுக்குப் பதில் பேச்சாக அன்றி, புத்தாண்டு பிறக்கு முன்னரே அவரை எச்சரித்த பெருமை ப. சிதம்பரத்தைச் சேரும்.


மோடி, தொகாடியா, அசோக் சிங்கல், உமா பாரதி போன்றோரின் விஷப் பிரசாரங்களைத் தடுக்க, தமக்குள்ள அதிகாரத்தை பிரதமர் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னதோடு, பல துறைகளிலும் மத்திய அரசு எவ்வாறு கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்



கல்கி



2003 ஜனவரி 12
சித்ரபானு மார்கழி 28
மலர் : 61
இதழ் : 24



சுட்டிக் காட்டியிருக்கிறார்.


எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் பணி என்கிற வறட்டு எதிர்ப்பாக அன்றி, ஆக்கபூர்வமான யோசனைகளுடன் கூடிய அவரது புத்தாண்டுச் செய்தி, இந்தியன் எக்ஸ்பிரஸில் கட்டுரையாக வெளியாகியது.

பிற அரசியல் தலைவர்கள் பலரும் இதுவரை துணிந்து சுட்டிக் காட்டாத விஷயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கும் ப. சிதம்பரத்தின் துணிவையும் நாட்டு முன்னேற்றத்தில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் வரவேற்கிறோம்:

● பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த நாம் தயங்கலாகாது. காஷ்மீரில் நிகழ்ந்துள்ள மாநில அரசு ஆட்சி மாற்றத்தைக் கண்டு எதிர்ப்புணர்வு பாராட்டாமல், அவ்வரசின் துணையுடன் பயங்கரவாத அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தலாம்.

● இந்தோ – பாக் பிரச்னை என்பது பிரதானமாக காஷ்மீர்ப் பிரச்னைதான்; எல்லைக் கோடு பிரச்னைதான். ஏழு லட்சம் படையினரை எல்லைப் பகுதியில் நிறுத்தி, பத்தாயிரம் கோடி ரூபாய் செலவழித்த பின்னரும், அப்பிரச்னையை நம்மால் ராணுவ பலம் கொண்டு தீர்க்க முடியவில்லை. எல்லை கடந்து வரும் பயங்கரவாதத்தைத் தடுக்கவும் முடியவில்லை. கோத்ரா, அக்ஷர்தாமில் நடந்தது போன்ற துயர நிகழ்வுகளைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே, அண்டை நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவது மிக அவசியம். மூன்றாவது நாட்டின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்வது கூட கௌரவக் குறைவு அல்ல. நீண்ட நெடுங்காலப் பிரச்னைகளை இவ்வாறு முத்தரப்புப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வது உலக வழக்கமாகி விட்டது.

● உலகத்துடன் ஈடு கொடுக்கவல்ல பொருளாதார முன்னேற்றம் வேண்டுமானால், கட்சித் தலையீடுக்கு இடங்கொடாமல், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று தனியார் மயமாக்கல் தொடர வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களும் வங்கிகளும் தனியார் மயமாக்கப்பட்டு, அதன் விளைவாக அரசு ஊழியர்கள் எண்ணிக்கை குறையுமானால், 'வாஜ்பாய் அரசு, இவ்



விஷயத்தில் உறுதி காண்பிக்கிறது, என்கிற நம்பிக்கை தொழில் துறையினருக்கு ஏற்படும். பொருளாதார சீர்திருத்தங்களின் நல்விளைவுகளை அதன் பின்னரே நாம் பார்க்க இயலும்.

● உலக அளவில் இந்தியாவைப் பற்றிய அபிப்பிராயம் மாசடைந்து வருகிறது. ஹிந்து – ராஷ்டிரம் ஹிந்துத்வா என்று குறுகிய மத வெறிக் கொள்கைகளுக்கு இடங்கொடுப்பதன் மூலம் இந்த நாட்டைப் பிரதமர் எங்கு அழைத்துப் போகிறார் என்று சிந்திப்பது நல்லது. இந்திய வரலாற்றில் மகா மன்னர்களாகப் போற்றப்படும் அசோகரும் அக்பரும் ஹிந்துக்கள் அல்லாதாரே. அவர்களது பரந்த நோக்கும் மனித நேயமும்தான் **'Great'** என்ற அடை மொழியைப் பெற்றுத் தந்தன. பராக்கிரமத்தால் ஆள முயன்ற ஔரங்கசிப் போன்ற மன்னர்கள், தங்கள் வம்சம் மடிந்து போகவே காரணமாயிருந்தார்கள்.

– 'இன்னும் இரண்டு முதல் நான்காண்டுக் காலம்தான் பொதுவாழ்வில் இருப்பேன் என்று கூறும் வாஜ்பாய், தாம் இருக்கிற காலத்துக்குள் என்ன செய்யப் போகிறார்?' என்ற கேள்வி யுடன் ஆரம்பித்து, இத்தனை சிந்தனைகளையும் முன் வைத்திருக்கிறார் ப. சிதம்பரம்.

அத்தனையுமே ஏற்றுக் கொள்ள வேண்டிய நியாயங்கள். 'வாஜ்பாய் தலைமையிலான இவ்வரசு தனது ஆட்சிக் காலத்தில் சாதித்தது என்ன...?' என்று வாக்களித்தவர்கள் கேள்வி எழுப்பிச் சிந்திக்க ஆரம்பித்தார்களேயானால், அடுத்த தேர்தலில் இக்கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வருவது சந்தேகம்தான். அதை உணர்ந்துதான், மோடியை ஹீரோவாக்குதல், தி.மு.க.வை விடுத்து அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு முயற்சி, போன்ற மலிவான அரசியல் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. இவை பா.ஜ.கவை ஔரங்கசிப் பாதையில்தான் அழைத்துப் போகும்.

இப்போதும் காலம் தாழ்ந்து விடவில்லை; அசோகர் பாதை அல்லது அக்பர் பாதைக்கு இட்டுச் செல்லும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை வாஜ்பாய் உறுதியாக எடுக்க வேண்டும். ஜாதி – மத – பேத சண்டைகளிலிருந்து தேசத்தை மீட்டு, பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டும். "உங்களால் முடியும்; செய்து காட்டுங்கள்!" என்று பிரதமருக்கு வற்புறுத்திச் சொல்கிறோம். ○

முள் சரிதானா?

வட்ட மேஜை



✉ உழைத்து, வாரிசுகளை வளர்த்து, களைத்துப் போன பெற்றோருக்குத் தேவை, முதியோர் இல்லம் இல்லை. பிள்ளைகளின் உள்ளம்தான். தராகசார் - முள்ளை சரி பார்க்க வேண்டுகிறேன்.

சேலம் -3,
அ. சின்னசாமி.

✉ 'திரும்பிப் பார்த்த போது' அட்டைப் பட அழகு, மீண்டும் கல்கியைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

மதுரை-16,
நெல்லை தேவமைந்தன்.

✉ 'வெற்றிக் கொக்கரிப்பில் இஸ்லாமியரைச் சீண்டிப் பார்த்து அவர்களிடம் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வது ஒரு குஜராத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் தீவிரவாதம் பெருகிட வழி வகுக்கும். வி.எச்.பி செயலாளர் மட்டுமல்ல, பா.ஜ.க பெருந்தலைகளும் இதை உணர்ந்து செயல்பட வேண்டும்!

திருச்சி - 21,
கிரிஜா மணாளன்.

✉ பீலா படமான 'பாலா' விமரிசனத்திற்கு கூலா ஒரு பக்கம் வீணடித்திருக்கலாமா?

அயன்புரம்,
சத்தியநாராயணன்.

✉ நமக்குக் கிடைத்திருப்பதை எப்படிப் பட்டதாக இருந்தாலும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அது மறுபடியும் கிடைக்காது என்னும் வாழ்வின் உண்மை நிலையை உணர வைத்த ரெ. கார்த்திகேசு பாராட்டுக்குரியவர்.

திருவாரூர், எஸ். பாலச்சந்தர்.

✉ பதவியின் போது அனுபவித்த சுகம், ஓய்வில் இல்லாததை உணர்ந்து... மீண்டும் பதவியில் அமர்ந்தவரின் உள்ளத்து உணர்வுகளுக்கு வடிவம் தந்து, பெ. நாயகி படைத்திட்ட 'நாற்காலி செல்லம்!' கதையல்ல... நிஜம்!

மதுரை - 1,
பி.எல். பரமசிவம்.

✉ ஸ்ரீதேவியின் பேட்டியை விட அவரது முழுப்பக்க வண்ணப் புகைப்படம் வெகு ஜோர். ஆனால், இப்படத்தை எடுத்தவர் பெயர்தான் ஏனோ விடுபட்டு விட்டது.

மொரட்டுப்பாளையம்,
இரா.வி. சௌந்தர்யா.

✉ 'அன்றும் இன்றும் என்றும்' படித்தவுடன் தோன்றிய எண்ணம். அந்தக் காலத்தில் எவ்வளவு பெரிய மஹா வித்வான்கள் என்றாலும், ஏழை, நடுத்தர ரசிகர்களுக்காக இலவசக் கச்சேரிகள் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தத் தன்மை தற்போது குறைந்துவிட்டது. இளைஞர் கூட்டம் வரவில்லை என்பது நிதர்சனமான உண்மைதான். ஆனாலும் சங்கீத சீசன் என்றவுடன் தோன்றும் குதூகலம் இன்றுவரை குறையவே இல்லை. குறையவும் குறையாது.

திருத்துறைப்பூண்டி,
சீனு. சந்திரா.

✉ அருள்வாக்கில் மகா சுவாமிகள், 'காபிக்கு அர்ச்சனை'. மறு பக்கத்தில் காபி விளம்பரம்! பேஷ், பேஷ், ரொம்ப நல்லாயிருக்கு.

சென்னை-107, ரகுபதி.



காவி கிடையாது; கவுன்ஸிலிங் உண்டு!



சென்னை ஜாபர் கான்பேட்டை, நேதாஜி நகரில் உள்ள ஒரு வீட்டிலிருந்து, நிறைய ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என்று வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். ''இந்த வீட்டில் என்ன விசேஷம்?'' என்ற குறுகுறுப்பு நமக்கு. யாராவது சாமியார் இருக்கிறாரா? குறி சொல்வது; அம்மன் அருள்வாக்கு, ஜோஸ்யம், சித்து விளையாட்டு போன்ற சங்கதிகளா? வெளியே வரும் ஓர் இளைஞரை மடக்கிய போது, ''குருஜி என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் பூஜ்ய ஸ்ரீ முரளிதர சுவாமிகளிடம் ஆசி பெற்று வருகிறோம். ஆனால் நீங்கள் ஊகிக்கும் எந்த சங்கதிகளும் அவரிடம் கிடையாது'' என்று அதிர்ச்சியளித்தார் அவர். உள்ளே போய்ப் பார்த்தபோது, சுவாமிகளைத் தேட வேண்டியதாகி விட்டது. காவி உடை கிடையாது. பஞ்சகச்சம், மினி குடுமி, நெற்றியில் சந்தனக் கீற்று. ஆசி வாங்க வந்த ஜனங்களோடு ஒருவராக அமர்ந்திருக்கிறார் முரளிதர சுவாமிகள்.

"இந்த 21ம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி, நமது அன்றாட வாழ்க்கையில் நன்றாகவே பிரதிபலிக்கிறது. ஆனால் நம்மால் அமைதியான வாழ்க்கை நடத்த முடிகிறதா?" என்று கேட்டுவிட்டு, சுவாமிகளே தொடர்கிறார். "மனிதனைக் கடவுளிடம் எடுத்துச் செல்வது மதம், ஆனால் மத மோதல்கள், அதனால் வளரும் தீவிர வாதம், பரஸ்பரம் தகவல் தொடர்புக்காகப் பயன்படுத்தப்படும் மொழியை வைத்து, மக்களுக்குள் பிளவு, பிரச்னை. கூட்டுச் சமூகம் பிளவு பட்டுக் கிடக்கிறது. குடும்பங்கள் தனித்தனித் திசையில் போய் விட்டன. நல்ல மார்க் வாங்கியும் மேல் படிப்பு ஸீட் கிடைக்கவில்லை. கேபிடேஷன் கட்டணம், லஞ்சம். படித்து வந்தும் வேலை கிடைக்கவில்லை. இன்றைய இளைஞனை வெகுவாக பாதிப்பது மன அழுத்தம். படிப்பு இருக்கிறதே, தவிர, பிரச்னைகளைச் சந்திக்க மன தைரியம் இல்லை. அவனை ஒரு பயம் சுற்றிச் சுற்றி அடிக்கிறது. இந்தச் சூழலில் உணர்வு பூர்வமாக சிந்திக்காமல், அறிவு பூர்வமாக அவனை சிந்திக்க வைக்க, ஆன்மிகத்தால் மட்டுமே முடியும். நமது புராண இதிகாசங்களிலிருந்து கதையை மட்டும் தெரிந்து கொண்டு பிரமிக்கக் கூடாது. அவைகளிலிருந்து நாம் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய செய்திகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து தியானம். அதைச் செய்வதால் மன அழுத்தத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.'' படப்பை அருகில் மலைப்பட்டில் இயற்கைச் சூழலில் ஆசிரமம் அமைத்து வேத வகுப்புகள் நடத்துகிறார் சுவாமிகள்.

— ப்ரியன்

படம் : ராஜன்

கோமேதகம் புஷ்பராகம் நீலம் வைடூரியம் முத்து

காலையும் மதியமுமில்லாத இந்த பத்து மணி வெயில் இதமாயிருக்கிறது. பெரிய பரபரப்புகள் அடங்கி, சிறுசிறு அலைகள் கரையேறுவதாய், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மெல்லிய ஒலிகள் கேட்டபடியிருந்தன.

காலைப் பொழுதின் அறிபறியான வேலைகளுக்குள் வீடுகள் இறுக்கமாகி விடுகின்றன. அவசரமாய் வேலைக்குக் கிளம்பிப் போனவர்களைத் தள்ளிவிட்டு, இப்போதுதான் ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றன வீடுகள்.

சில பெண்கள் இப்போதுதான் பல் தேய்க்கத் தொடங்குவார்கள். இன்னும் சிலர் மதிய சாப்பாட்டுக்கான தயாரிப்பு யோசனைகளில் மூழ்கியிருப்பார்கள். 'அப்பாடி...!' என டீ.வி. பெட்டி முன்னும் சிலர் உட்கார்ந்திருப்பார்கள். கணவனும், மனைவியுமாய் அலுவலகம் போகிற வீடுகளின் காலைப் பொழுதை நினைக்கும்போதே மூச்சு முட்டுகிறது.

கிராமத்தின் இயல்புகளைத் தொலைத்துவிட்டுத்தான், நகரத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகள் நிமிர்ந்து நிற்கின்றன. மனிதர்களுக்குப் பெயர்களை விடவும், குடியிருக்கும் வீட்டின் எண்களே முக்கியமெனப் படுகிறது. எதிரே வருபவரின் முகம் பார்த்துச் சிரிப்பதற்கும் கூட சற்றே தயங்குகிறார்கள். ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் பேசுவதற்கு வேறு வார்த்தைகளே இல்லாதது போல் விலகிப் போக, எப்படி முடிகிறது இவர்களால்...?



ஈரக் கையைத் துடைத்தபடியே, தொட்டிலருகே வந்தாள் அஞ்சலி.

குட்டிரோஜாவாய்க் கண்மூடித் தூங்கிக் கிடந்தான் பாரதி. மேலே கை வைத்துப் பார்த்தாள். காய்ச்சல் குறைந்திருந்தது. உள்ளுக்குள் இலேசான நிம்மதி.

வாசலில் மணிச் சத்தம்.

சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

தபால்காரர் நின்றிருந்தார்.

"இதோ...வர்றேன்..." குரல் கொடுத்தபடியே வந்தாள்.

அஞ்சலியைப் பார்த்ததும் மெலிதாகப் புன்னகைத்தார் தபால்காரர்.

"என்னங்க... டீச்சர், இன்னிக்கு ஸ்கூல் போகல?"


"குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அதான் லீவு போட்டிருக்கேன்!"

"சரி..." என்றபடியே, கடிதங்களை நீட்டினார்.

ஒவ்வொரு கடிதமாகப் புரட்டிப் பார்த்தாள். தெரிந்த நண்பர்கள், எல்.ஐ.சி.ரசீது, வார இதழொன்று, அறக்கட்டளை ஒன்றின் பெயர் தாங்கிய கடிதமும் இருந்தது. சற்றே ஆவலானாள்.

அவசரமாக அந்த அறக்கட்டளைக் கவரைப் பிரித்துப் படித்தாள்.

முகமெங்கும் பிரகாசமானது. கழுத்தை மேலே உயர்த்தி... உணர்வுகளை உள் விழுங்கினாள். உள்ளங்கையில் வெப்பம்



யாரிடம் சொல்வேனடி தோழி!

அ.வெண்ணிலா

பரவுவதை உணர்ந்தாள்.

மழை பெய்யுமா இன்று...? இப்போது மழை பெய்தால் தேவலாம். இந்த சந்தோஷத்தை மழையுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

உடனடியாக யாரிடம் சொல்வது?

சுந்தருக்கு ஃபோன் பண்ணிச் சொல்லலாமா...?

அவன் கம்பெனிக்குப் ஃபோன் பண்ணி, அவனைக் கூப்பிடச் சொல்லி, 'கட்' பண்ணி, திரும்பப் ஃபோன் செய்து... 'குழந்தைக்கு ஏதாவது ஆச்சோ!' என அவன் பதறியபடி ஃபோன் அருகே ஓடிவர... ச்சே... வேண்டாம். சந்தோஷம் போய் விடும்.

மாலையில் வீட்டுக்கு வந்ததும் சொல்லி விடலாம்.

மீண்டும் கடிதத்தைப் படித்தாள்.

'எங்களது அறக்கட்டளை நடத்திய கவிதைப் போட்டியில், உங்களின் கவிதை முதல் பரிசுக்குரியதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது...'

பெரியதாக, கரிய எழுத்தில் மினிர்ந்த அந்த வரிகளையே மீண்டும், மீண்டும் படித்தாள்.

'கவிதையொன்று பரிசு வாங்கியதற்கு இப்படி சந்தோஷப் படலாமா?'

மெல்லிய கூச்சம் படர்ந்தது.

'ஏன்... இதை விட வேறெதற்குச் சந்தோஷப்பட...?' மறுப்பும் அவளுள் இருந்தே சமாதானம் செய்தது.

ஏற்கெனவே பலமுறை கவிதைக்காக பரிசுகளைப் பெற்றிருக்கிறாள். இருந்தாலும், அறக்கட்டளையொன்று நடத்திய, மாநில அளவிலான கவிதைப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றிருப்பதென்பது, எவ்வளவு பெரிய்ய சந்தோஷம்...!

அப்பாவின் நினைவும் கூடவே வந்தது.

இப்படியொரு பரிசுச் செய்தியை அப்பாவிடம் காட்டியிருந்தால் 'ம்ஹூம்... அப்படியா?' என படித்துவிட்டுத் திருப்பித் தருவார். எந்த சந்தோஷத்தையும் அதிர்ந்து வெளிப்படுத்தவே தெரியாது அப்பாவுக்கு.

ஆனாலும், அவரின் 'ம்ஹூம்... அப்படியா?' என்கிற வார்த்தைகள், ஊரில் கண்ணில்

1

படுகிற ஆட்களிடமெல்லாம் 'எம் பொண்ணுக்குப் பரிசு கிடைச்சிருக்கு...ஓய்!' என பெருமையாய் வெளிப்படுவதும் அவளுக்குத் தெரியும்.

அப்பாவுக்கு உடனே ஒரு கடிதம் எழுத வேண்டும்.

குழந்தை அழத் தொடங்கினான். ஓடினாள் அஞ்சலி.

"முழிச்சிக்கிட்டீங்களா செல்லக் குட்டி. வாங்கடா வாங்க..." குழந்தையைத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு, அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

கண்களை சரியாகத் திறக்க முடியாமல், வெளிச்சம் உண்டாக்கிய கூச்சத்தில், சிமிட்டிக் கொண்டு சிணுங்கினான்.

"ஏஞ் செல்லத்துக்கு கண்ணைத் திறக்க முடியலையா..? டேய்... ஏமாத்துப் பயலே... முழி, முழி... முழிச்சுப்பாரு...!"

கை, கால்களை முறுக்கிக் கொண்டு, மெதுவாகப் புரண்டு, உருண்டு... முகத்தைப் பார்த்தான்.

"அப்புனு... இங்கப்பாரு, அம்மாவோட கவிதைக்குப் பரிசு கிடைச்சிருக்குடா.... தங்கம். இங்க பாருங்க... இந்த லெட்டர் பாருங்க!"

அவன் கைகளில் கடிதத்தைக் கொடுத்தாள்.

"குட்டி... அம்மா பரிசு வாங்கியிருக்கேன்டா. ஒரு முத்தாச்சி குடு. உங்கிட்டதான் அம்மா முதல்ல சொல்லியிருக்கேன்!"

பசியில் சிணுங்கினான் பாரதி.

"சரியான சுயநலக்காரன்டா நீ. ஒன் விஷயத்துல குறியா இருக்கப் பாரு. சரி, இரு. இரு. பாச்சிக் கொண்டு வர்றேன்..."

குழந்தையைத் தூக்கிக் கொண்டே சமையலறைக்குள் போனாள்.

இரை விழுங்கிய பாம்பு போல் முதலும், கடைசியும் சிறுத்து, இடையில் மட்டும் புடைத்திருக்கும் தன் ஊர்த் தெரு நினைவுக்கு வந்தது அஞ்சலிக்கு. கவிதை அந்தத் தெருவில் தான் அவளுக்குள் சுரந்தது.

புத்தக வாசிப்பு என்பது அப்பாவிடமிருந்து அவளுக்குத் தொற்றிக் கொண்ட பழக்கம். அப்பா வாங்கி வைத்திருந்த வகை வகையான புத்தகங்களை ஒரு பக்கம் விடாமல் படிப்பாள். சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரையென எல்லாவற்றையும் படிப்பாள். 'பொன்னியின் செல்வன்' நாவலை ஒரு நாளைக்கு ஐந்நூறு பக்கங்கள் கூட விடாமல் படித்திருக்கின்றாள்.

புத்தகத்தைக் கையில் எடுத்து விட்டால் அவளது உலகமே தனியாகி விடும். அம்மா சாப்பிடக் கூப்பிட்டாலும் எழுந்து போக மனம் வராமல்... "இந்தா... இதை முடிச்சிட்டு வந்துடுறேன்!" என்பாள்.

படிப்பது, சாப்பிடுவது, பேசுவது, சிரிப்பதுவென... எந்தக் கவலையுமற்று சந்தோஷமாய்க் கழிந்தன அந்த நாட்கள்.

மணி ஆறாகியிருந்தது.

"என்னாச்சு... சுந்தர் இன்னமும் வரவில்லை..."

"நொடிக்கொருதரம் வாசல் பக்கமாகப் பார்வையைத் திருப்பினாள்.

> "என்னப்பா இது, ஒரு லிட்டர் பாலுக்கு, அரைலிட்டர்தான் கொடுக்கறே?"
> "தண்ணி விட டைம் இல்லைம்மா. நீங்களே விட்டுக்குங்க!"
> — சாயம் வெ. ராஜாராமன்

இரண்டு நாட்களாக வாட்டியெடுத்த காய்ச்சல் குறைந்ததில், பாரதி விளையாடிக் கொண்டிருந்தான். எழுந்து போய் வாசல் விளக்கைப் போட்டாள்.

'சுந்தர் வந்தவுடன் இந்த சந்தோஷச் செய்தியை எப்படிச் சொல்வது?'

கதவு திறந்து உள் நுழையும் போதே சொல்லி விடுவோமா...?

உள்ளே வந்ததும் பின்னாலிருந்து கட்டிக் கொண்டு, கழுத்தருகே தலை சாய்த்து... காதோரம் கிசுகிசுப்பாய்....

கலெக்ஷனுக்காய் அலைந்து திரிந்து வந்திருந்தால்... நிறைய நேரம் பேச முடியாது. கேட்கிற மனநிலையும் சுந்தருக்கு இருக்காது.

சரி... கை, கால் கழுவிட்டு... டீ குடிச்சிட்டு உட்கார்ந்த பிறகு சொல்வோமா...?

வேண்டாம்... இருக்கவே இருக்கிறது நமக்கான நேரம். இரவு. பாரதியும் தூங்கிய பிறகு நிதானமாக அவன் மடியில் படுத்துக் கொண்டு, இதைச் சொன்னால்.... எப்படி

யெல்லாம் பூரித்துப் போவான்..?

அய்யோ... போதும் இந்தக் கற்பனைகள். திட்டமிடும் எதுவுமே மாறிப் போகிறது. அந்த நேரத்தில் எப்படித் தோணுதோ... அப்படியே சொல்லிக்கலாம். 'பேசாம இரு..' மனசை அடக்கினாள்.

கஞ்சி கொடுத்துக் கொண்டிருந்தாள் குழந்தைக்கு. காலையிலிருந்த உற்சாகம் முகத்தில் சற்றே குறைந்திருந்தது. கடிகார ஓசை மணி எட்டு என்றது.

வாசலில் கதவு திறக்கும் சப்தம். பாரதியையும் தூக்கிக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்தாள்.

சுந்தர் கதவைத் திறந்தான். கூடவே அவனது நண்பன் குமரேசன்.



"வாடா... உள்ளே..!"

சுந்தரை ஒட்டிக் கொண்டே உள்ளே வந்தான் குமரேசன்.

"என்ன சிஸ்டர்... சௌக்கியமா...?"

அஞ்சலியைப் பார்த்து குமரேசன் கேட்க, "ம்ம்.... சௌக்கியம் தான்!" பதில் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

போச்சு... குமரேசனோடு பேச ஆரம்பித்து விட்டால் சுந்தருக்கு நேரம் போவதே தெரியாது. இருவரும் பள்ளிக் கூடத்தில் படிக்கிற நாட்களிலிருந்தே நண்பர்கள். வீட்டை, சுற்றுப்புறத்தை எல்லாவற்றையும் மறந்து... தனி உலகத்தில் பேசிக் கொண்டிருப்பார்கள்.

அஞ்சலிக்கு வேலையேதுமில்லை என்றால், அவளும் கூட இவர்கள் பேசுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்பாள்.

இருவருக்கும் டீ போட்டுக் கொடுத்தாள்.

"அஞ்சலி... குமரேசனுக்கும் சேர்த்து டிபன் செஞ்சிடு...!" டீ குடித்துக் கொண்டே சொன்னான் சுந்தர்.

எதுவும் சொல்லாமல் சமையலறைக்குள் வந்து, டிபன் வேலைகளுக்குள் தீவிரமானாள் அஞ்சலி.

இருவரும் கலகலவென்று சிரிப்பது கேட்டது.

'உடம்புக்கு முடியாமலிருந்த குழந்தைக்கு இப்ப எப்படி இருக்கு?' என்று கேட்கக் கூடத் தோன்றாமல் அப்படியென்ன பேச்சு... சிரிப்பு...!'

வெங்காயம் அரிந்து கொண்டிருந்தாள்.

தொட்டிலில் குழந்தையின் அழுகுரல்.

"ஏங்க... பாரதி அழுறான். என்னான்னு பாருங்க!" சமையலறையிலிருந்தே குரல் கொடுத்தாள்.

"இங்க ரொம்ப முக்கியமான விஷயம் பேசிட்டு இருக்கேம்பா. நீயே போய்ப் பாரு!" தாமதமில்லாமல் உடன் பதில்.

கையைக் கழுவிக் கொண்டு போய், தொட்டிலை ஆட்டினாள்.

'ஹா...ஹா...ஹா...' வெடித்துக் கொண்டு கிளம்பும் சிரிப்பொலி.

"ஏங்க... பையன் தூங்குறான். கொஞ்சம் மெதுவா..." என்றபடி வந்து விட்டாள்.

சுந்தர் திரும்பி முறைத்ததைக் கூட கவனிக்கவில்லை.

எல்லோரும் டிபன் சாப்பிட்டு முடிக்க, குமரேசன் "வர்றேங்க..." என்று கிளம்பிப் போகவும்... இரவு மணி ஒன்பதரை ஆயிற்று.

அஞ்சலிக்கு இன்னும் வேலை ஓயவில்லை. பாத்திரங்களை இப்போதே கழுவி விட்டால் தான், காலையில் எழுந்து கிளம்புவதற்குச் சரியாயிருக்கும்.

பெட்ரூம் பக்கம் எட்டிப் பார்த்தாள். சுந்தர் என்னவோ எழுதிக் கொண்டிருப்பது தெரிந்தது.

'இதோ...பத்தே நிமிடம்... வந்து விடுகிறேன்.... காலையிலிருந்தே மனசுக்குள் அலை புரண்டோடுகிற சந்தோஷத்தை உன்னிடம் சொல்ல வேண்டுமென்று அடக்கி வைத்திருப்பது, இதோ... இப்போது கரையுடைத்துக் கொண்டு உன்னை நனைக்கப் போகிறது.'

அவசர அவசரமாகத் தேய்த்து முடித்தாள். கை நிறையத் தண்ணீரை அள்ளி முகத்தில் அறைந்தாள். உடம்பே சிலிர்த்தது. முந்தானையால் துடைத்துக் கொண்டே, ஆசை ஆசையாக பெட்ரூம் வந்தாள்.

பூனைக்குட்டியைப் போல் உடம்பைக் குறுக்கிக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான் சுந்தர்.

(தொடரும்)



சிவகாமியின் சபதம்

முன் கதைச் சுருக்கம்

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மகேந்திர பல்லவர் பல்வேறு கலைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்கி, அதனால் நாட்டின் பாதுகாப்பைக் கவனியாமல் இருந்தார். இதைத் தெரிந்து கொண்டு மாபெரும் சேனையுடன் படையெடுத்து வந்தான் சளுக்க சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி வாதாபி புலிகேசி. அவன் வழியில் எங்கும் தங்காமல் நேரே வந்திருந்தால், காஞ்சிக் கோட்டை மிக எளிதாக அவன் வசப்பட்டிருக்கும். அதைத்தான் புலிகேசியின் ஒற்றனும் புத்த பிக்ஷுவுமான நாகநந்தி விரும்பி, செய்தியும் அனுப்பினார்.

ஆனால், நாகநந்தியின் சூழ்ச்சிகளுக்கு எதிர்சூழ்ச்சிகள் பல செய்து, வடபெண்ணைக் கரையிலேயே புலிகேசியைப் பல காலம் தாமதிக்கச் செய்தார் மகேந்திரர். இதற்கிடையில் தமது மகன் மாமல்ல நரசிம்ம பல்லவனையும் தளபதி பரஞ்சோதியையும் ஊக்குவித்துக் காஞ்சிக் கோட்டையைப் பலப்படுத்தினார்.

வீர மாமல்ல நரசிம்மனுக்கும், சிற்பி மகளும் ஆடலரசியுமான சிவகாமிக்கும் இடையில் காதல் மலர்ந்து, நாளுக்கு நாள் வலுப்பெற்று அசைக்க முடியாததாயிற்று.

இதே நேரத்தில் நாகநந்தி பிக்ஷு சிவகாமியின் கலைத்திறன் மீது மோகம் கொண்டவராக, மாமல்லனைக் கொன்று விடவும் முயற்சி செய்தார். மண்டபப்பட்டு என்ற கிராமத்தில் நடந்த அந்த முயற்சி மகேந்திர பல்லவரின் ஒற்றர்களின் திறமை காரணமாகவும் தெய்வ அருளாலும் தோல்வி அடைந்தது. மகேந்திர பல்லவர் 'நாட்டின் எதிர்காலத்தை உத்தேசித்து, சிவகாமி தன் காதலைத் தியாகம் செய்து மாமல்லனை விட்டுக் கொடுக்க வேண்டும்' என்று கோரினார். சிவகாமி உறுதியாக இருக்க, மகேந்திரர் வெட்கத்தோடும் வேதனையோடும் திரும்பினார்.

வடபெண்ணைக் கரையிலிருந்து பின்வாங்கிய பல்லவ சேனை, காஞ்சிக் கோட்டைக்குள் புக, காஞ்சி முற்றுகை தொடங்

அமரர் கல்கி

கியது. அதேசமயம் இதுநாள்வரை தமது ராஜதந்திரத்தின் ஓர் அம்சமாக வெளியே உலவ விட்டிருந்த நாகநந்தியைக் கைது செய்து சிறையில் அடைத்தார் மகேந்திரர்.

பல காலம் முற்றுகை நடத்தியும் புலிகேசியால் காஞ்சிக் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. இதற்கிடையில் அவனது சேனையும் போதிய உணவின்றிச் சோர்வடையவே சமாதானத் தூது அனுப்பினான். அவனை நம்பி, கோட்டைக்குள் வரவேற்று, ராஜோபசாரம் செய்தார் மகேந்திரர். புலிகேசிக்கு முன் ராஜசபையில் நடனமாட சிவகாமியைத் தருவித்தார்.

சிவகாமியின் அழகும், அவளுக்கும் அவள் தகப்பனார் ஆயனர் சிற்பிக்கும் காண்பிக்கப்படும் மரியாதையும் புலிகேசியைப் பிரமிக்க வைத்தன. மகேந்திர பல்லவர் ஒரு பலவீனமான கணத்தில் புலிகேசியிடம் தன் ஒற்றாடல்களைப் பற்றியெல்லாம் கூற, தான் இவ்வளவு காலம் ஏமாந்ததை எண்ணித் தீராத ஆத்திரம் கொண்டான் சளுக்க மன்னன். நாகநந்தி யாரென்று தெரிந்தும் அவரைச் சிறை வைத்திருந்த மகேந்திரரின் துணிச்சல் புலிகேசியை மேலும் ஆத்திரப்படுத்தியது.

காஞ்சியிலிருந்து விடைபெற்று வாதாபி திரும்பும் நேரத்தில், யாரும் எதிர்பாராத விதமாக, பல்லவ கலைச் செல்வங்களையெல்லாம் அழிக்கும்படியும் சிற்பிகளை அங்கஹீனப்படுத்தும்படியும் பெண்களைச் சிறைப்பிடிக்கும்படியும் தன் படைகளுக்குக் கட்டளையிட்டான் சளுக்கன்.

புலிகேசிக்கும் நாகநந்திக்கும் இடையே உருவ ஒற்றுமை இருப்பதை உணர்ந்த மகேந்திரர் இத் தருணத்தில் நாகநந்தியை விடுவித்தார். புலிகேசியுடையதைப் போன்ற ஆடை ஆபரணங்களை அவருக்குக் கொடுத்தார். காஞ்சிக் கோட்டையின் பாதுகாப்பிலிருந்து தப்பித்து வெளியே வந்திருந்த ஆயனரும் சிவகாமியும் சளுக்க வீரர்களிடம் சிக்கிக் கொண்டு தவித்த நேரத்தில், கலைக் காதலரான நாகநந்தி உதவினார். ஆயனரின் உயிர் காப்பாற்றப்பட்டது. ஆனால் சிவகாமி கைப்பற்றப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதை அவர் தடுக்கவில்லை.

புலிகேசி சிநேகத் துரோகம் செய்துவிட்டதை அறிந்து மகேந்திரர் உத்வேகத்துடன் சளுக்கர் படைகளை ஒழிக்கப் புறப்பட்டார். இதற்கிடையே பாண்டியனைப் புறங்காணச் செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த மாமல்லருக்கும் பரஞ்சோதிக்கும் இச்செய்தி எட்ட, இருவரும் மகேந்திர பல்லவருக்கு உதவப் படைகளுடன் விரைந்தனர். புலிகேசியும் சளுக்க வீரர்களும் விரட்டப்பட்டனர். ஆனால் புலிகேசி வீசிய விஷம் தோய்ந்த கத்தி மகேந்திரரை நினைவிழக்கச் செய்தது.

சிவகாமியைச் சளுக்க வீரர்கள் கைப்பற்றிச் சென்று விட்டதாக ஆயனரிடமிருந்து அறிந்த மாமல்லர், அவள் நிச்சயம் உயிரை விட்டிருப்பாள் என்று முடிவு செய்தார். மகேந்திரவர்மரின் உடல் நிலையோ கவலைக்கிடமாக இருந்தது. எப்படியும் வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று சளுக்கர்களைப் பழிக்குப் பழி வாங்குவது என்ற தீர்மானம் மட்டுமே மாமல்லருக்கு வாழ்க்கையில் பிடிப்பைக் கொடுத்தது.

சிவகாமியைப் பற்றிய நினைவுகள் வாட்ட, ஆயனருடன் அவளைப் பற்றி மனம் விட்டுப் பேசும் நோக்குடன் புறப்பட்டார் மாமல்லர். சிவகாமியும் தாமும் பேசி மகிழ்ந்த தாமரைக் குளக்கரையைப் பார்க்க எண்ணி அதன் வழியே போனார். அப்போது எதிர்ப்பட்ட ஒரு பெண் அவரைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவளை எங்கோ பார்த்த ஞாபகம் மாமல்லருக்கு இருந்தது...

முப்பத்து ஐந்தாம் அத்தியாயம்

கலங்கிய குளம்

ஆஹா! அந்தப் பழைய தாமரைத் தடாகம் தானா இது? சிவகாமியும் தானும் எத்தனையோ இன்பமான தினங்களைக் கழித்த குளக்கரை தானா இது?

ஆம்; அதுதான். ஆனால் அதன் தோற்றம் இப்போது அடியோடு

மாறிப் போயிருந்தது. மாமல்லரின் மனம் அடைந்திருந்த நிலையை அந்தத் தாமரைக்குளம் நன்கு பிரதிபலித்தது.

பளிங்குபோல் தெளிந்த தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்த தடாகத்தில் இப்போது பெரும் பகுதி சேறாயிருந்தது. காண்போர் கண்களையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்து பரவசப்படுத்திய செந்தாமரை மலர்கள், குவிந்த மொட்டுக்கள், பச்சை வர்ணக் குடைகள் போல் கவிந்து படர்ந்திருந்த இலைகள் - இவை ஒன்றும் இப்போது இல்லை. யானைகளின் காலினால் சேற்றோடு சேர்த்து மிதிக்கப்பட்ட சில தாமரை இலைகள் காணப்பட்டன. வாடி வதங்கிய இலைகளையுடைய தாமரைக் கொடிகள் துவண்டும் உலர்ந்தும் கிடந்தன.

குளக்கரையில் தழைத்துச் செழித்திருந்த விருட்சங்களின் கிளைகள் முறிக்கப்பட்டுப் பாதி மொட்டையாகக் காணப்பட்டன.

ஆ! அந்த விசுப்பலகை! அதுவும் பாதியில் முறிந்து ஒரு பகுதி தரையில் துகள் துகளாய்க் கிடந்தது. இன்னொரு பாதி அப்படியே பிளந்த முனைகளுடன் நின்றது.

இருதயம் உடைந்த மாமல்லர் அந்தப் பிளந்த விசுப்பலகையின் மேல் உட்கார்ந்தார். சுற்று முற்றும் பார்த்தார். பழைய ஞாபகங்கள் ஒன்றையொன்று தள்ளிக் கொண்டு போட்டியிட்டுக் கொண்டு வந்தன.

வசந்த காலத்தில், வனத்திலுள்ள மரங்களெல்லாம் புதுத் தளிர்களும் புஷ்பங்களுமாய்க் குலுங்கிக் கொண்டிருந்த நாட்களில், எத்தனையோ தடவை சிவகாமியைத் தேடிக் கொண்டு அவர் அங்கு வந்ததுண்டு. கானகத்துப் பட்சிகள் கலகலவென்று சப்தித்துக் கொண்டிருந்த நேரங்களில், அவரும் சிவகாமியும் அதே விசுப்பலகையில் உட்கார்ந்து, கண்களோடு கண்களும் கரங்களோடு கரங்களும் இருதயத்தோடு இருதயமும் பேசும்படி விட்டு, வாய் மூடி மௌனிகளாய் நேரம் போவது தெரியாமல் இருந்ததுண்டு.

கீழ் வான முகட்டில் பச்சை மரங்களுக்கிடையே பொற் குடத்தைப் போல் பூரண சந்திரன் உதயமாகும் போது, அந்த முழுமதியையும் சிவகாமியின் முகத்தையும் மாமல்லர் எத்தனை தடவை ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்!

தாமரைக் குளத்திலே ததும்பிய தெளிந்த நீரின் விளிம்பிலே நின்று, மேலே தோன்றிய சிவகாமியின் உண்மை உருவத்தையும் தண்ணீரிலே தெரிந்த அவளுடைய பிரதி பிம்பத்தையும் மாறி மாறிப் பார்த்து மகிழ்ந்தது எத்தனையோ நாள்!

இம்மாதிரி ஞாபகங்கள் எல்லாம் மாமல்லருக்கு ஆரம்பத்தில் இன்பத்தையளித்தன. ஆனால் இடையிடையே, "இனிமேல் அந்த மாதிரி அனுபவங்கள் நமக்குக் கிட்டப் போவதே இல்லை" என்ற நினைவு வந்ததும் மனத்தில் கொடிய வேதனை உண்டாயிற்று. இனிமேல் பொறுக்க முடியாது என்ற மனோநிலை ஏற்பட்டதும் மாமல்லர் குதித்து எழுந்தார். விரைந்து சென்று குதிரை மீது தாவி ஏறி ஆயனர் வீட்டை நோக்கிச் செலுத்தினார்.

காஞ்சியிலிருந்து புறப்பட்ட சமயம் அவர் மனத்திலிருந்த அமைதி இப்போது இல்லை. அமைதிக்குப் பதிலாக இப்போது கோபமும் ஆத்திரமும் அவர் மனத்தில் குடிகொண்டிருந்தன. சிவகாமியைக் கொள்ளை கொண்டு போன சளுக்கப் பகைவர்கள் மீது குரோதம் எழுந்தது.

மூடத்தனத்தினால் சிவகாமியைப் பறி கொடுத்த ஆயனர் மீது கோபம் கோபமாக வந்தது.

புத்த பிக்ஷுவின் மீது இன்னதென்று விவரமாகாத சந்தேகமும் கோபமும்

ஏற்பட்டன. ஆ! அந்தப் பாஷாண்டியினிடம் அவருக்கு எப்போதுமே நல்ல அபிப்பிராயம் கிடையாது. பிக்ஷு மனம் வைத்திருந்தால் சிவகாமியைக் காப்பாற்றியிருக்கலாமல்லவா? ஏன் காப்பாற்றவில்லை? ஏன் ஆயனரிடம் செய்தி ஒன்றும் சொல்லவில்லை? பிக்ஷு என்ன ஆனார்? எப்படி மாயமாய் மறைந்தார்?

சிவகாமியின் அரங்கேற்றம் தடைப்பட்ட அன்றிரவு இராஜ விஹாரத்தின் அருகில் புத்த பிக்ஷுவைச் சுட்டிக் காட்டிச் சக்கரவர்த்தி தமக்கு எச்சரித்தது மாமல்லருக்கு நேற்று நடந்தது போல் ஞாபகம் வந்தது.

உடனே, கோபம் தந்தையின் பேரிலேயே திரும்பிற்று. மகேந்திர பல்லவரின் மந்திர தந்திரங்கள், சூழ்ச்சிகள், வேஷங்கள் - இவற்றினாலேதான் பல்லவ இராஜ்யம் இன்றைக்கு இந்தக் கதியை அடைந்திருக்கிறது! தாமும் சிவகாமியை இழக்கும்படி நேரிட்டிருக்கிறது!

திடீரென்று ஒரு விபரீதமான சந்தேகம் மாமல்லரின் உள்ளத்தில் உதித்தது.

ஒருவேளை சிவகாமி சிறைப்படும் வண்ணம் சூழ்ச்சி செய்தவர் மகேந்திர பல்லவர்தானோ? இல்லாவிடில் எதற்காகத் தன்னைப் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டு, மண்டபப்பட்டு கிராமத்திலிருந்து சிவகாமியைத் தருவிக்கிறார்? எதற்காக அரண்மனைத் தோட்டத்தில் ஒரு சுரங்க வழியை ஏற்படுத்தி அதைக் கண்ணபிரானின் மனைவிக்குத் தெரியும்படி செய்திருக்கிறார்.

ஒருவேளை அந்தப் பெண் கமலி கூடச் சக்கரவர்த்தியின் சதிக்கு உடந்தையாயிருந்திருப்பாளோ? எல்லாரும் சேர்ந்து தன்னை இப்படி வஞ்சித்து விட்டார்களோ! ஆஹா! இது என்ன சதிகார உலகம்? துரோகமும், தீவினையும் நிறைந்த சதிகார உலகம்!

இத்தகைய மனோநிலையில் மாமல்லர், ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தார். சிவகாமி சிறைப்பட்டது சம்பந்தமாக மர்மமாகவும், விளங்காமலும் இருந்த சில விஷயங்களை ஆயனரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அவர் விரும்பினார். வீட்டு வாசலுக்குச் சற்றுத் தூரத்திலேயே குதிரையை நிறுத்தி விட்டுத் தாமும் சற்று அங்கேயே நின்று மனத்தை அமைதிப் படுத்திக் கொண்டார். பிறகு சாவதானமாக நடந்து வந்து ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்.

வீட்டுக்குள்ளே பேச்சுக் குரல் கேட்டது அவருக்குச் சிறிது வியப்பையளித்தது. ஆயனர் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்?

உள்ளே சிற்ப மண்டபத்தில் ஆயனருக்கு அருகில் உட்கார்ந்திருந்த மனிதனைப் பார்த்ததும் மாமல்லருடைய வியப்பு அளவு கடந்தது. அந்த மனிதன் ஒற்றர் தலைவன் சத்ருக்னன் தான்!

சத்ருக்னனை அங்கே கண்டதுகூட மாமல்லருக்கு அவ்வளவு வியப்பளிக்கவில்லை. சத்ருக்னனுடைய முகத்தைப் பார்த்ததும் பளிச்சென்று இன்னொரு முகம் ஞாபகத்துக்கு வந்தது. அப்படி ஞாபகத்துக்கு வந்த முகம் சற்று முன்னால் காட்டுப் பாதையில் அவர் பார்த்த பெண்ணின் முகமேதான்!

என்ன அதிசயமான ஒற்றுமை? ஒருவேளை சத்ருக்னனுடைய தங்கை அல்லது தமக்கையோ அவள்? அல்லது ஒருவேளை இவனே...? சந்தேகம் தோன்றிய ஒரு கணத்திற்குள்ளேயே அது தீர்ந்து விட்டது. சத்ருக்னனுக்கு அருகில் ஒரு சேலையும் மற்றும் ஸ்திரீகளுக்குரிய சில ஆபரணங்களும் கிடந்ததை நரசிம்ம பல்லவர் பார்த்தார்.


‘ஆஹா! இது
என்ன சதிகார
உலகம்?
துரோகமும்,
தீவினையும்
நிறைந்த சதிகார
உலகம்!’

முப்பத்து ஆறாம் அத்தியாயம்

சத்ருக்னன் வரலாறு

வாசற்படியில் மாமல்லர் வந்து நின்றதைச் சத்ருக்னனும் ஆயனரும் கவனிக்கவில்லை. அவ்வளவுக்குத் தங்களுடைய பேச்சில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள்.

மண்டபத்துக்குள்ளே மாமல்லர் பிரவேசித்ததும் இருவரும் ஏக காலத்தில் நிமிர்ந்து பார்த்தார்கள். சத்ருக்னன் சட்டென்று எழுந்து நின்று, "பிரபு!" என்றான். மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் அவன் திகைத்தான்.

ஆயனரோ முகத்தில் உற்சாகமும் குதூகலமும் ததும்ப சாய்ந்து படுத்திருந்தவர் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து "பிரபு! வாருங்கள்! வாருங்கள்! தங்களைத்தான் இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன். சத்ருக்னன் நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறான். குழந்தை சிவகாமி உயிரோடு சௌக்கியமாயிருக்கிறாளாம்!" என்றார்.

இதைக் கேட்ட மாமல்லரின் தலை சுழல்வது போலிருந்தது.

ஆயனருக்கு அருகில் வந்து நின்று சத்ருக்னனை ஏறிட்டுப் பார்த்த வண்ணம், "சத்ருக்னா! இது உண்மைதானா?" என்று கேட்டார்.

"ஆம் பிரபு! உண்மைதான்!" என்று சத்ருக்னன் கூறிவிட்டுக் கைகூப்பிய வண்ணம், "பல்லவ குமாரா! சற்று முன்பு காட்டுப் பாதையில் தங்களைக் கண்ட போது பேசாமல் வந்துவிட்டேன். அதற்காக மன்னிக்க வேண்டும். திடீரென்று தங்களைப் பார்த்ததும் பேசக் கூச்சமாயிருந்தது!" என்று பணிந்த குரலில் கூறினான்.

"அந்தப் பெண் நீதானா? நல்ல வேஷம்!" என்றார் மாமல்லர்.

"ஆமாம், நானுங்கூடச் சற்று முன்பு திகைத்துப் போய்விட்டேன். பெண் பிள்ளை வேஷம் எவ்வளவு நன்றாய் இவனுக்குப் பலித்திருக்கிறது? சக்கரவர்த்தி ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு பொருத்தமாய் ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்?" என்றார் ஆயனர்.

மாமல்லர் மெல்லிய குரலில், "சக்கரவர்த்தியின் சாமர்த்தியத்தை நீங்கள்தான் மெச்சிக் கொள்ள வேண்டும்!" என்று முணுமுணுத்துக் கொண்டார். பிறகு, சத்ருக்னனைப் பார்த்து, "எதற்காக ஸ்திரீ வேஷம் போட்டாய்?" என்று கேட்டார்.

"சத்ருக்னன் அந்த வேஷம் போட்டதனால்தான் சிவகாமியைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது. தயவு செய்து உட்காருங்கள். சத்ருக்னன் எல்லாம் விவரமாய்ச் சொல்லட்டும். நானும் இன்னொரு முறை கேட்டுக் கொள்கிறேன்" என்றார் ஆயனர்.

மாமல்லர் உட்கார்ந்தார். சத்ருக்னனும் உட்கார்ந்து தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான். அந்த வரலாறு இதுதான்:

"ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளியே போய்விட்டார்கள் என்று தெரிந்ததும் சக்கரவர்த்திக்கு இடி விழுந்தது போலாகிவிட்டது. உடனே தாமும் கோட்டைக்கு வெளியே போகத் தீர்மானித்துப் படைகளை ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார். பிறகு என்னைத் தனியாகக் கூப்பிட்டு, "சத்ருக்னா! நீ இதுவரையில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எத்தனையோ சேவைகள் செய்திருக்கிறாய். ஆனால், அவை எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமான சேவை இப்போது செய்ய வேண்டும். மாமல்லன் மட்டும் இப்போது இங்கிருந்தால் நானே அந்த வேலையை மேற்கொள்வேன். பல்லவ குலத்தின் மானத்தைக் காப்பதற்காக நான் இப்போது போருக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது. சிவகாமியைக் கண்டுபிடித்து அவளைத் திருப்பிக்



கொண்டு வரும் வேலையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். சிவகாமியை மீட்டுக் கொண்டு வர முடியாவிட்டால் அவளைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். இதைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். 'பிரபு! சிவகாமி அம்மை சளுக்கரிடம் சிறைப்பட்டிருந்தால் தன்னந்தனியாக நான் என்ன செய்வேன்?' என்றேன். 'கஷ்டமான காரியமானபடியால்தான் உன்னிடம் ஒப்படைக்கிறேன், சத்ருக்னா! நீ இதுவரை எத்தனையோ வேஷங்கள் போட்டிருக்கிறாய். அவை எல்லாவற்றையும் விட உனக்கு நன்றாகப் பலிக்கக்கூடிய வேஷம் ஒன்று இருக்கிறது. அது பெண் வேஷந்தான்!' என்றார். சக்கரவர்த்தியின் கருத்தை நான் உடனே தெரிந்துகொண்டேன். சற்றுமுன் பார்த்தீர்களே! அம்மாதிரி வேஷம் தரித்துக் கொண்டு காஞ்சியை விட்டுக் கிளம்பி முதலில் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

"நான் வரும் சமயத்திலேதான் இவரை ஸ்மரணையற்ற நிலையில் இந்த வீட்டுக்குள்ளே கொண்டு வந்தார்கள். இவரோடு சிவகாமி தேவி வரவில்லை. எனவே, தேவி சளுக்கரிடம் சிறைப்பட்டுத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டேன். காஞ்சிக் கோட்டையைச் சுற்றிச் சென்றேன். சளுக்க ராட்சதர்களின் கூக்குரல் கேட்ட இடங்களிலெல்லாம் மறைந்திருந்து கவனித்தேன். கடைசியில் காஞ்சிக்கு வடமேற்கே ஒரு பெரிய சளுக்கர் படை வடதிசையை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அந்தப் பெருங்கும்பலுக்கு மத்தியிலிருந்து ஸ்திரீகள் புலம்பி அழும் சத்தம் வந்து கொண்டிருந்தது. இன்னும் அருகில் சென்று பார்த்தபோது, அவ்வாறு ஓலமிட்ட ஸ்திரீகள் நம் கிராமங்களில் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்களுக்கு நடுவே பல்லக்கு ஒன்றும் காணப்பட்டது. அதில் இருந்தவர் சிவகாமி தேவிதான் என்று தெரிந்து கொண்டேன்.

"சற்று நேரத்துக்கெல்லாம் நான் தலைவிரி கோலமாய் 'ஓ' என்று ஓலமிட்டுக் கொண்டு அந்தப் படையை நோக்கி ஓடினேன். பின்னால் என்னை யாரோ துரத்தி வருவது போலப் பாசாங்கு செய்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடினேன். சளுக்கர்கள், 'வந்தாயா? வா!' என்று பரிகாசக் குரலில் கூறிக் கொண்டு என்னை அழைத்துப் போய் மற்றச் சிறைப் பிடிக்கப்பட்ட பெண்களுடனே சேர்த்து விட்டார்கள். சற்று நேரம் மற்றப் பெண்களைப் போல் நானும் ஓலமிட்டுக் கொண்டிருந்தேன். பிறகு மெள்ள மெள்ளப் பல்லக்கை நெருங்கிச் சென்று அதிலிருப்பது சிவகாமி அம்மைதான் என்று உறுதிப்படுத்திக் கொண்டேன். சிவகாமியை அவ்வளவு மரியாதையுடன் அழைத்துப் போன காரணத்தையும் ஊகித்தறிந்தேன். அந்தச் சளுக்கர் படையின் தலைவனாகிய தளபதி சசாங்கன் சிவகாமி அம்மையைப் பத்திரமாய்க் கொண்டு போய் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் ஒப்புவித்துப் பல்லவ நாட்டின் சிறந்த கலைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு வந்ததற்காகப் பரிசு கேட்கப் போகிறான்! இந்த எண்ணத்தினால் எனக்கு ஒருவாறு மனநிம்மதி ஏற்பட்டது. சிவகாமி அம்மைக்கு உடனே தீங்கு எதுவும் நேராது என்று தைரியம் அடைந்தேன். ஆனால், சளுக்க ராட்சதப் படையால் சூழப்பட்ட சிவகாமியை அங்கிருந்து அப்புறப்படுத்தி அழைத்துச் செல்வது சாத்தியமான காரியமாகவே தோன்றவில்லை. எத்தனையோ உபாயங்கள் யோசித்து யோசித்துப் பயன்படாது என்று கைவிட்டேன்.

"இதற்கிடையில் எல்லாரும் வடதிசை நோக்கிப் போய்க் கொண்டேயிருந்தோம். வெள்ளாறு என்று வழங்கும் பொன்முகலியாற்றங்கரைக்குப் போய்த் தங்கினோம். இவ்விடத்தில் தளபதி சசாங்கன் பெருமனக் குழப்பத்தை அடைந்தவனாகக் காணப்பட்டான். அதன் காரணமும் சளுக்க வீரர்களின் சம்பாஷணைகளிலிருந்து தெரிந்து கொண்டேன். மணிமங்கலத்தில் வாதாபிச் சக்கரவர்த்திக்கும் மகேந்திர பல்லவருக்கும் நடந்த பெரும் போரைப் பற்றித் தூதர்கள் கொண்டு



அருள்வாக்கு



ஸமயானுஷ்டானங்களில் இப்போது நாம் இருக்கிற தசையில், நம் மதம் காட்டும் இரண்டு எக்ஸ்ட்ரீம்களில் பண்டிகைச் சாப்பாடு, பஜனைக்கூத்து, உருவ வழிபாடு இவற்றில் கிடைக்கிற ஆனந்தம், பட்டினியிலும் மௌனத்திலும், ஆத்ம த்யானத்திலும் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு பாவனையின் பேரிலும், 'இது பெரியவர்கள் காட்டும் வழியாச்சே' என்ற நம்பிக்கையின் பேரிலுந்தான் இப்போது நமக்குத் தெரியாதவையாக இருப்பவற்றுக்கான அனுஷ்டானத்தைப் பண்ண முடிகிறது. ஆனாலும் விடாமல் பண்ணினால் வாழ்க்கையில் 'மாடரேஷன்' வரும்.

இப்படி 'மாடரேஷனில்' (மிதம்) நன்றாகப் பழக்கப்பட்டு முதிர்ந்த நிலைமை, கனிந்த நிலைமை உண்டாகிறபோது, இப்போது எது நமக்குத் தெரியாததாக இருக்கிறதோ, இன்னொரு எக்ஸ்ட்ரீமாகத் தோன்றுகிறதோ, எதை நாம் ஏதோ ஒரு பாவனையின் பேரில் தான் கொஞ்சம் ஊகித்துப் பார்க்க மாத்திரமே முடிகிறதோ, அது - அதாவது பரமாத்மாவோடு ஏகமாக ஒன்றியிருக்கிற நிலை எக்ஸ்ட்ரீமாக இல்லாமல், ஸஹஜமான எக்ஸ்பீரியன்ஸாக ஆகிவிடும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

வந்த செய்திதான் காரணம். இந்தச் செய்தி தளபதி சசாங்கனுக்கு அவ்வளவு குழப்பம் ஏன் அளித்தது என்பதையும் நான் ஊகித்தறிந்தேன். வாதாபிச் சைனியத்தில் பெரும் பகுதியுடன் புலிகேசி முன்னால் சென்று விட்டதாகவும், இதற்குள்ளாக அவர் வடபெண்ணைக் கரையை அடைந்திருக்க வேண்டும் என்றும் சசாங்கன் எண்ணிக் கொண்டிருந்தான். இப்போது புலிகேசி தனக்குப் பின்னால் தங்கி மாமல்லபுரத்துக்குப் பக்கத்தில் மணிமங்கலத்தில் சண்டையிட்டதாகச் செய்தி வந்ததும் சசாங்கன் திகைத்தது இயற்கைதானே? சக்கரவர்த்தியைப் பின்னால் விட்டு விட்டுத் தான் முன்னால் ஓடி வந்தது பற்றி அவருக்குக் கோபமோ என்னவோ என்று சசாங்கன் ரொம்பவும் தவித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. பொன் முகலி ஆற்றங்கரைக்கு நாங்கள் வந்து சேர்ந்த மறுநாள் சசாங்கன் தன் சளுக்கப் படைகளுடன் தென்கரையில் இருந்து கொண்டு சிறைப்பிடித்த ஸ்திரீகளாகிய எங்களை மட்டும் அக்கரைக்கு அனுப்பினான். எங்களைக் காவல் புரிவதற்குச் சில சளுக்க வீரர்களை உடன் அனுப்பி வைத்தான்.

"அக்கரை சென்றதும், 'இது ஒரு நல்ல சந்தர்ப்பம்; சிவகாமி அம்மையை அழைத்துக் கொண்டு போய்ப் பக்கத்தில் காணப்படும் குன்றுகளிலே ஒளிந்து கொள்ளலாம். காவலர்கள் சிலர்தான் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமல் இரவு நேரத்தில் தப்பிச் செல்லலாம்' என்று தீர்மானித்தேன். அன்றிரவு, எல்லோரும் தூங்க யத்தனம் செய்த சமயத்தில் நான் சிவகாமி அம்மையின் அருகில் இருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டேன். மற்றப் பெண்கள் எல்லாரும் தூங்கிய பிறகு பிராகிருத பாஷையில் என்னை இன்னாளென்று தெரிவித்துக் கொண்டேன். சிவகாமி முதலில் பெரிதும் ஆச்சரியமடைந்தார். பிறகு, ஆயனரைப் பற்றிக் கேட்டார்; தங்களைப் பற்றியும் விசாரித்தார். ஆனால் தங்களைப் பற்றி எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை; தாங்கள் தெற்கேயிருந்து திரும்பி வந்த விவரமே தெரியாது. ஆகையால், ஆயனர் உயிர் பிழைத்திருக்கிறார் என்ற விவரத்தை மட்டும் சொன்னேன். பிறகு மெள்ள, மெள்ள என் யோசனையையும் தெரிவித்தேன். பிரபு! என்னுடைய ஏமாற்றத்தை என்னவென்று சொல்வேன்..."

(தொடரும்)

உ

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட்

பதிவு அலுவலகம் : ஸ்ரீ காமகோடி சங்கர மடம், காஞ்சிபுரம்.

நிர்வாக அலுவலகம் : 16, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

போன்: 24471936 / 24472540 E.Mail : prb@vsnl.com Website : http://personal.vsnl.com/knaw_trust



வேண்டுகோள்

- ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் 1986ல் இந்த டிரஸ்டை ஸ்தாபிக்க அருள்பாலித்தார்.
- தமிழ்நாட்டில் உள்ள பழைமையான கிராமக் கோவில்களில் பூஜை செய்யும், மாத வருமானம் ரூ.1500/-க்கும் குறைவாக உள்ள, அர்ச்சகர்களுக்கு மாத பண உதவி செய்வதற்காக
- பேரருளாளரின் ஆக்ஞைப்படி இந்த நற்பணிக்கு நன்கொடை அளிக்க வேண்டுகிறோம் - ரூ.4,000/-க்கு மேல் மாத மொத்த வருமானம் பெறுபவர்கள் தங்களது ஒரு மாத மொத்த வருமானத்தை *தங்கள் வாழ்நாளில் அவர்களுடைய சௌகர்யப்படி,* நன்கொடையாக கொடுத்து உதவ வேண்டும். மற்றவர்கள் தங்களால் இயன்றளவு கொடுக்கலாம்.
- நன்கொடைகளை க்ராஸ் செய்த காசோலை / டிமாண்ட் டிராப்டாக ***"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"*** என்ற பெயரில் சென்னையில் ஏதாவது ஒரு வங்கிக் கிளையில் பெறுமாறு நிர்வாக அலுவலகத்திற்கு அனுப்பவும்.
- தற்சமயம் இந்த டிரஸ்ட் 298* தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ச்சகர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ. 400/-ஐ வங்கிகள் மூலமாக வழங்கி வருகிறது. (*பட்டாச்சாரியார்கள் - 60, பூசாரிகள் - 122, சிவாச்சாரியார்கள் - 116) தவிர ஆயுள் குழுக் காப்பீடும் தகுதியின்படி செய்து வருகிறது.
- ஒவ்வொரு வருடமும் மாத உதவித் தொகையை உயர்த்துவதாலும், அர்ச்சகர்களின் எண்ணிக்கை உயர்வதாலும், முதலீடுகளின் பேரில் வட்டி விகிதம் மிக வேகமாக குறைந்து வருவதாலும், மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவசியமாகிறது. ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாக்ஞையின்படி தங்களுடைய நன்கொடைகளை அனுப்பித் தரவேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

C.V. Narasimhan, I.P.S., (Retd)
பொறுப்புக் குழுவின் சேர்மன்.

பொறுப்பாளர்கள் :

திரு. K.S. லோகவிநாயகம், முன்னாள் தலைமை பொறியாளர், தமிழ்நாடு
திரு. S. ரகுநாதன், வழக்கறிஞர், சென்னை.
திரு. M.D. கோபால், General Manager, Philips, G.S.C. Dubai.
திரு. பிரகாஷ் ரா. பட், கௌரவ செயலாளர் மற்றும் பொக்கிஷதாரர்.

பின் குறிப்பு

நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80 G- யின் கீழ் வரிவிலக்குண்டு. வெளிநாட்டு நன்கொடைகளை ஏற்க FCRA-ன் கீழ் (எண்: 075820173) பதிவு செய்யப்பட்டுள்ளது.



• நடிக்கும் மேன்ஷன்

"இந்த வாழ்க்கை போரடிக்கவேயில்லை!"

ஊரு விட்டு ஊரு வந்த பேச்சிலர்
மச்சி
சோறு தண்ணி கிடைக்கலேன்னு
சொல்லாதே மச்சி
குடிச்சிப் பாரு ஆச்சி மெஸ்சு
பில்டர் காஃபி
அடிச்சிப்பாரு அரசு மெஸ்சு
ஆப்பம் பாயா
ருசிச்சுப் பாரு ரத்னாபவன்
நெய்ரோஸ்ட்
ரசிச்சுத் தின்னு வசந்தவிஹார்
மசால் வடை
பிளாட் ஃபார்மில் கிடைக்குமடா
வெங்காய பஜ்ஜி
பிலால் கடை பிரியாணிக்கு
இருக்குதொரு
ரசிகர் கட்சி

— இப்படி நீயும் இந்தப் பாடலை எழுதி, அதைப் பாடியும் காட்டினார் ஒரு அறுசுவைக் கானா கவிஞர். திருச்சியிலிருந்து, சென்னைக்கு வந்து அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் முதலாண்டு படிக்கும் அந்த மாபெரும் படைப்பாளி கவிஞர் டிக்கு. இவரது இயற்பெயர் ரமேஷ் என்றாலும், நண்பர்கள் கேட்ட கணத்தில், இது போன்ற யதார்த்தவாத(?) கானா இலக்கியத்தைப் பொழிந்து தள்ளுவதால் இப்படியொரு பெயர் இவருக்கு. உணவகங்களின் பெயர்களை விலாவாரியாகச் சொல்லும் இந்த இளம் கவி, தங்கியிருப்பது 'பேச்சிலர் பாரடைஸ்' என்று வர்ணிக்கப்படும் திருவல்லிக்கேணி முருகேச நாயக்கர் மேன்ஷனில். டிக்கு நம்மை கானாவோடு சுழற்றி விட்டிருந்தால் பரவாயில்லை. திருவல்லிக்கேணியில் எப்படி அடைக்கலம் புகுந்தீர்கள் என்று தவறுதலாக அவரிடம் கேட்கப் போய், பெரிய பெரிய இலக்கிய சர்ச்சைகளைத் தோற்றுவிக்கக் கூடிய விஷயங்களையெல்லாம் சர்வ சாதாரணமாக அடுக்கினார்.

"திருவல்லிக்கேணிக்கும், கவிதைக்கும் சங்க காலம் தொட்டு பெரிய தொடர்பு உண்டு. தெய்வப் புலவன் திருவள்ளுவன் 'வெள்ளத் தனைய மலர் நீட்டம்' என்று பாடியது திருஅல்லிக்கேணியைப் பார்த்துத் தான்! மைலாப்பூரில் வசித்து வந்த திருவள்ளுவன் வாக்கிங் வந்து போன மெரீனா கடற்கரையை, தன்னகத்தே கொண்டது இந்தத் திருவல்லிக்கேணி.

அவனது கவிதா பரம்பரையில் தோன்றிய மகாகவி பாரதி, காவியக் கவிதைகளை இயற்றியது திருவல்லிக்கேணியில் தங்கி, வாழ்ந்தபோதுதான். அவ்வளவு ஏன், கவிதைக்காக சாகித்ய அகாடமி விருது



• பார்த்தசாரதி கோவில்



பெற்ற வல்லிக்கண்ணன் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பதும் இதே திருவல்லிக்கேணியில்தான். இவர்களின் பெருமைக்குரிய ஒரே வாரிசாக, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கும் கவிஞன் டிக்கு, வாழ்ந்து வருவதும் இந்தத் திருவல்லிக்கேணியில்தான்'' என்று மூச்சு வாங்கியபடி கவிஞர் சொல்லி முடித்ததும், அவரின் பிடறியில் மடார் என்ற ஓசையுடன் ஒரு குத்து இறங்கியது; ''ஆ...அம்மா'' என்று அலறியபடி திரும்பிய கவிஞரை அன்பாகத் தாக்



• நவீன மேன்ஷன்

கியவர், அதே மேன்ஷனில் தங்கி, படித்து வரும் மூன்றாமாண்டு சட்டக் கல்லூரி மாணவர் குடியாத்தம் சரவணன்.



• சட்டக்கல்லூரி சிங்கங்கள்

"கேடு கெட்ட கவியே! வள்ளுவனுக்கும், பாரதிக்கும் வாரிசாக வருகிற முகம் இப்படியா இருளடைந்து கிடக்கும்! வாழ் நாளில் கண்ணாடியை ஒருமுறையாவது பார்த்திருக்கிறாயா? என்னைப் பார்! இரண்டாயிரத்து முப்பதில் பாரதத்தின் பிரதமராகப் போகிறேன். எத்தனை தகுதியான முகம்'' என்றதும் ''ஓ...ஹோ!'' என்று உற்சாகமாக அங்கே ஓடி வந்து கூட்டமாக 'ஓ...' போட்ட ரியாஸ் அகமது, ரமேஷ் குமார், ஸ்ரீராஜ், பிரகாஷ், கோபிநந்து, அறிவு, மணிபாரதி, திருச்செங்கோடு



• வாலாஜா பெரிய மசூதி


செந்தில் (இவரது ஒரே லட்சியம் முதல்வர் ஆவது!), ராஜேந்திர பிரசாத், துறையூர் ஜெய், பிரவீன், பாரி, சிவா, பத்மநாபன் ஆகிய அத்தனை பேரும் சட்டக் கல்லூரி மாணவர்கள்.

''எங்களை வெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் என்று சொல்வதை வெறுக்கிறோம். சமூக அவலங்களுக்குச் சாட்டையடி கொடுக்கும் சிங்கங்கள் என்பதையே ஏற்கிறோம்'' என்று குரல் கொடுத்தவர்களை அமைதிப்படுத்தி, மேன்ஷன் வாழ்க்கை பற்றி கேட்டோம். அந்தக் கதை அடுத்த பாராவில்.

''மற்ற மேன்ஷன்களைப் பற்றி எங்களுக்குத் தெரியாது சார், எங்க மேன்ஷனைச் சுத்தி ஏகப்பட்ட மரங்கள். படிக்கிறதுக்கு இதைவிட நல்ல சூழ்நிலை கிடைக்காது. படு பயங்கரமான தண்ணீர் பஞ்சத்துலேயும், இங்கே தண்ணீர் இருந்துகிட்டே இருக்கும்'' என்றார் திருச்சி மாணவர் ரியாஸ் அகமது. திருவல்லிக்கேணியில் இருநூற்று அறுபது அறைகளைக் கொண்ட மிகப் பெரிய மேன்ஷன் இதுதான். ஆனால் இப்போது எழுபது அறைகளில் மட்டுமே பாச்சிலர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இந்த மேன்ஷனில் தங்கியிருக்கும் அத்தனை பேரும் மாணவர்கள். புதிய மேன்ஷன்கள் பெருகி விட்டதால், முருகேச நாயக்கர் மேன்ஷனுக்கு வருமானம் குறைந்து போய், சினிமாவில் நடிக்கத் தொடங்கி விட்டது. 'மகாநதி' படத்தின் பெரும் பகுதி, இங்கே எடுக்கப்பட, கமலைத் தொடர்ந்து, 'காதல் மன்னன்', 'பூவே உனக்காக', 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்', 'பத்ரி' 'ஜெயா' இப்போது ஷங்கரின் 'பாய்ஸ்' என்று ஒரு டஜன் படங்களை இங்கே எடுத்திருக்கிறார்கள். ''இங்கே எடுக்கப்பட்ட எல்லாப் படங்களுமே சூப்பர் ஹிட் ஆகிவிட்டதில் செண்டிமெண்ட் மேன்ஷனாகிவிட்டது'' என்கிறார் இங்கே வந்து பாச்சிலராகத் தங்கியிருக்கும் மேன்ஷன் ஊழியரான சுந்தரம்.

நடுராத்திரியில் எழுப்பி அறை வேண்டும் என்று கேட்டால் கூட, இரண்டு மாத வாடகையை முன்பணமாக வாங்கிக் கொண்டு, இது போன்ற மேன்ஷன்களில் உடனடியாக அறை ஒதுக்கித் தருகிறார்கள். இதனால் வெளியூரிலிருந்து வேலை தேடியும், கல்வி கற்கவும் வரும் இளம் பாச்சிலர்களுக்கு, உடனடி வேடந்தாங்கலாக மாறிவிட்டது. திருவல்லிக்கேணியில் நிறைய கெஸ்ட்-ஹவுஸ்கள் முளைத்து விட்டாலும், மேன்ஷன் தொழில் இங்கேயொரு இண்டஸ்ட்ரியாகவே வளர்ந்து விட்டது.

விநாயகர் மேன்ஷனில் வசித்து வரும் அறுபது வயது பாச்சிலரான ஜெகதீசன், ''திருவல்லிக்கேணி உணவகங்களில் இப்போது தரம் குறைந்துவிட்டது'' என்கிறார். ''முன்பு 'சைடோஜி மெஸ்' என்ற பழைமையான மெஸ் இருந்தது. ஹோட்டலில் சாப்பிடுகிறோம் என்ற உணர்வே வராது. அப்படியொரு தரமும் உபசரிப்பும் இருந்தது. இப்போது 'ரெத்னாபவன்' தவிர இது போன்ற பழைய உணவகங்களை மூடிவிட்டார்கள்'' என்றவர், தமது இருபத்திரண்டு வருட மேன்ஷன் வாழ்க்கையை விவரிக்கிறார்.



• ஜெகதீசன்




• சுந்தரம்

''மன்னார்குடிதான் எனக்குச் சொந்த ஊர். சென்னைப் பல்கலை கழகத்தின் நிர்வாகத்துறையில் செக்ஷன் ஆபீசராக வேலை கிடைத்து சென்னைக்கு வந்தேன். இந்த மேன்ஷனில் எண்பது ரூபாய் மாத வாடகையில் சிங்கிள் ரூம் கிடைத்தது. சென்னையில் வேலை கிடைத்து வருபவர்களுக்கு, குறைந்த வாடகையில் சகல வசதிகளோடும் தங்கும் இடம் ஒன்று இருக்க வேண்டும், என்று விரும்பிய செல்வந்தர் சண்முக முதலியார் இதைக் கட்டினாராம். எண்பது ரூபாய் வாடகை, இன்று இருநூற்று ஐம்பது ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆனால் அன்று முதல் இன்று வரை ''வாடகை கொடு!'' என்று அதட்டி

வசூல் செய்தது கிடையாது. நாமாகக் கொடுத்தால்தான் வாங்கிக் கொள்வார்கள். இங்கே போதிய சுதந்திரம் உண்டு. நமது தனிமையில் யாரும் குறுக்கிட மாட்டார்கள். அதே போல வயது வேற்றுமை பாராமல் எல்லோரும் இனிமையாகப் பழகுவார்கள். ஐந்து நிமிட நடையில் இருக்கும் மெரினா கடற்கரையும், அது தரும் தூய காற்றும் இன்னும் என்னை மேன்ஷன்வாசியாகவே வைத்திருக்கின்றன. இந்த வாழ்க்கை போரடிக்கவேயில்லை'' என்று சிரித்துக் கொண்டே சொல்கிறார் ஜெகதீசன்.

குறைந்த வாடகையும், கனிவான சூழலும் நிலவும் இது போன்ற பாரம்பரிய மேன்ஷன்களின் ஆத்மாவில் அடிப்பது போல, சென்னை வரும் வடக்கிந்திய பேச்சிலர்களுக்காகவே ஹைடெக்மேன்ஷன்கள் நிறைய, முளைத்துவிட்டன. சாப்டுவேர் என்ஜினியர்கள், விற்பனைப் பிரதிநிதிகளைக் குறி வைக்கும் இதுபோன்ற மேன்ஷன்களில், ஓர் அறையின் மாத வாடகை மூவாயிரம் ரூபாய். சொகுசான மெத்தையுடன் கூடிய படுக்கை, தொலைபேசி, டீ.வி, இணைக்கப்பட்ட கழிவறை மற்றும் குளியலறை என்று அசத்தலாக இருக்கும் இந்த மேன்ஷன்கள், அதிகம் பெருகியிருப்பது திருவல்லிக்கேணி பெரிய தெருவில்.



* ஹைடெக் பேச்சிலர் அறை



* சுடச்சுடச் சோறுண்டு

திருவல்லிக்கேணி பாச்சிலர் சமுதாயத்தில் மாணவர்கள், மணமாகாத அரசு, தனியார் துறை ஊழியர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்றால், இல்லை என்று மறுக்கிறார் தாஸ்பா கெஸ்ட் ஹவுஸ் நடத்திவரும் அப்துல் ரஹீம்.

''மணவிலக்குப் பெற்றவர்கள், வீட்டை விட்டு கோபித்துக் கொண்டு வந்துவிட்டவர்கள், திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டவர்கள், திருமண வயதைத் தவற விட்டவர்கள் என்று சோகமான கதைகள் சுமந்து வாழும் பாச்சிலர்களும் இங்கே அதிகம்'' என்கிறார்.

பார்த்தசாரதி கோவில், வாலாஜா பெரிய மசூதி, பிளாட்பாரப் புத்தகக் கடைகள். இஸ்லாமிய பாரம்பரிய யுனானி மருத்துவ மனைகள், பறக்கும் ரயில் நிலையம் என்று பழைமையும், புதுமையும் கைகோத்துக் கிடக்கும் திருவல்லிக்கேணிக்கு பேச்சிலர் மேன்ஷன்கள், தனித்துவமான அடையாளம். ஆனால் இங்கே பெண்களுக்கென்று ஏதேனும் மேன்ஷன் இருக்கிறதா? திருவல்லிக்கேணியைத் தெருத் தெருவாக அலசியதில், பார்த்தசாரதி கோவிலையொட்டி நமக்குக் கிடைத்தது, ராவ் பகதூர் விழுனு ரங்கநாதன் செட்டியார்ஸ் சாரிட்டீஸ் நடத்தும் பெண்கள் விடுதி!

- ஜெ.ஜெ

படங்கள்:

டிஜிட்டல் சண்முகம்

மேக்கால போன சூரியன், இருட்டு கவ்வற நேரம். காக்கா குருவியெல்லாம் ஓய்ஞ்சி போய் கூட்டுக்குத் திரும்பிக் கிட்டிருக்கு. பொதர்லேயும் கட்டாந்தரையிலேயும் கெடக்கற புல்லை மேஞ்சிக்கிட்டே கரவையெல்லாம் ஊரப்பாக்கப் போகு.

கந்தனும் ருக்குவும் காட்டுக் கொடியில கட்டித் தூக்கிட்டு வந்த வெறகுக் கட்டையக் கீழ போட்டதும், தல பாரம் கொறைஞ்சுது. மெல்லிசா காத்து வந்து எதமா பஞ்சாட்டம் மெதக்கற மாதிரி இருந்துச்சி.

"ரமேஷைக் காணோமே!"

"நான் பார்த்தப்ப கட்டிக்கிட்டிருந்தான். கந்தன் சொல்லும்போதே ரமேஷ் வருவது தெரிந்தது.

கந்தனும் ரமேஷும் பக்கத்தூர்ல ஏழாப்பு படிக்கிறாங்க. ஊருக்கு வடக்கால ரெண்டு மைல் போனா, மரம், செடி, கொடி, பொதர்னு காடாத்தான் கெடக்கு. புலி, சிங்கமெல்லாம் ஒண்ணும் கெடையாதுன்னாலும், நரி, மொசல், பாம்பு எல்லாம் கெடக்கு.

லீவு நாளு, சமயம் கிடைக்கிறப்ப அங்க போய், காஞ்ச குச்சிகளைப் பொறுக்கிக் கட்டாகக் கட்டி வருவாங்க. மொத நாள் வெட்டிப் போட்டுட்டு மறுநாள் கட்டுவதுமுண்டு. சில நேரம் அதை வேறு யாராச்சும் கட்டிப் போய்விடுவாங்க. கொண்டு வந்ததை டவுனுக்குத் தூக்கிப் போய் பணத்துக்கு விற்பாங்க. விக்கிறப்ப, சின்னப் பசங்கதானேன்னு அடிமாட்டு விலைக்குக் கேட்டு வாங்கறவங்கதான் நெறைய.

அதுலதான் பென்சில், பேனா, நோட்டுனு வாங்கறது. மீதி வீட்டுக்கு. இங்கே வீட்டுல பல நாள் அடுப்பு எரியறது, இந்தச் சின்னஞ்சிறுசுங்க உழைப்புலதான்.

இவங்ககூட படிச்சவதான் ருக்கு. ருக்கு அஞ்சாவது பாசானதும், "பொட்டப் புள்ளையைப் படிக்க இம்மாந்தூரம் எப்படி தனியா அனுப்புறது; படிச்சி என்ன கிழிக்கப் போவுது"ன்னு நிறுத்திட்டாங்க. ஆனால் இவருடன் படித்த சில பெண்கள் போய் படிக்கின்றனர். ருக்குக்குப் படிக்க ஆசை, சொல்ல பயம். இவ படிக்காததுக்கு முக்கியக் காரணம் இவ அப்பாதான். சதா குடி போதை. அவரை நினைச்சாலே கோபம்தான். என்ன செய்றது...

ருக்குவின் அம்மா காமாட்சி எப்பவாவது நாத்து நட, களை எடுக்கப் போவாள். மத்த நாள்ல ஆடு மேய்க்கிற ருக்குவுக்குத் துணை தம்பி ஒருத்தன். அப்பா முனுசாமி கட்சிக்காரர். முதல்நாள் துணி துவைச்சி, ராத்திரி தூங்குறப்ப தலைக்குக் கீழே வைச்சுப் படுத்துப்பாரு, அந்த வேட்டி சட்டைய, கட்சித்துண்டை, தோளுல போட்டபடி, காலையில் வீட்டை விட்டுக் கிளம்பினா, திரும்பி வர ராத்திரி பத்தாவும். அப்பாவைப் பத்தி மத்தவங்க பேசறதைக் கேட்குறப்ப ருக்குவுக்கு எரிச்சலாவும், அவமானமாவும் இருக்கும்...

பூஞ்சிட்டுக் கனவுகள்

அவருக்குப் பேச்சு, மூச்சு எல்லாம் கட்சிதான். அதனால சம்பாதிச்சாரான்னா இல்ல.

கார்த்திகைப் பொறயாட்டம் எப்போவாவது ரெண்டு வேளை அடுப்பெரியும். மத்த நாளுல ராவோட்ராவுதான். மத்தியானத்துல பள்ளிக்கூடத்து சோறு. அதுவும் இல்லேன்னா பச்சத் தண்ணிதான்.



பள்ளிக்கூடத்துச் சோத்தைப் பத்திக் கேக்க வேணாம். தட்டை நீட்டுனா, கரண்டி தட்டுற சத்தம் கேட்கும். சோறு தட்டுல விழாது. போட்டாத்தானே!



"ரமேஷ், உங்கம்மா எதிர்வூட்டு அக்கா கூட நேத்து விருத்தாசலம் போனாங்களே எதுக்காம்?" என்றான்.

"அந்தக்காவுக்கு உடம்பு முடியலயாம். டாக்டருகிட்ட காட்ட..." தான் போட்டிருந்த டவுசர் நைஞ்சி கிழிஞ்சிருப்பதைப் பார்த்துக் கிட்டே குத்துக் காலு போட்டு உட்கார்ந்திருந்த கந்தன், "அப்படியே சினிமா பார்த்திருப் பாங்க."

"ராத்திரி தூங்குற வரைக்கும் வர்ல இருந்தாலும் இருக்கும். "உங்கப்பா கேக்க மாட்டாரா?"

"கேக்க மாட்டாரு. ஏன்னா எங்கப்பா எட்டாம் கிளாஸ் பெயில். எங்கம்மா பத்தாவது பாஸ். அதனால எப்பவும் எளக்காரமா பேசும். எது செஞ்சாலும்

இரா. செயபாலன்

"மூணு குட்டியை வித்துட்டீங் களா?"

ஏதோ நினைத்தபடி இருந்தவள் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள்.

ரமேஷ் கேட்டதைப் புரிந்து கொண்டு, 'ஏங்கப்பா கட்சியில கூட்டமாம். இவரைச் செலவுக்குப் பணம் கேட்டுருக்காங்க. எங்க போவார், அதான் வித்துட்டாரு.

"உங்கம்மா கேக்கலியா?"

"கேட்டா உதைதான். அதுல தம்பிக்குச் சட்டைத் தைக்க, அம்பது ரூபா கேட்டதுக்கே அடிக்க வந்துட்டாரு." பேசறப்பவே அழுதுடுவா போல இருந்தது.

கேக்க மாட்டாரு. தெருவுல யாருக்காவது உடம்பு முடியலேன்னா, துணி எடுக்க, கவரிங் நகை எடுக்க, மாத்த அது இதுன்னு யாரு கூப்பிட்டாலும் போவுது. கேட்டா, நம்ம காசிலா போறேன்னு சொல்லும். நாங்க சாப்பிட்டோமா, ஸ்கூலுக்குப் போனோமான்னு கேக்காது. எல்லாம் ஆயாதான். அதுக்கும் வயசாயிட்டது. கண்ணும் தெரியலை..." என்றவளுக்கு நம் அம்மாவைப் பத்தி சும்மா, சும்மா கேக்கிறானே என கோபம் வந்தது. அடக்கி வேகமான குரலில், "பக்கத்தூர் திருவிழான்னிக்கி வீடியோ போட்டாங்களே உங்கம்மா விடிய விடிய

பாத்துட்டு வந்ததுக்கு உங்கப்பா ஏசினாரே; ஏன்? உங்க சித்தப்பா காலேஜ்ல படிச்சுட்டு எப்பப் பாத்தாலும் அரச மரத்தடியில சீட்டு வெள்ளாடிக்கிட்டு, பீடிக் குடிச்சிட்டு கெடக்கு."

சுருக்கென்றது கந்தனுக்கு. "நான் என்ன கேட்டேன். கோபமா பேசுற... சித்தப்பா எது எதுக்கோ எழுதிப் போடுது. வேலை வர்ல... வேலைக்காக மெட்ராசுல பணம் கூட கட்டி வைச்சிருக்கு. இன்னும் வர்ல." ஏக்கத்தோடு சொன்னான்.

"வர்லன்னா சீட்டு வெள்ளாடுறதா. எப்படி மதிப்பாங்க மத்தவங்க. வேலை தானாவா வரும். அலையணும்.. அதுவரை வயக்காட்டு வேலைக்குப் போனா கூலி வருமே."

இவன் சொல்றது சரிதான். வேலைக்குப் போனா நல்லதுதானே? சித்தப்பாகிட்ட சொல்லி வேலை வர்ற வரைக்கும் வயல் வேலைக்குப் போவச் சொல்லணும். சமயம் வர்றப்ப, சீட்டு விளையாடுறது பீடி குடிக்கிறதப் பத்தி சொல்லிடணும் என்ற முடிவெடுத்தாலும் வெளியே சொல்லாமல், மௌனமாக இருந்தான்.


மடக்கி விட்டோம் என்ற மகிழ்ச்சியில், "டேய் கந்தா, நாம படிச்சா வேலை கெடைக்குமா?"

"எங்க கெடைக்கும். எப்பவோ படிச்ச எங்க சித்தாப்பாவுக்கே கெடைக்கல. நாம படிச்சு பாஸ் பண்ணறதுக்கே நெறைய வருஷமாவும். கெடைக்கும்னு தோணலை."

"நீ படிச்சு, பெரிய ஆபீசர்ன்னு வச்சுக்க, என்ன செய்வ?"

இப்படி ஒரு கேள்வியைக் கந்தன் கேட்பான்னு நினைச்சுப் பார்த்து புரியாமல் விழிக்க, "நாட்டுக்கே பெரிய ஆபீசரா யிட்டேன்னு வைச்சுக்க, அப்ப என்ன செய்வ... சும்மா சொல்லு" திரும்பத் திரும்ப கேட்டதும்,

ரமேஷ் கண்ணுல குறுகுறுப்பு. மனசுக்குள் பல எண்ணங்கள்....ம்... 'சொல்லட்டுமா; ம்... சொல்லட்டுமா' என தயங்கியபடி "நீ சொன்னமாதிரி வந்துட்டேன்னா, ஊருல, ஏன் நாட்டுல எந்தக் கட்சியும் இருக்கக் கூடாதுன்னு சொல்லிடுவேன். எல்லாத்துக்கும் கட்சிங்கதான் காரணம். அப்புறம் எல்லா ஊருல இருக்கிற கட்சிக் கொடி மரங்க, சிலைங்களை எடுக்கணுமின்னு சட்டம் போடுவேன். இப்ப நடக்குற முக்காவாசி சண்டைக்கு இதுதான் காரணமாம். அதே மாதிரி லஞ்சம் வாங்கி சொத்து சேர்த்திருக்கும் கட்சிக்காரங்க, அதிகாரிங்க, போலீஸ்காரங்க



சொத்தையெல்லாம் புடுங்குவேன்."

"நீ சொன்னது எல்லாம் நடந்தா ஊருக்கு ஒரு பெரிய ஜெயிலா கட்ட வேண்டியதுதான்" சொல்லிச் சிரித்தான் கந்தன். ருக்குவும் நினைத்து மனதுக்குள் மகிழ்ந்தாள்.

மூவர் மனத்திலும் இனம் தெரியாத மகிழ்ச்சி. ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்துகொண்டனர்.

"ருக்கு நீ என்ன செய்வ?"

கிழிந்த பாவாடையைக் கையால் சேர்த்துப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த ருக்கு சொன்னாள்.

"நான் என்ன சொல்லப் போறேன். சோத்துக்கே வழியில்ல. ரமேசு சொன்ன மாதிரி நடக்குமா? நடந்தா நல்லதுதான். என் தம்பி நல்லா படிக்கணும். அதுக்காக ராப் பகலா ஆடு மேய்ச்சி விறகு பொறுக்கி வித்து, அவனைப் பெரிய படிப்பு படிக்க வைச்சு... பேச்சை நிறுத்தி அழுத்தமாகவும்;

பேசச் செய்தார். சுமார் பத்து மணி நேர விவாதத்தை, அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, இறுதியில் அவர் பேசியது இதுதான்.

''நம்முடைய இலக்கு ஐந்நூறு கோடி வியாபாரம். அதை நாம் அடைய, நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். இதுதான் குமாரமங்கலம் பிர்லாவின் அணுகுமுறை! வெற்றியின் ரகசியமும் இதுதான்.

ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைவர் குமாரமங்கலம் பிர்லாவுக்கு முப்பத்து நான்கு வயது. உலகின் எட்டாவது செல்வந்தர். கட்டுமானம், சிமெண்ட், ஜவுளி, உரம், ரேயான், அலுமினியம், ரசாயனம் என்று பெரும் வியாபாரம்.

''என்னுடைய தந்தை ஆதித்யா பிர்லா அகால மரணமடைந்தபோது நான் ஸி.ஏ படித்துக் கொண்டிருந்தேன். ராட்சஸ நிறுவனம் ஒன்றை வழி நடத்த வேண்டிய பொறுப்பு வந்தபோது, 'ஓல்டு அண்ட் நியூ லெஜண்ட்' என்ற தாரகமந்திரத்தைக் கடைபிடித்தேன். என் தந்தையின் நம்பிக்கையைப் பெற்ற அனுபவசாலிகளை அப்படியே தக்க வைத்துக் கொண்டு, அவர்களுடன் உழைக்க இளைய தலைமுறையைப் பயன்படுத்திக் கொண்டேன். அடித்தளம் பலத்துடன் இருக்க, புதிய ரத்தம் பாய்ச்சப்பட்டதும் நிறுவனமே புதிய வடிவம் பெற்றுவிட்டது'' என்கிறார் குமாரமங்கலம் பிர்லா.

குமாரமங்கலம் பிர்லாவின் ஒரே பொழுதுபோக்கு டிஸ்கோ ஆடுவது- மனைவி நீரஜாவுடன்தான்!

- ஆர் எல்.

நிதானமாகவும் சொன்னாள். ''ஆபீசரா போன்னோ பெரிய தலைவரா வான்னோ சொல்ல மாட்டேன்'' அவள் கண்களில் இருந்த சோகம் முகம் மறையும் இருட்டிலும் தெளிவாகத் தெரிந்தது."

"பின்ன...?"

''பசிச்சா ரொம்ப கஷ்டம். நாலு முழுக்க பட்டினி கிடந்திருக்கேன். இன்னைக்கும் பட்டினிதான். பச்சத் தண்ணி குடிச்சிட்டு கெடக்கும்போது யாராவது சோறு வடிச்ச கஞ்சி, இல்ல ஒரு டம்ளர் கழனித்தண்ணியாவது தர மாட்டாங்களான்னு அழுவேன். சில சமயம் என் தம்பி பசியால துடிச்சி அழறப்ப, என் பசிய மறந்து அவனை தேத்துவேன். எப்படித் தேத்துனாலும் பசி அடங்காம, இரண்டு பேரும் சேர்ந்தே அழுவோம்." ருக்கு கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர்.

''அழாதே ருக்கு'' இருவரும் சமாதானப்படுத்தினர்.

''பசின்னா எங்களுக்குத் தெரியாதுன்னு நினைக்கிறியா?'' சுந்தன் கேட்டதும்.

"தெரியாதுன்னு சொல்லல. என்னவுக்கு இருக்காதுன்னு சொல்றேன். என்ன மாதிரி உங்களுக்கு எப்பவும் வரக் கூடாதுன்னு புள்ளையாரு கிட்ட கேட்டுக்கிறேன்'' - 'கைகளால் தாடையில் போட்டுக் கொண்டாள்.

"தம்பி படிச்சுட்டு வந்தான்னா, பசி இல்லாம இருக்க வழி ஏதாவது செய். அது மாதிரி மருந்தைக் கண்டுபிடின்னு சொல்வேன். அதைச் சாப்பிட்டா பசியே வரக் கூடாது, எப்படி? கண்டுபுடிச்சா எல்லாருக்கும் நல்லதுதானே?'' என்றாள்.

மூவர் மனதிலும் கரையைத் தொடர்ந்து தொடும் அலைகள் போல் பல எண்ணங்கள் அணி வகுத்து வந்தன.

"பொழுது போறதுகூட தெரியாம அப்படி என்ன பேச்சு?"

குரல் கேட்டு மூவரும் திரும்ப, தூரத்தில் ரமேஷ் - சுந்தன் அம்மாக்கள் வந்து கொண்டிருந்தனர்.

அவசர அவசரமாகத் தங்கள் விறகுக் கட்டுகளை நிமிர்த்தி, தலையில் தூக்கிக் கொண்டு, இனம் புரியாத நம்பிக்கையுடன் நடக்க ஆரம்பித்தனர். நடையில் என்றும் இல்லாத வேகம்.

''இருட்டினதுகூடத் தெரியாம என்னக்கா பேசியிருக்கும்?'' என்றாள் சுந்தன் அம்மா.

''புதுசா என்ன பேசும்? சினிமா, டீவின்னு பேசியிருக்கும். டவுன்ல புதுப் படம் வந்துருக்காம் போவலாமா?'' ரமேஷ் அம்மா ஆர்வமாகக் கேட்டாள். ○

சந்தோஷம் கொண்டாடும் சந்தோஷி!

'புன்னகையரசி' என்ற சிம்மாசனத்தை கறுப்பு வெள்ளைக் காலத்தில் மொத்தக் குத்தகை எடுத்துக் கொண்டவர் கே.ஆர். விஜயா மட்டும்தான். ஆனால், சினிமா வண்ணத்துக்கு மாறிய பிறகு, எண்ணற்ற சிரிப்பழகிகள்.

கன்னக்குழி விழ காந்தப் புன்னகை பூக்கும் லைலா, பற்களின் அளவு பயமுறுத்தினாலும், கண்களையும் தனது வசீகரப் புன்னகையில் பங்கேற்கச் செய்யும் சிநேகா, இதே வரிசையில் இப்போது மின்சாரப் புன்னகை சிந்தும் சந்தோஷி.

'மாறன்' படத்தில் மருத்துவக் கல்லூரி மாணவி அஞ்சலியாக வந்து, தமிழ் ரசிகர்களின் நெஞ்சில் நிறைந்த சந்தோஷியின் அம்மாவைத் தமிழ் நேயர்கள் அறிவார்கள்.

"தொலைக்காட்சித் தொடர்களில் தூள் கிளப்பிக் கொண்டிருக்கும் பூர்ணிமாதான் எனது அம்மா! பெரியம்மா தனலட்சுமியோ, கோமல், மௌலி, தொடங்கி இன்றைய எஸ்.வி.சேகர் நாடகங்கள் வரை கைத்தட்டல்களை அள்ளிக் கொண்டிருப்பவர். இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்துவிட்டு நான் மட்டும் நடிப்புக் கலையை எப்படி வெறுக்க?" என்பது சந்தோஷியின் கேள்வி. "இயற்பெயரே சந்தோஷிதானா?"

"எஸ்! அம்மா சந்தோஷி மாதாவின் தீவிர பக்தை. அம்மா சந்தோஷி மாதா விரதமிருந்தபோது நான் பிறந்தேன். அதனால் இந்தப் பெயர்" என்று சொல்லும் இவர் எட்டு வயதிலிருந்தே குழந்தை நட்சத்திரமாக நடித்து வருகிறாராம். இன்று 'பாலா', 'காதல் சாம்ராஜ்யம்', 'ஆசை ஆசையாய்' என்று ரேஸ் தொடங்கி விட்ட சந்தோஷி 'ட்யூப்லைட்' படத்தின் கதாநாயகி.

"கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என்று அடம் பிடிக்க மாட்டேன். படம் பார்த்து தியேட்டரை விட்டு வெளியே வரும்போது, 'ஒரு சீன்லே வந்தாலும் அந்தப் பொண்ணு நல்லா பண்ணியிருந்துச்சில்லே' என்று ரசிகர்கள் சொல்ல வேண்டும். அப்படியொரு பாத்திரம்தான் 'பாலா' படத்தில் எனக்கு அமைந்த தங்கை பாத்திரம்" என அடக்கமாகப் பேசும் சந்தோஷியைத் திறமையான நடிகை என்று அடையாளம் காட்டியது, ஏவி.எம்.மின் 'வாழ்க்கை' தொடர்.

சந்தோஷிக்குப் பிடித்த சாப்பாடு (?) ஐஸ்க்ரீம். "எனக்கு ஐஸ்க்ரீம் பைத்தியம் என்ற பட்டப் பெயரே உண்டு. வெறும் ஐஸ்கிரீமைச் சாப்பிட்டு உயிர் வாழச் சொன்னால், ஓ.கே. சொல்லும் ஒரே பெண் இந்தியத் துணைக் கண்டத்தில் நானாகத்தான் இருப்பேன்" என்னும் சந்தோஷி, சுத்த சைவமாம்.

" விலங்குகளிலேயே ரொம்ப ஸ்ட்ராங் யானைதான், அதுவே சைவம்தான்," என்று 'ஹாய் மதன்' பாணியில் தகவல் தந்த இந்தத் தமிழ்ப் பொண்ணுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்தது சங்கீதம்! "அருணா சாய்ராம் கிளாசிக்ஸ், செலின்தியான் பாப் மெலடீஸ், இரண்டும் உயிர்" என்னும் சந்தோஷி ஒவ்வொரு வார்த்தைக்கு இடையிலும் அந்த மின் புன்னகையை மீண்டும் மீண்டும் சிந்தியபடி பேசுகிறார். மனிதப் புன்னகையிலிருந்து மின்சாரம் எடுக்க விரும்பும் விஞ்ஞானிகள் இவரை அணுகலாம்!

- ரவுண்ட்ஸ் பாலு

படம் : சங்கர் சத்தியமூர்த்தி


இளமை
ஸ்பெஷல்





ஒவ்வொரு வினாடியும் முன்னேறுங்கள் - ஞானரசம்

எண்ணங்களை முன்னேற்றத்தை நோக்கிச் செலுத்தச் செலுத்த மனிதன் முன்னேறுகிறான் என்பதால் எண்ணங்களை வடிவமைத்துக் கொள்ள வழிகளைச் சொல்லும் நூல்.

வெளியீடு: திருமகள் நிலையம், 16, வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், சென்னை - 17, விலை : ரூ.20/-



டாலர் மருமகள் - சுதாமூர்த்தி


கன்னட மொழியில் வெளிவந்த நாவல். பிறகு மைசூர் பல்கலைக் கழகத்தில் பாட நூலாக வைக்கப்பட்டு பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. டி.வி. தொடராகவும் வந்தது.

மொழி பெயர்ப்பு - சௌதாமினி வாசுகி, வெளியீடு: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17, விலை. ரூ.50/-

என் அன்புக் காதலா - பாலகுமாரன்

அன்பு, காதல் நட்பு என்று அடிப்படை உணர்ச்சிகளை வைத்து பின்னிப் பின்னி வாழ்க்கையின் ஒரு கோணத்தைக் காட்டுகிற நாவல்.

வெளியீடு: விசா பப்ளிகேஷன்ஸ், 16, வெங்கட் நாராயணா ரோடு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 92.



சதுரங்கம் - ப. அருணகிரிநாதன்

சதுரங்க ஆர்வலர்களின் அனைத்துத் தேவைகளையும், அறிவையும் பெற உதவும் நூல். உலகப் போட்டிகளில் பெரிய வீரர்களின் ஆட்ட நகர்த்தல்கள் விளக்கப்பட்டுள்ளன.

வெளியீடு: ஐஸ்வர்யா புக்ஸ், A-2 சஹஸ் ஐஸ்வர்யா ஃபிளாட்ஸ், 52, திருமங்கலம் சாலை, திருநகர், வில்லிவாக்கம், சென்னை - 600049, விலை : ரூ. 150/-

வெற்றித் திருமகன் - அப்துல் கலாம் நெல்லை சு.முத்து

'பதினைந்து வயதுக்குள் ஒரு குழந்தையை நல்ல குணவானாக வளர்த்து விட்டால் பிறகு கடவுளோ, பிசாசோ, சட்டமோ எதுவும் அதை மாற்ற முடியாது' என்ற கலாமின் வாழ்க்கை வரலாறு, குழந்தைகளுக்குச் சொல்வது போல அமைந்திருந்தாலும், அனைவருக்குமே தேவையான வழி காட்டுதல் இதில் இருக்கிறது.



வெளியீடு: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17, விலை ரூ.70/-

புக் பேங்க்

- விஸ்வக்

பிரம்மாண்டமான

சிறப்பு தள்ளுபடி 10%

26-வது சென்னை

BAPASI

புத்தகக் கண்காட்சி

ஜனவரி –9– ஆம் தேதி முதல் 19 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை-2

நேரம் :

வேலை நாட்களில் – மாலை 2.30 முதல் இரவு 9.00 வரை
10-1-2003, 13-1-2003 தேதிகளில்

விடுமுறை நாட்களில் – காலை 11.00 மணி முதல் இரவு 9.00 வரை
11,12,14,15,16,17,18,19 தேதிகளில்

நுழைவுக் கட்டணம் ரூ.2.00 மட்டும்

தினமும் மாலை 6.30 முதல் 8.00 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்

தேதி	தலைப்பு	பேச்சாளர்
10.1.2003	தமிழ்க்காவல்	A.I. இரவிஆறுமுகம் IPS
11.1.2003	'நிதி' மிகுந்தவர் தமிழைத் தாரீர்	ப. சிதம்பரம் (முன்னாள் மத்திய அமைச்சர்)
12.1.2003	மெல்லத் தமிழ் இனி!	சாலமன் பாப்பையா
13.1.2003	உளி பெற்ற வலியில் சிற்பங்கள்	கணபதி ஸ்தபதி
14.1.2003	தூரிகையும் தமிழ்க் காரிகையும்	மதன்
15.1.2003	அன்னைத் தமிழின் ஆயுள் பாவம்	Dr. K.N. சரஸ்வதி
16.1.2003	தமிழ் எனும் தளராத நம்பிக்கை	Dr. M.S. உதயமூர்த்தி
17.1.2003	சிரிக்காமலும் சிந்திக்கலாம்	S.Ve. சேகர்
18.1.2003	கலைத்தமிழ் – கலையாத தமிழ்	நடிகர் கமல்ஹாசன்
19.1.2003	புதிதாய்ப் பூக்கும் தமிழ்ப் பூக்கள்	மு. மேத்தா

Programmes Sponsored by - Oxford University Press

அறுசுவை அரசின் சிற்றுண்டி உண்டு

THE BOOK SELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA,

ராஜா, ராணி, ஆர்த்தி!

விஜயலட்சுமி, கொனேரு ஹம்பியைத் தொடர்ந்து (பெண்) கிராண்ட் மாஸ்டர் கௌரவம் பெற்றிருக்கிறார் ஆர்த்தி ராமசாமி. இந்தியாவுக்குப் பெருமை. தமிழ்நாட்டுக்குப் பெருமை. சதுரங்க சாகஸம் நிகழ்த்தி, ஊர் திரும்பியிருக்கும் ஆர்த்தியை, தி.நகரில் பா.ஜ.க அலுவலகத்துக்கு எதிர்த்தாற் போல இருக்கும் அவரது வீட்டில் சந்தித்துப் பேசினோம்.

''ஒன்பது வயதில்தான் செஸ் ஆட ஆரம்பித்தேன். எனக்கு செஸ் ஆடக் கற்றுக் கொடுத்தது என் அண்ணன் ராஜா தான். மைலாப்பூர் எம்.சி.டி.எம். பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளிக்கூடங்களுக்கு இடையிலான செஸ் போட்டி பற்றிய அறிவிப்பு பார்த்தேன். பெயரைக் கொடுத்த பின், செஸ் ஆடக் கற்றுக் கொண்டு, போட்டியில் பங்கேற்றேன். இரண்டாவது இடம் கிடைத்தது. ஆட ஆரம்பித்த புதிலேயே நான் நன்றாக ஆடுவதாக, செஸ் அசோசியேஷன்காரர்கள் என்னைப் பாராட்டி, தொடர்ந்து பயிற்சியளிக்க முன் வந்தார்கள்'' என்கிறார் ஆர்த்தி.



'99ம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டில் உலக சாம்பியன்ஷிப் போட்டி நடந்த போது, பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் சாம்பியன்ஷிப் கிடைத்தது. தொடர்ந்து, பிரேஸில், ஈரான், இங்கிலாந்து, ஸ்வீடன், கிரீஸ், ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி என்று பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆடி, வெற்றி வாகை சூடி இருக்கிறார் ஆர்த்தி.

விப்ரோ நிறுவனம், ஆர்த்தியின் அயல் நாட்டுப் பயணச் செலவு, பயிற்சி செலவுகளை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழியில் மனித வள மேம்பாட்டு நிர்வாகம் குறித்த மேல் பட்டப்படிப்பு படிக்கிறார் ஆர்த்தி.

செஸ் தவிர ஓவியம், நீச்சல் இரண்டிலும் ஆர்வம் உண்டு.

- எஸ். சந்திரமௌலி



குழந்தையில்லாத குறையை நீக்கி நல்ல புத்திரனைப் பெற்றெடுத்து மகிழ தீப வழிபாடு செய்வது சிறந்தது!

பிள்ளை வரமளிக்கும் க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில்

தை அமாவாசையன்று

நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

ஜெகத்குரு காஞ்சிஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீராமநாதசுவாமி உடனிருந்து அருள்பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவவிஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாகதோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்புமிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத்திருப்பணி நடைபெறுகிறது. புண்ணியபூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற நெய் விளக்கேற்றும் பணியிலும் நாமும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


- ★ தங்கள் சார்பாக நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.
- ★ ரூ.500/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், நெய் தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்த நாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட 'கோடி தீர்த்த' சொம்பும், வலம்புரி சங்கும் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாதசுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு இராமலிங்க தீபம் அனுப்பி வைக்கப்படும். மேலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபம் ஏற்றி அன்னதானம் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம்" மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மிக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீமத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று 'தர்ப்பணம்' செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களைக் குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ.750/- அனுப்பும்போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேற்றைப் பெற்று க்ஷேமமாக வாழ அழைக்கிறோம்.

இராமேஸ்வரத்தில் அமாவாசையன்று அன்னதானம் செய்ய விரும்பும் ஆன்மிக அன்பர்கள் சார்பாக நெய் தீபம் ஏற்றுகிறோம். தாங்கள் என்ன வேண்டுதலுக்காக தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசையன்று தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மிக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானப் பணியும், தீப வழிபாட்டுப் பணியும் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.


Cheque/D.D/M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 7102308 E-mail: sivasiva@vsnl.net



ஸ்ரீ இராமநாதசுவாமி

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்புவாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்வதால் கிடைத்தற்கரிய பலனைப் பெறலாம்!





புதைக்கப்பட்டதா சுடுகாட்டு ஊழல்?

தொட்டில் குழந்தை முதல் சுடுகாடு வரை ஊழல் தாண்டவமாடியது' என்று ஜெ. ஆட்சி (1991-96) விமர்சிக்கப்பட்டதுண்டு. சுடுகாட்டு ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள், தப்பிக்கும் விதமாக, தமிழக அரசு ஓர் உத்தரவு போட்டிருப்பதாக இப்போது பரபரப்பாய்ப் பேசப்படுகிறது.

சுடுகாட்டுக் கொட்டகை ஊழலைத் தட்டிக் கேட்டதால், தாம் மாற்றப்பட்டதாகச் சொன்னார் உமா சங்கர். உயர்நீதி மன்றம் வழக்கை எடுத்துக் கொண்டு, சி.பி.ஐ. வழக்கை விசாரித்து, அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த செல்வகணபதி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆசார்யலு சத்தியமூர்த்தி, மற்றும் அப்போது மதுரை மாவட்ட ஆட்சியாளராக இருந்த சம்பத், ஆகியோர் மீது வழக்கும் போட முனைந்தது. ஆனால் அதற்குள் தமிழகமெங்கும் ஊழல் நடந்திருப்பதால், தமிழகமெங்கும் விசாரித்து, பத்தொன்பது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க, அடுத்து வந்த தி.மு.க. அரசிடம் அனுமதி கேட்டது சி.பி.ஐ.

சட்டப்படி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு அனுமதி கொடுக்க வேண்டும். ஆனால் தமிழக அரசு, ஆசார்யலு சத்திய மூர்த்தி மற்றும் சம்பத் ஆகியோர் மீது மட்டும் வழக்குப் போட அனுமதி கொடுத்தது. இந்த நிலையில் தி.மு.க. ஆட்சி போய் மீண்டும் ஜெ. ஆட்சி வந்தது. இப்போது இந்த வழக்கில் சம்பத் மீது நடவடிக்கை எடுப்பதற்குக் கொடுத்த அனுமதியை மட்டும் தமிழக அரசு வாபஸ் செய்து விட்டாதால்தான் சர்ச்சை.

"பத்தொன்பது பேர் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி கேட்கப் பட்டபோது, மூன்று பேர் மீது மட்டும் கோர்ட் நடவடிக்கை எடுக்க அனுமதி கொடுக்கப்பட்டது தவறு, மேலும் மதுரையைப் பொறுத்த மட்டில் செலவழிக்கப்பட இருந்த தொகை இருபது லட்சம்தான். அதில் முன்பணம் பத்து லட்சம் கொடுக்கப் பட்டது. கொடுத்தவர் உமாசங்கர்தான். ஆனால் உமாசங்கர் 'கொட்டகைகள் சரிவரக் கட்டப்படவில்லை யென்று' அறிக்கை கொடுத்தவுடன், மீதிப் பணம் கொடுக்க வேண்டாம் என்று ஆர்டர் போட்டவர் சம்பத். எனவே சம்பத் மீது எந்த குற்றமும் இல்லை. அவரை இந்த வழக்கில் சேர்த்தது தவறு. அதனால் அவர் கொடுத்த மனுவை ஏற்று, விடுவிக்கும் வகையில் மேற்சொன்ன உத்தரவைப் போட்டது தமிழக அரசு" என்கிறார் கோட்டை அதிகாரி ஒருவர்.

"பத்திரிகைகள் இந்த விஷயத்தைத் தவறாக புரிந்து கொண்டிருக்கின்றன. சம்பத் மட்டுமே விடுவிக்கப் பட்டிருக்கிறார். உயர்நீதி மன்றம் கிரீன் சிக்னல் கொடுத்தவுடன், செல்வ கணபதி மற்றும் இரு அதிகாரிகள் மீது வழக்கு நடக்கும். மொத்த வழக்கும் கைவிடப் படவில்லை'' என்கிறார் அந்த அதிகாரி.

- ப்ரியன்

கார்த்திகேயன் அந்தப் புகைப்படத்தை, திருப்பிப் பார்த்தான். அதில் எதுவும் எழுதியிருக்கவில்லை. புகைப்படங்களின் பின்னால் தேதியோ, இடமோ எழுதி வைப்பது அவனுடைய வழக்கம். அது அவன் அப்பாவின் ஃபோட்டோ. அதில் எதுவும் எழுதாமல் இருந்தது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.



அந்தப் புகைப்படத்தில் அப்பாவின் முகம் சந்தோஷத்தால் நிறைந்திருந்தது. சிங்கம், புலி பொம்மைகளின் பக்கத்தில் நின்று போஸ் கொடுப்பார்களே, அப்படி இல்லாமல் சைக்கிளைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். சிங்கம், புலி போல அப்பாவுக்கு சைக்கிள்.

ஆனால், அப்பா ஒன்றும் ஸ்டைலாக போஸ் கொடுக்கவில்லை. அப்போதுதான் இரண்டு மூட்டை அரிசியை சைக்கிளில் கொண்டு வந்து இறக்கியவரை, அப்படியே இழுத்து வந்து நிற்க வைத்தாற் போல் நின்றிருந்தார்.

வியர்த்துப் போன முகத்தில் புன்னகை நிரம்பியிருந்தது. அழுத்தமான புன்னகை. 'ஏதோ நீ ஆசைப்படுற, இந்த போட்டோவுல நான் நிக்கணும்னு' என்பதாக இருந்தது அந்தப் புன்னகை.

இதற்கு முன் அந்தப் புகைப்படத்தைப் பார்த்த ஞாபகம் இல்லை.

தற்செயலாகத்தான் கிடைத்தது. மிகவும் அழகானதாக இருந்தது. அப்பாவை சைக்கிளோடு நிறுத்தி வைத்துப் புகைப்படம் எடுக்க யாருக்கோ தோன்றியிருக்கிறது.

அப்பாவை அந்த நிலையில் அவன் நிறையத் தடவை பார்த்திருக்கிறான். அவனுக்கு அந்த புகைப்படம் எடுத்தவரைத் தேடிப் போய்ப் பாராட்ட வேண்டும் என்று தோன்றியது. அவ்வளவு அற்புதமாக இருந்தது அதில் இருந்த சைக்கிள்தான். அப்பாவும், அவருக்குப் பின்னால் சைக்கிளும் அவ்வளவு தெளிவாக எடுக்கப்பட்டிருந்தது. சைக்கிளில் பட்ட வெயில் வெளிச்சம், மிதமான ஒளியில் மின்னியது.

அப்பாவைப் பற்றி பேசினால் சைக்கிளைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது.

அந்த அளவு சைக்கிளை நேசித்தவர். சைக்கிளில்லாத அப்பாவை நினைத்தும் பார்க்க முடியாது. அந்தப் புகைப்படம் எடுத்தவருக்கும் அப்படித்தான் பட்டிருக்க வேண்டும்.

அந்த ஃபோட்டோவைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்தபோது, "இந்தப் படம் எங்கடா கிடைச்சுது!" என்றாள், ஆச்சரியமாக...

அம்மாவுக்கும் அந்த ஃபோட்டோவைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை.

முத்துராமன்

'நீ ஒருக்க ஸ்கூல் லீவுல மதுரைக்குப் போயிருந்தில்ல, அப்பத்தான் ஓங்கப்பா இந்தப் படத்தைக் கொண்டாந்தாங்க. அன்னைக்கெல்லாம் அவுக அந்த சைக்கிளைப் பாக்குறதும், இந்தப் படத்தைப் பாக்குறதுமால்ல இருந்தாங்க!" என்று சொன்னாள்.

கார்த்திகேயன் பின் வாசல் வழியாக இறங்கி, மாடிப்படியின் கீழ் சாய்த்து வைக்கப்பட்டிருந்த சைக்கிளைப் பார்த்தான். எடுத்து ஒரு வருடம் ஆகியிருக்கும். ரிம்மெல்லாம் துருப்பிடித்துப் போயிருந்தது. ஸ்டாண்டு உடைந்து போயிருந்தது.

ஃபோட்டோவில் பார்த்த சைக்கிள் ஞாபகம் வந்தது. நிழலும், நிஜமும் தனித்துத் தெரிந்தன. நிஜம் குற்றுயிராய்க் கிடந்தது. நிழல் பார்க்கத் தூண்டுவதாய் இருந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் சைக்கிளை எடுத்தான்.

சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போவதே சிரமமாக இருந்தது. எதுவோ உராயும் சத்தம் கேட்டது. நிறுத்திவிட்டு குனிந்து பார்த்தான். தெரியவில்லை.

தொடர் நேசம்

மீண்டும் தள்ள ஆரம்பித்தான். சத்தம் ஆரம்பித்தது. ஸ்டாண்டு பின்னால் தேய்த்துக் கொண்டே வந்தது.

அப்பாவின் பின்னால் உட்கார்ந்து போன அதே சைக்கிள். நீர்குமிழியாய் வழுக்கிச் சென்ற சைக்கிள், வடம் பிடிக்க வேண்டிய தேர் போல அடம் பிடித்தது. அடம் பிடிக்கும் குழந்தையைத் தரதரவென இழுத்துப் போவதாய்த் தோன்றியது. அப்பா சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போவது நினைவுக்கு வந்தது. நடக்கத் துவங்கிய குழந்தையை, கவனமாய் கையைப் பற்றி அழைத்துச் செல்வது போலிருக்கும். அப்பாவோடு சைக்கிளில் சுற்றியதெல்லாம் எப்போதாவதுதான். சைக்கிளைத் தெருவில் இறக்கி, அதில் ஏறி உட்கார்ந்தவுடன் திரும்பிப் பார்ப்பார். தம்பி எப்பொழுதும் முன்னால் ஏறி உட்கார்ந்து கொள்வான்.

வண்டி கிளம்பி பாண்டியன் கடை, இதயம் ஸ்டோர், பவானி இஸ்திரி வண்டி, அன்பு இனிப்பகம் வழியாக, அரிசி மில் தாண்டியவுடன் தெரு முனை டீக்கடையில் நின்றுவிடும்.

எப்போதாவது இந்த ரவுண்டு சுற்றுதல் ரயில்வே பாலம் வரை நீள, பாலத்தின் தடுப்புச்சுவர் ஓரமாக நின்று, மின்சார வண்டியின் பெட்டிகளை எண்ணியிருக்கிறோம். அதிசயமாய்க் கண்ணில்படும் கூட்ஸ் வண்டியின் பெட்டிகளை எண்ணிக் கொண்டிருக்க, அப்பா சரிவில் இறங்க ஆரம்பித்திருப்பார்.

ஆளரவமற்ற அந்த நீண்ட நெடும் பாதையில் அப்பா மட்டுமே. அவர் சைக்கிளில் இறங்குவதையே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

"**பு**தன் கிழமைதான் கிடைக்கும் தம்பி" என்றார் சுல்தான் பாய்.

"பாய்...!"

"என்ன தம்பி! நாளைக்கு ஒரு நாள் எண்ணெய்ல ஊறணும். அடுத்த நாள்தான் வேலையை ஆரம்பிக்கணும்."

"சரி...! பாத்து செஞ்சு குடுங்க."

அடுத்த நாள் காலையில் வேலைக்குப் போகும்போது, பாய் கடையிலிருந்தபடியே கூப்பிட்டார்.

"தம்பீ... சைக்கிள் நிறையச் செலவு வைக்குமே தம்பி. மேல ஒரு தொள்ளாயிரம் போட்டா புது சைக்கிளே வாங்கிக்கலாம்."

"பாய், ஓவர் ஹாலிங் மட்டும் செஞ்சு குடுத்துடுங்க பாய்."

"ஓவர் ஹாலிங் மட்டுமில்ல தம்பி, நிறைய புதுசா மாத்த வேண்டியிருக்கு. முக்கியமா இரண்டு டயர், டியூப், ரிம் புதுசா போடணும். அப்படியும் எழுநூறு ரூபாய்க்கு மேல ஆகுமே."

"என்ன பாய்...! ஒரேடியா புது சைக்கிள் விலை சொல்றீங்க."

"தம்பி, உங்கப்பா இருந்த வரைக்கும்



மட்டும்தான். அந்த சைக்கிளை யாருக்கும் கொடுத்துவிட அவனுக்கு மனசில்லை.

அறுநூற்று எண்பது ரூபாய் வாங்கிக் கொண்டார் பாய். சொன்னதை விடக் குறைவுதான். கடைசியாக இருந்த சைக்கிளை வெளியே இழுத்து நிறுத்தினார். கையில் வைத்திருந்த துணியால் வேகமாகத் துடைத்தார். தள்ளி நின்று ஒருமுறை பார்த்தார். பரிவட்டம் கட்டிய யானையைப் போல கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

'தம்பி, ஓட்டிப் பாருங்க', 'ஏதாவது பிரச்னைன்னா கொண்டு வாங்க'' என்றார்.

மெல்லத் தள்ளிக் கொண்டே போய் சைக்கிளில் ஏறி மிதிக்க ஆரம்பித்தான். அந்தத் தெருவை அப்போதுதான் புதிதாகப் பார்ப்பது போல, சுற்றிலும் பார்த்துக் கொண்டான். ஒரு சில வீடுகளில் வாசல் தெளித்து கோலம் போட்டிருந்தார்கள்.

தெரு யாருமில்லாமல் அமைதியாக இருந்தது. இடப்பக்கத்தில் வரிசையாக மரங்கள். காற்றில் இலேசாகக் குளிர் இருந்தது. சைக்கிள் மிதக்க ஆரம்பித்தது.

கல்தான் பாய்க்கு நன்றி சொல்ல வேண்டும்.

வீட்டுக்கு வந்து உட்கார்ந்தபோது மூட்டு வலிக்க ஆரம்பித்தது.

அலுவலகத்துக்கு சைக்கிளில் போய்விட முடியுமா என சந்தேகம் வந்தது.

அப்பா முப்பது வருஷமாக சைக்கிளிலேயே சுற்றி வந்தவர். அவனுக்குத் தெரிந்து அவர் கால்வலி, முதுகு வலி என்று படுத்ததில்லை. தினமும் எட்டு கிலோமீட்டர் சைக்கிள் ஓட்டுவதால் எதுவும் ஆகிவிடுமா என்ன?

அவசரமாகக் குளித்துவிட்டு கிளம்பி வெளியே வந்தபோது மணி எட்டரை. ஆஃபீஸ் போய்ச்சேர சரியாக இருக்கும். போகும்போது பாய் கடை வழியாகப் போக வேண்டும். பாய், பெருமையுடன் கையசைப்பார்.

சைக்கிளில் ஏறும்போது அம்மா அதிசயமாக வெளியே வந்து நின்றாள்.

''சைக்கிளோட நீ நிக்கிறதைப் பாக்குறப்போ உங்கப்பாவையே பாத்தா மாதிரியிருக்கு'' என்றாள்.

கார்த்திகேயனுக்கு உடனே அந்த ஃபோட்டோவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.○

சைக்கிள் என் கடைக்கு வருஷத்துல ஒரு முறைதான் வரும். எனக்கு அதுல ஒரு வேலையும் இருக்காது. அப்படியே எண்ணெய் போட்டுத் துடைச்சுக் குடுத்துரலாம். அப்படியே வெண்ணெய் மாதிரி வழுக்கிட்டுப் போகும். அப்படி வைச்சிருப்பாரு.

அப்பா 'மவுத்' ஆன பிற்பாடு வண்டிய எடுக்காம அப்படியே விட்டுட்டீங்க போலி'நுக்கு. ரிம்மெல்லாம் துருப்பிடிச்சு தொட்டாலே உதிர்ந்து போகுது.''

''சரி பாய், எப்பக் கிடைக்கும்?''

''டயர், டியூப், பிரேக், ஆக்ஸில், ஸ்டாண்டு ஒரு எழுநூறு, எழுநூத்தம்பது ரூபாய் ஆகும். நாளை மறுநாள் காலைல ரெடியாயிடும் தம்பி...''

பொழுதுபோய் வீடு வந்து சேர்ந்தபோது அம்மாவும் சத்யனும் தூங்கியிருந்தார்கள். ''இன்னும் இரண்டு நாளில் சைக்கிள் வந்துவிடும்'' என்று மனைவியிடம் சொன்னதும், ''அப்ப இனிமே சீக்கிரமா வீட்டுக்கு வந்திடுவீங்க'' என்றாள் சிரிப்பு மின்ன... அந்த சைக்கிளுக்கு எழுநூறு ரூபாய் செலவழிப்பதில் அவளுக்கு இஷ்டமில்லை.

''அடுத்த மாசம் போனஸ் வந்தா புது சைக்கிளே வாங்கிடலாமே'' என்றாள்.

ஆனால், அவனுக்கு ஃபோட்டோவில் பார்த்த சைக்கிள் மட்டுமே ஞாபகத்தில் இருந்தது. அப்பா அந்த சைக்கிளை முப்பது வருஷத்திற்கும் மேலாக வைத்திருந்தார். அவருடைய நினைவாக இருப்பது அது

எஸ்.பி.பி. சரணுக்கு (கும்பம்)  உற்சாகம் கரை புரளும்!



மேஷம்

காலேஜ் கேம்பஸில் ரவுண்ட் கட்டிய ஜாலி மூடு, இந்த வாரம் முழுவதும் உங்களுக்கு இருக்கும். எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி, தகவலெல்லாம் உங்களைக் குஷிப்படுத்தும். பாக்கெட் கனத்துப் போற அளவுக்குப் பணம் வரும். ஆனா ப்ரண்ட்ஷிப் அரட்டையில் பாக்கெட் காலியாற மாதிரி செலவுக்கும் குறைவில்லை. டென்ஷன் பண்ணிட்டிருந்த கடன் தொல்லை குறையும். குடும்பத்துல ஒற்றுமை நிலவும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

ரிஷபம்

'என்டைஸர்' பைக்தான் வேணும்னு அடம்பிடித்துக் கொண்டிருந்தவங்களுக்கு



அதுக்கான வாய்ப்புகள் வரும். இருந்தாலும், அப்பப்போ குழப்பங்கள், பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். வேலை விஷயமா சிலர் வெளியூர்/வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. வீட்ல சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க முயற்சிகள் எடுக்கப்படும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம்.

மிதுனம்

'பஸ்லதான் தொங்கிடுவோம், ட்ரெயின்லயும் தொத்திக்குவோம், டிக்கட்டு மட்டும் எடுக்கவே மாட்டோம்' - பாட்டு மாதிரி இந்த வாரம் நீங்க எதையும் வாங்க வேண்டாம். எல்லாம் உங்களைத் தேடி வரும். எதிர்ப்புகள் மறையும். அலுவலகப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு உண்டு. இந்தப் பாராட்டுல உச்சி குளிர்ந்து சுறுசுறுப்பா வேலை பார்ப்பீங்க. வேலை இல்லாம இருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும்.



கடகம்

"தேரடி வீதியில் தேவதை வந்தால்...'' பாட்டுக்கு மாதவன் அன் கோ போடுற ஆட்டம் மாதிரி இந்த வாரம் நீங்களும் போடலாம். மறைமுக, நேர்முக எதிரிகள், அடங்கிப் போவாங்க. அலுவலகப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். சினிமா, சங்கீதம், ஓவியம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு மேன்மை உண்டு. குடும்பத்துல உற்சாகம் கரை புரளும், பெண்கள் நகை, நட்டு வாங்க வாய்ப்பிருக்கு.






சிம்மம்

எல்லா நண்பர்களோடும் தோள் மேல கைபோட்டு நடந்து போற மாதிரி, இந்த வாரம் தெய்வ பலம், மனத்தைரியம், பண வசதி, தன்னம்பிக்கையெல்லாம் உங்க தோள் மேல கைபோட்டு அழைச்சுட்டுப் போகப் போகுது. இதுவரை இருந்து வந்த தடைகள் பிரச்னைகளையெல்லாம் 'பகவதி' விஜய் ஸ்டைலில் விளாசித் தள்ளுவீங்க. கருத்து வேறுபாடுகள் மறைந்து நண்பர்கள், உறவினர்கள் உங்களைத் தேடி வருவாங்க. குடும்பத்துல மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது.

கன்னி

ஷாருக் ஸ்டைலில் நீங்க பண்ற அதிரடியைப்பார்த்து, இந்த வாரம் எல்லாரும்



மூக்குமேல கை வைக்கப் போறாங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான திருப்பம் வரலாம். புதிய முயற்சிக்கு வெற்றி உண்டு. குடும்பத்துல குருபலம் நிறைந்து இருக்கறதால, சுபமங்கள முயற்சிகள் கைகூடும். பெண்களுக்கு எல்லா வகையிலும் அதிர்ஷ்டமான வாரம். வீடு கட்ட, வாங்க, வாய்ப்புகள் இருக்கு.

நடக்குமென்பார்; நடக்கும்!

இளசுகளுக்கு இனிய ஜோதிடம்!

துலாம்

'சொன்னாலும் கேட்பதில்லை கன்னிமனது' பாட்டு மாதிரி, நீங்க என்ன நினைச்சாலும் மனசு ஒரு பக்கம் இழுத்துக்கிட்டே இருக்கும். இதனால பெரிய சிக்கல் ஏதுமில்லை. அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த விரோத மனப்பான்மை மாறி ஒற்றுமை உண்டாகும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டு. சுபமங்கள காரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. ஏற்றுமதி இறக்குமதி



தொழில் பண்றவங்களுக்கு நன்மை உண்டு.

விருச்சிகம்

இந்த வாரம் எல்லாவகையிலும் அனுகூலம் உண்டு. தொழில் காரணமாக வெளியூர் போக வாய்ப்பிருக்கு. அதனால ஆதாயம் உண்டு. பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்குப் பணம் கொட்டும். சினிமா, சங்கீதம், நாடகம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு, பெயர், புகழ் கூட வாய்ப்பிருக்கு. குடும்பத்துல மகிழ்ச்சி ஒற்றுமை நிலவும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலை நிலவும்.





தனுசு

தெளிவான மனநிலை பிறக்கும். எடுத்த காரியத்தைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீங்க. வழக்கு விவகாரங்கள்ல வெற்றி உண்டு. உங்க திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும். சுயமாத் தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கலைத் துறையைச் சேர்ந்தவங்க புகழ் மழைல நனைவாங்க. குடும்பத்துல கணவன் மனைவி உறவு நிலை சுமுகமா இருக்கும். குடும்பத்தோட பயணம் போக வாய்ப்பிருக்கு. இந்தப் பயணத்தால நன்மை கிடைக்கும்.

மகரம்

'பதினெட்டு வயதில் என்ன பிடிக்கும்?' - என்று நீங்கள் பாடாவிட்டாலும்,



கிரகங்கள் எல்லாம் உங்களைப் 'சுபக்'கெனப் பிடித்திருப்பதால் எதிர்பாராத பயணம் உண்டு. மேலதிகாரிகளின் பாராட்டு, ஆதரவு உண்டு. பத்திரிகை, புத்தகம், எழுத்துத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் உண்டு. கடன் தொல்லைகள் மறையும். வரவேண்டிய பணம் வந்து சேரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம் இது.

கும்பம்


'மனசே மனசே மனசில் பாரம்' - பாட்டு மாதிரி உங்களைச் சோகப்பாட்டு பாடவிட்டுப் பிரிந்து போனவங்க, இப்ப தேடி வருவாங்க. நண்பர்கள், உறவினர்கள் ஓடோடி வந்து உதவுவாங்க. சிலர் புதிய வீடு கட்ட, வாங்க, வாய்ப்பிருக்கு. பெண்கள் தங்கள் எண்ணம் நிறைவேறப் பெறுவாங்க. சிலருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் அமையும். இதனால மனசுல உற்சாகம் கரைபுரளும்.



கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும்.


மீனம்

'அள்ளு அள்ளு தள்ளு தள்ளு'னு சந்தோஷமா இந்த வாரம் பாட்டுப் பாடப் போறீங்க. அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரப் போகுதாமே! எடுத்த காரியத்தைத் திட்டமிட்டபடி நிறைவேற்றப் போறீங்க. பழைய கடன் தொல்லை விலகும். சுயமாத் தொழில் பண்றவங்களுக்கு வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கல், கை கொடுக்கும். குடும்பத்துல பொருள் சேர்க்கை நிகழும். தடைபட்ட சுபகாரிய முயற்சிகள் தொடங்க வாய்ப்பிருக்கு.





வலை பாயுதே...



இளமை ஸ்பெஷல்

கல்லூரி மாணவி அனிதாவின் விருப்பமான பொழுதுபோக்கு இணையதளத்தில் பிரவுஸ் செய்து, புது விஷயங்களைத் தெரிந்து கொள்வது. இதோ அனிதா தரும் சில சுவாரஸ்யமான இன்டர்நெட் பிட்ஸ்...

- புது வருஷத்தை ஒட்டித்தான் எத்தனை விதமான வாழ்த்துக்கள்! என்ன அபார கற்பனை! தொழில் நுணுக்கம்! பொன் மொழிகள் வந்து குவிந்து விட்டன. ரசனைக்கு ஒன்று...

- 'கடந்த காலம்' என்பது மாற்ற முடியாதது; 'எதிர் காலம்' என்பது என்னவென்று தெரியாதது. 'நிகழ் காலம்' தான் விலை மதிக்க முடியாதது. அதனால்தான் அதனை 'present' என்கிறோம்.

- இது ஒரு சீனக் கவிதை! கவிதை நயம் என்னைக் கவர்ந்து விட்டது.

உள்ளத்தில் ஒளி இருந்தால்
மனிதனுக்கு அழகுணர்வு அமையும்.
அழகுணர்வு அமைந்து விட்டால்,
சகிப்புத்தன்மை வந்து விடும்
சகிப்புத்தன்மை வந்துவிட்டால்
தானாக அமைதி நிலவும்.
அமைதி நிலவுகிறபோது,
உலகமே ஆனந்தப் பூங்காதானே?

- வலை வீசினால் ஏகப்பட்ட ஜோக் கிடைக்கும் என்றாலும், தரமான சிரிப்புகளுக்கும், ஜோக்குகளுக்கும் பஞ்சம்தான். விரித்ததில் சிரித்தது இது.

ஒருவர், தன் வீட்டுத் தோட்டத்தில் தர்பூசணி போட்டிருந்தார். ஏராளமாய் விளைச்சல். ஆனால் அக்கம்பக்கத்து வாண்டுகள், சுவர் ஏறிக் குதித்து வந்து, தர்பூசணிப் பழங்களைச் சாப்பிட்டு விட்டுப் போனதுதான் பிரச்னை. தோட்டக்காரர், 'அருமையான பழங்கள்தான். ஆனால் ஒன்றில் மட்டும் விஷமருந்து, ஊசி மூலம் உட்செலுத்தப் பட்டிருக்கிறது. திருடர்களுக்கு இது எச்சரிக்கை' என்று அறிவிப்பு வைத்து விட்டார்.

அடுத்த நாள் தர்பூசணி திருடு போகவில்லை. ஆனால் புத்திசாலியான வாண்டுகள் இன்னொரு அறிவிப்பை எழுதி வைத்து விட்டனர். 'விஷ மருந்து செலுத்தப்பட்ட தர்பூசணி ஒன்று இல்லை; இரண்டு'

தொகுப்பு: கௌதம்
படம்: ஸ்ரீஹரி

சட்டம் படித்தவர் எப்படி விசேஷமாக அதை எடுத்து நீதிமன்றத்திலே வாதாடுகிறாரோ, அப்படி சரணாகதிக்கு ஒரு சட்டப் புத்தகம் எதுவென்று கேட்டால், 'ரஹஸ்யத்ரய ஸாரம்' என்று பதில் சொல்லலாம்.

உயர்ந்த உபநிஷத் அர்த்தங்களையெல்லாம் அப்படியே வடிகட்டி நமக்குக் கொடுக்கிறது ரஹஸ்யத்ரய ஸாரம். அதிலே சொல்கிறார்:

பகவானுடைய ஹ்ருதயத்திலேயே அந்த ஜீவாத்மா இருந்தாலும், இந்த சம்ஸாரத்திலே இவன் விழுந்ததனாலே, **அவனுக்கும்** இவனுக்கும் இடைவெளி ஏற்பட்டுப் போய் விட்டது. அந்த பகவானை விட்டுப் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டுப் போயிற்று.

ராஜா திரும்பி வந்து பார்த்தால், குழந்தையைக் காணோம்! குழந்தையை மறைத்து வைத்து விட்டார்கள் அவர்கள். காட்டவேயில்லை. ஊருக்குப் போன ராஜா, படுத்த படுக்கையாகிவிட்டான். மந்திரிகளெல்லாம் ரொம்ப விசனப்பட்டார்கள். என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. அப்போது சப்தரிஷிகள் காட்டு வழியே வந்தார்கள். அத்ரி, புரு, வசிஷ்டாதி முனிவர்களெல்லாம் இந்தக் குழந்தையைப் பார்த்து, இவன் ராஜகுமாரனாயிற்றே... இப்படி வந்து இந்த இடத்திலே வாஸம் பண்ணுகிறானே, என்று ரொம்ப வருத்தப்பட்டு, 'ராஜகுமாரனைக் கொண்டுபோய் ராஜாவிடத்திலேயே ஒப்படைக்கும்படி, சொன்னார்கள்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

'இது எப்படி?' என்று கேட்டால், ஒரு ராஜாவுக்கு ரொம்ப நாள் கழித்து குழந்தை பிறந்தது. ரொம்ப செல்லமாக வளர்க்கிறான் அந்தக் குழந்தையை. வேட்டைக்குப் போகும் போது கூட, குழந்தையை எடுத்துக் கொண்டு போய் விடுவான். ஒரு நாள் காட்டிலே வேட்டையாடிக் கொண்டிருக்கிற போது, குழந்தை தூங்குகிறது. ரதத்திலே அதைப் படுக்க வைத்துவிட்டு, காட்டுக்குள்ளே வேட்டையாடப் போனான்.

குழந்தை தூக்கம் தெளிந்து எழுந்து, காட்டுக்குள்ளே அது பாட்டுக்கு நடந்து போகிறது... சின்ன ராஜகுமாரன் வருவதைக் கண்டு காடுவாழ் ஜாதியினர், குழந்தையை எடுத்துப்போய்த் தங்கள் ஆடை அணிகலன்களைக் கொண்டு அலங்கரிக்கிறார்கள். அவர்களுடைய ஆடை அணிகலன் என்பது வெறும் தழைகள்! காக்கையினுடைய இறகு, குருவி இறகு, மணி மாலை, புலி நகம்... எல்லாவற்றையும் போட்டு அலங்காரம் பண்ணிவிட்டார்கள்!

அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள்.

ராஜாவிடமும் போய், "உன் பிள்ளை அங்கே இருக்கிறான்; அவனை நீ போய் அழைத்துக் கொண்டு வா" என்று ஆக்ஞாபித்தார்கள். உடனே ராஜா வெகுண்டு எழுந்து, அங்கிருந்து காட்டுக்குள் வருகிறான். எதிர்ப்பட்ட காட்டு ஜாதியினர், குழந்தையை அவனிடமே சமர்ப்பித்தார்கள்.

அதற்குள்ளே அந்தக் குழந்தை பெரியவனாகி விட்டிருந்தான். யுவாவாக இருந்தான். உடனே ராஜா என்ன பண்ணினான்...? தான் பட்டத்திலே உட்கார்ந்து கொண்டு, இந்தக் குழந்தைக்கு யுவ ராஜ பட்டாபிஷேகம் பண்ணி வைத்துவிட்டான்.

யுவராஜ பட்டாபிஷேகம் எதற்கு...? போகத்தை அனுபவிப்பதற்குத்தான்! யுவராஜாவுக்குப் பொறுப்பு கிடையாது. ராஜாவுக்குத்தான் பொறுப்பு அதிகம். எல்லாவற்றையும் அவன் பார்த்தாக வேண்டும்.



23

••

பார்த்தா அருகில்
இல்லாததால்
அலங்காரங்களைத்
துறந்தவள்
சூடாமணியை மட்டும்
ஞாபகமாக புடைவைத்
தலைப்பில் முடிந்து
வைத்திருந்திருக்கிறாள்!

••

இந்த மாதிரிதான் பகவான் நம்மைப் பண்ணுகிறான்...?

அந்த காட்டுவாழ் ஜாதியினர் ஏதோ ஒரு குறுச்சியிலே கொண்டு போய் குழந்தைக்கு வேஷத்தைப் போட்டு வளர்த்தது போல், நாமும் ஏதோ ஒரு வேஷத்தைப் போட்டுக் கொண்டு எங்கோ வளர்கிறோம். இது நம்முடைய ஸ்வரூபமா? நம் ரூபமா...? யோசனை பண்ணிப் பார்க்க வேண்டும். இல்லாத சம்பந்தத்தை ஏறிட்டுக் கொண்டு, அப்பா – அம்மா – மனைவி – மக்கள் – வீடு என்று வாழ்கிறோம்.

ராம கீதையிலே, அயோத்யா காண்டத்திலே, பகவான் சொல்கிறான்; ரொம்ப அழகான விஷயம் இது:

சமுத்திரம் அலை அடிக்கிறது. ஒரு பெரிய மரக்கட்டை அந்த அலையிலே அடித்துக் கொண்டு வரப்படுகிறது. இன்னொரு அலையிலே இன்னொரு மரக்கட்டை கொண்டு வரப்படுகிறது. இரண்டும் அலைகளால் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இரண்டு மரக்கட்டையும் ஒன்றுக்கொன்று இடித்துக் கொண்டு கொஞ்சம் நாள் இருக்கின்றன. ஒரு நாள் ஒரு மிகப் பெரிய அலை வருகிறது. இந்த மரக்கட்டையை அந்தப் பக்கம் தள்ளுகிறது; அந்த மரக்கட்டையை வேறொரு பக்கம் தள்ளுகிறது.

இப்படித்தான் மனைவி – மக்கள் – வீடு என்ற உறவும். அவரவர் செய்த புண்ய – பாபத்துக்கு ஏற்ப, இந்த ஸம்ஸார ஜலதியிலே ஓர் ஆத்மா இன்னொரு ஆத்மாவோடு பார்யா – பர்த்தா என்ற சம்பந்தத்திலே கொஞ்சம் நாள் தங்கியிருக்கிறது. ஒரு நாள் ம்ருத்யு என்கிற தேவதை வருகிறது. இவர்களைப் பிரித்துத் தள்ளிவிடுகிறது.

அப்படியானால் பார்யா – பர்த்தா என்ற சம்பந்தம் சாச்வதமா? இந்த வாழ்வுதான் சாச்வதமா...? இல்லையே!

ஆகையினால், அவனோடுதான் நாம் வாழ்க்கை நடத்த வேண்டும். இது (இப்போதைய வாழ்வு) வந்தேறியது என்பதை உணர்ந்து, அவனுக்கும் நமக்கும் இருக்கிற சம்பந்தமே நிலையானது என்பதை உணர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
பற்றாவான்
நம்மையுடைவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தான்
பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்
தோழி நான்!

என்று ஆண்டாள் பாடினாள். ஏழேழ் பிறவிக்கும் அவன் பற்றாவான் என்றாள். அதைப் பெரியவாச்சான் பிள்ளை ரொம்ப அழகாகச் சொல்கிறார்: 'இது ஒரு குடமுழுக்கிலே போகும் சம்பந்தமில்லையே!' என்று.

ஒரு பந்து – மித்ரரை இழந்தால் பத்து ராத்திரி தீட்டு உள்ள சம்பந்தம் என்று சொல்கிறோம். – இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் தர்ம சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறது. இன்றைக்கு அவற்றை நமக்குச் சரியாக எடுத்துச் சொல்லத்தான் ஆள் இல்லை.



விஷ்ணு புராணத்திலே ரொம்ப அழகாக ஒரு வார்த்தை சொல்கிறார்கள் பராசர மஹரிஷி, வியாஸ மஹரிஷி ஆகிய இருவரும்:

''கலியுகத்திலே அவரவர்கள் சொல்வது தான் தர்மம்!'' என்கிறார்கள்! "ஏனென்றால் யாருக்கும் ஒன்றும் தெரியாது!"

ஒருத்தர் வந்து கேட்கிறார்: 'நான் இப்படிச் செய்யட்டுமா? செய்யலாமா...?'

'என்னிடம் எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்கிறார் கேட்கப்பட்டவர்! 'உங்களுக்கே தெரிந்திருக்குமே!' என்பார். இவருக்குப் பதில் தெரியாததால்தான் இத்தனை பேச்சு!

'சாஸ்திர விரோதமாகச் சொல்கிறீர். நீர் சொல்வது தப்பு' என்று யாரிடமும் இன்று நாம் சொல்லிவிட முடியாது. அவ்வாறு சொன்னால், 'ஒன்றும் தெரியாத இவரிடத்திலே போய்க் கேட்டோமே!' என்று சொல்லிவிடுவார்கள்!

அவரவர்களுக்கு அனுகுணமாக தர்ம சாஸ்திரம் சொல்கிறவர்கள்தான் கலியுகத்திலே வித்வானாக இருக்க முடியும்!

அப்படி அனுகுணமோடு ஆமோதிக்கறவர்களைத் தூக்கி சிரஸிலே வைத்துக் கொண்டு கொண்டாடுவார்கள். எதிராகச் சொல்லி விட்டாலோ 'அவருக்கு ஒன்றும் தெரியாது!' என்ற பேச்சுத்தான்.

பந்து – மித்ர சம்பந்தம் பற்றிச் சொல்ல வந்து, சாஸ்திர விதிகளுக்குப் போயாகிவிட்டது. பூவுலகத்துச் சம்பந்தமெல்லாம் கடைசியிலே ஒரு குடமுழுக்கோடு போய்விடும்! ஆனால், பகவானுக்கும் நமக்குமான சம்பந்தம் இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்குமானது.

நம்மை அவன் விடுவானா, நாம் அவனை விடுவதற்கு ஒரு நாளும் விட மாட்டான். கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவான்.



– சீர்காழி வி.ரேவதி

கல்யாண காலத்திலே ஒருத்தர் சப்தபதியின் போது பெண்ணின் கையைப் பிடித்து, காலைப் பிடித்து அழகாக அம்மியிலே எடுத்து வைத்தார். அதற்காகவே மாமனார் அவருக்கு அழகாக ஒரு சவரன் மோதிரம் பண்ணிப் போட்டார்.

இந்த மாதிரி விவாக சமயத்திலே போட்ட மோதிரத்தை எவ்வளவு கஷ்டம் வந்தாலும் விற்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். அதே மாதிரி மாங்கல்ய தாரண சமயத்திலே, பெண் வீட்டிலே சிரஸிலே போடுகிறார்கள் பாருங்கள், சூடாமணி... ராக்கோடி என்று சொல்வது அதை. ஒவ்வொரு ஸ்திரீயும் இந்தச் சூடாமணியை ரொம்ப ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும். இதனால்தான், 'எல்லா ஆபரணங்களையும் கழற்றி மூட்டை கட்டிப் போட்டாள் சீதை' என்று ராமாயணத்திலே வந்தாலும், பின்னால் அவள் ஆஞ்சநேயன் மூலமாக ராமனுக்குச் சூடாமணியை மட்டும் கொடுத்தனுப்புகிறதாகவும் வருகிறது.

அதே போல் ராஜ்யத்தைத் துறந்து, எல்லாவற்றையும் இழந்த பரமாத்மா, 'ஹனுமானிடம் எவ்வாறு அங்குலியத்தைக் (மோதிரம்) கொடுத்தனுப்பினான்?' என்ற கேள்வி எழும். எல்லாவற்றையும் இழந்த பரமாத்மா, சப்தபதீகரணத்தின்போது போட்ட மோதிரத்தை மட்டும் கையிலே போட்டுக் கொண்டிருக்கிறான். சீதையும் சூடாமணியை மாத்திரம் முந்தானையிலே முடிந்து வைத்துக் கொண்டிருக்கிறாள். பர்த்தா அருகில் இல்லாததால் அலங்காரங்களைத் துறந்தவள் சூடாமணியை மட்டும் ஞாபகமாக புடைவைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்திருக்கிறாள்!

அப்படி மோதிரம் ஒன்றை நாற்பது வருடமாகப் போட்டுக் கொண்டிருந்த ஒருவர், திடீரென்று உபன்யாசத்துக்கு வருகிறபோது அதைத் தொலைத்து விட்டார். எங்கே விழுந்துவிட்டதோ என்று தேடித் தேடிப் பார்க்கிறார். உபன்யாசமே ரசிக்கவில்லை அவருக்கு! வெளியே போகிறார், உள்ளே வருகிறார்... ஒரே சகிதமதி! அவஸ்தைப்படுகிறார். மோதிரம் எங்கோ வழியிலே விழுந்து விட்டது. விழுந்த மோதிரம் இருக்கிறதே... அது எங்கேயாவது, 'ஐயோ! நாற்பது வருஷமாக அவர் கையிலே இருந்துவிட்டு இப்போது பிரிந்திருக்கிறோமே' என்று நினைக்குமா?

அந்த மோதிரத்தினுடைய கதைதான் நம் கதையும். நாம் பகவானை இலட்சியம் பண்ணுவதே இல்லை. 'அவனை விட்டு நாம் பிரிந்திருக்கிறோமே, இதெல்லாம் நிஜமான வாழ்வு இல்லையே; நிலையான சம்பந்தம் இல்லையே!' என்று நாம் நினைக்கிறோமா?

ஆனால், பகவான் பார்க்கிறான்... இவனுக்கு வீணான விஷயத்திலே புத்தி போகிறதே, பற்று ஏற்படுகிறதே, இவனை நாம் எப்படி அடைவது என்று நினைத்து, மோதிரத்தைத் தொலைத்தவரை மாதிரி, நம்மை எப்படி சம்பாதிப்பது? என்று அவன் கவலையோடு அலைந்து கொண்டிருக்கிறான்! அவனுக்குத் தூக்கமே கிடையாது! அப்படி அவன் ஒரு நிமிடம் தூங்கி விட்டால் என்ன ஆகும்!

(தொடரும்)

அத்தனையும் இளமை!



கட்டத்தில் உள்ள முதுமை எழுத்துக்களை (அதாவது மு, து, மை ஆகிய எழுத்துக்களை) நீக்கி விட்டால், கீழே உள்ள குறிப்புகள் உணர்த்தும் விடைகளைச் சுலபமாகவே கண்டுபிடிக்க முடியும். மேலிருந்து கீழோ, இடமிருந்து வலமோ, வலமிருந்து இடமோ குறுக்கிலோ முயற்சி செய்யுங்களேன்.

மு	வா	து	க	ம்	ப	ன்
ஸ்	அ	ல	மை	இ	மு	த
வே	ன்	து	ன்	மை	ஷா	லா
தா	ண	மு	து	டை	மை	ல்
மு	ம்	கி	க	து	ன்	ஆ
மை	ல்	மு	தி	து	மை	ஸ்
க	மு	து	ர்	மு	து	மி

1. ஒரு பிரபல இந்திய டென்னிஸ் வீரர் இவரைக் காதல் திருமணம் செய்து கொண்டார்.

2. காதலர்கள் தெய்வமாகக் கருதும் பாதிரியார்.

3. 'காதல்' என்று தொடங்கும் படங்களையே இயக்குவது என்பது இவருக்கு நேர்த்திக் கடனோ!

4. பிரபல 'காதல் மகனை' இழந்த கவிஞன்.


5. இந்தி(ய)க் கனவுக் கன்னியாக விளங்கியவரின் மகள்.

6. காதலுக்கு நளனும் தமயந்தியும் தூதுவிட்ட பறவை.

7. 'காதல்' என்று தொடங்கும் தொடர் வெளிவரும் வார இதழ்.

8. குவைத்திலிருந்து போலி பாஸ்போர்ட்டில் தப்பிவந்த பிரபல காதலி.

- ஜி.எஸ்.எஸ்.





விடைகள் :

1. ஸ்வேதா (மகேஷ்பூபதி)
2. வாலன்டைன்
3. கதிர்
4. கம்பன் (அம்பிகாபதி)
5. இஷா (ஹேமமாலினி)
6. அன்னம்
7. கல்கி (காதல் பிசாசே)
8. தலால் ஆஸ்மி


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
2003
ESTABLISHED
1968
Sathya
ஃபர்னிச்சர் உலகம்
புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும்
ஃபர்னிச்சர் பொருட்காட்சி
மற்றும்
சிறப்பு விற்பனை
(ஜனவரி 15 வரை)
LIFETIME INVESTMENT
Major Credit Cards accepted
இந்தியாவின் மாபெரும் ஃபர்னிச்சர் ஷோரூம்கள்
மைலாப்பூர் : சத்யா கார்ப்பரேஷன் (20,000 சதுர அடி) 69 & 70, இராயப்பேட்டை ஹைரோடு
(வள்ளுவர் சிலை அருகில்) சென்னை - 4. ☎போன்– 498 2930 / 31, 498 3929
அண்ணாநகர் மேற்கு - DABC Bldg., 6, M T H Rd, (TVS - பாடி எதிரில்),
சென்னை - 50. ☎போன் - 6544929/ 6545029
கோயம்புத்தூர் – 266, மேட்டுப்பாளையம் ரோடு, (சாயிபாபா கோயில் பஸ் ஸ்டாப்),
☎போன் : 2452929, 2452930, 98422 42929

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

கல்கி

KALKI 12.1.2003

இளமை ஸ்பெஷலுடன் இலவச இணைப்பு





கவிதைக்கு வெளியே...

–கபிலன் வைரமுத்து


சில காயில்கள் இரவு முழுவதும் எரிகின்றன.
ஆனால் அவற்றின் புகை அறையின்
மூலைமுடுக்கெல்லாம் சென்றடைகிறதா ?
ஜோதி லேபோரட்டரீஸ் அறிமுகப்படுத்துகிறது.
Red Giant
MAXO
Cyclothrin Coils
Corner-to-Corner Protection.
ரெட் ஜையன்ட் ஸைக்ளோத்ரின் காயில்
மூலைமுடுக்கெல்லாம் பரவி பாதுகாப்பளிக்க.
'Central Insecticide Board'
மாக்ஸோவின் புதிய ரெட் ஜையண்ட் ஸைக்ளோத்ரின் காயில் இரவு முழுவதும் நீடித்து செயல்படுவதோடு இதன் சுருள் சுருளான இயக்கம் அறையின் மூலைமுடுக்கெல்லாம் பரவுகிறது. எனவே, நீங்கள் இரவு முழுவதும் அமைதியாகத் தூங்கலாம்.
MAXO™
Cyclothrin Coils
மூலைமுடுக்கெல்லாம் பாதுகாப்பு
From the house of Jyothy Laboratories Ltd.
Situations/JLL/MAXO Red/02/2002 Tam



இளமை ஸ்பெஷல்!

அணில், புறா இரண்டில் எதுகிட்ட லெட்டர் கொடுத்தா சீக்கிரம் போகும்?

புறாவிடம் கொடுத்தா.

இல்ல. அணிலிடம் கொடுத்தாத் தான் சீக்கிரம் போகும். ஏன்னா, அதுகிட்டேதான் 'பின்கோடு' இருக்கு!

ஒரு சின்ன ரோட்டில் சைக்கிள் போறதுக்கு மட்டும்தான் இடமிருக்கு. ஆனா, அதுலே ஒரு லாரிக்காரன் ஈஸியா போயிடறான். அது எப்படி?

தெரியலையே!

லாரிக்காரன்தானே போறான்... 'லாரி' போகலியே!



அவனும் ஜோக்கினான்!

ராமனும், சீதையும் வெளியே போயிட்டு வந்தாங்க. அவங்க தங்கியிருந்த குடிலோட சாவி தொலைஞ்சுடுச்சு. குடிலுக்கு வெளியே நின்ன அவங்க, அப்ப என்ன பேசி இருப்பாங்க!

அண்ணலும் நோkeyனான். அவளும் நோkeyனாள்.

'கல்யாணமாகாத இளம் பெண்ணொருத்தி கீழே நிற்கிறாள்' இதை ஆங்கிலத்தில் ஒரு வார்த்தையில் சொல்ல முடியுமா?

ஓ, முடியுமே! மிஸ்அண்டர்ஸ்டாண்டிங்!



ஏட்டிக்குப் போட்டி!

சலசலப்பையே பார்க்க முடியாத சென்னை செல்லம்மாள் மகளிர் கல்லூரி, மாணவியரின் கரவொலியில் கலகலத்தது. காலை பதினோரு மணிக்கு கல்லூரி வளாகத்திற்குள் அந்தக் கார் வந்து நின்றதுமே "ஹேய்ய்ய்..." என்று ஆயிரம் குயில்கள் (!) உச்ச ஸ்தாயியில் உற்சாகமாய்க் கூவின. காரின் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார் சேரன். அவ்வளவு தான்... மறுபடியும் ஒரு பெரிய்ய "ஹேய்ய்..."

இயக்குனராகவும் நடிகராகவும் ஜொலித்துக் கொண்டிருக்கும் சேரன், முதன் முறையாகப் பட்டி மன்ற நடுவர் என்ற புதிய முகத்தோடு அங்கே நுழைந்தார்.

கல்கி நடத்திய 'ஏட்டிக்குப் போட்டி!' கல்லூரிப் பட்டி மன்றம், கல்லூரி முதல்வர் பிரேமா பிரபாகரன் தலைமையில், கல்கி ஆசிரியர் சீதா ரவியின் வரவேற்புரையோடு களை கட்டத் தொடங்கியது. மாணவர்களைத் திரட்டி, காவிரிப் பிரச்னைக்காக தஞ்சையில் போராடியவர் சேரன்.

நதிகளின் இணைப்பு



• எஸ். புவனேஸ்வரி

• கே. புவனேஸ்வரி



சாத்தியமா? இல்லையா? என்றுகூட இவரை வைத்து பட்டிமன்றம் நடத்தினால் தகும். என்றாலும், திருந்தாத தமிழ்த் திரையுலகில் 'துறுதுறு' துணிச்சலோடு இறங்கி, நல்ல படங்களை மட்டுமே தரும் இவரது நடுவாண்மைக்கு, சினிமாதான் சரியென்று முடிவு செய்ய சட்டென்று கிடைத்தது, இந்தச் சவுக்கடித் தலைப்பு!

'சினிமாக்கள் முன்னிறுத்தும் கல்லூரிப் பெண்கள் - வெளிப்படை உண்மையே! வியாபாரப் பொய்யே!' சேரனே வியர்த்து விறுவிறுத்துப் போகும் அளவுக்கு, இரண்டு அணிகளில் தலா மூன்று மாணவிகள் வெளுத்து வாங்கினார்கள்.

எஸ். விஜயலக்ஷ்மி

கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு? இன்றைய கல்லூரி மாணவிகள் டேட்டிங் போகிறார்கள். ராகிங் செய்கிறார்கள்.



• நீலாபாய்



• பிரேமா பிரபாகரன், சேரன், சீதா ரவி

கொத்தாக பத்து மாணவிகள் கூடிவிட்டால் போதும். பொது இடத்தில் இவர்களின் கட்டுப்பாடற்ற 'கலாய்ப்புகளை'ப் பற்றிப் பேசினால் நெஞ்சம் பதறும். அவ்வளவு ஏன்? சென்னையில் ஸ்பென்சர் பிளாசா, பிரின்ஸ் பிளாசா





• நித்யா

மற்றும் பிரவுசிங் சென்டர்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவர்களின் இப்போதைய நடை, உடை கலாச்சாரம்! எதிரணித் தோழியர் நமது கல்லூரியை மட்டும் பார்த்துவிட்டு இங்கே பேச வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். – மாணவிகளிடையே குபீர்ச் சிரிப்பொலி.

இன்று பெரும்பாலான கல்லூரி மாணவிகளுக்குத் தியேட்டரிலும் பீச்சிலும், பார்க்கிலும்தானே வகுப்பே நடக்கிறது? இதைத்தான் சினிமாவிலும் பார்க்கிறோம்.

கே. புவனேஸ்வரி :

வியாபாரப் பொய்யே!

சினிமாவில் ஒரு கல்லூரி மாணவரைக் காட்டும் போது, அவரது கையையும், முகத்தையும் தவிர, எதையும் காட்டுவதில்லை. அதுவே ஒரு கல்லூரி மாணவியென்றால் அவ்வளவு தான், உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையிலும் காட்டுகிறார்கள். மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு இரவு பகல் எந்நேரமும் சுற்றுவது போலவும், பீர் குடிப்பதை ஏதோ கோக் குடிப்பதைப் போல கூலாக சாப்பிடுவது மாதிரியும், காட்டுகிறார்கள். இதையெல்லாம் திரையில் பார்க்கிற பெற்றோர்கள், பெண் பிள்ளைகளை எப்படி பள்ளிக்கோ, கல்லூரிக்கோ அனுப்பத் துணிவார்கள்? யதார்த்தத்தில் இல்லாததுதான் சினிமாவில் வருகிறது.

எம். நிலாபாய்

வெளிப்படை உண்மையே!

'வில்லன்' படத்தில் கல்லூரி மாணவிகளை ஜொள்ளர்களாகக் காட்டுகிறார்கள் என்கிறீர்களே! அந்தப் படம் நடைமுறைக்கு மாறாக இருக்கிறது என்று சொல்லி தடை செய்யப் போராடி இருக்கிறீர்களா? கல்லூரி வளாகத்தில் குடிநீர் வரவில்லை, பட்டப் பகலில் வகுப்பறைக்குள் கொசு கடிக்கிறது என்று உப்புப் பெறாத காரணத்திற்கெல்லாம் 'ஸ்டிரைக்' செய்கிற நீங்கள், இது போன்ற உருப்படியான காரணத்திற்காக என்றைக்காவது வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்களா? உங்களால் முடியாது! ஏனென்றால் நெருப்பில்லாமல் புகையாது. வாழ்க்கையில் ஏற்றுக் கொள்கிற நடைமுறையே சினிமாவிலும் வருகிறது!

எஸ். புவனேஸ்வரி :

வியாபாரப் பொய்யே!

சமீபத்தில் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் 'ஏப்ரல் மாதத்தில்' படத்தில் வகுப்பறையைக் காட்டாமல், வெறும் மரத்தடி அரட்டையைக் காட்டுகிறார்களே, அதுதான் வெளிப்படை உண்மையா? கல்லூரி விடுமுறையில் திருநெல்வேலியில் இருக்கும் தனது கிராமத்திற்கு, ஹை ஹீல் செருப்போடும், அரைக்கால் சட்டையோடும் வரப்பில் பாடிக் கொண்டு வரும் 'குஷி' படத்தின் நாயகி ஜோதிகா மாதிரி, நிஜத்தில்

• சேரனுடன்



ஒரு பெண் கிராமத்திற்குள் நுழைய முடியுமா?

பி. நித்யா :

வெளிப்படை உண்மையே!

சினிமா என்பது உண்மையின் நிழலாக இருப்பதால்தான், அடுத்த வீட்டை ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பது போல எல்லோராலும் ரசிக்கப்படுகிறது. சமீபத்தில் வெளிவந்த 'பைவ் ஸ்டார்' படத்தில், கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகும் ஐந்து மாணவ, மாணவிகள் நல்ல நட்போடு வாழ்கிறார்கள். அவர்களது நட்பை அந்தப் படத்தில் வரும் ஒரு பூக்காரிப் பாத்திரம் சந்தேகப்படும். ஒரு மாணவனும், மாணவியும் நட்போடு பழக முடியாது என்று, ஏன் அந்தப் பூக்காரியின் பார்வையில் பார்க்கிறீர்கள்?



• வசந்தி

• விஜயலட்சுமி

ஆடை! ஆடை! என்று அலறுகிறீர்களே, இன்று இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் ஆடை ஜீன்ஸ்தான் என்று உங்களுக்குத் தெரியுமா? அவ்வளவு ஏன், கடந்த ஆண்டு மட்டும் இந்திய காஸ்மெடிக் சந்தையில் ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய்க்கு, அழகு சாதனப் பொருட்கள் விற்றுத் தீர்த்திருக்கின்றன. இவற்றையெல்லாம் மரகதம் பாட்டியும், அம்புஜம் அத்தையுமா வாங்குகிறார்கள்? இளம் பெண்கள்தானே!


சேரனின் தீர்ப்பு :

வங்காள விரிகுடா இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தாலும், ஏதேனும் சூறாவளி கரையைக் கடந்து, செல்லாம்மாள் கல்லூரியில் சுழன்றடித்து ஓய்ந்திருக்கிறதோ, என்று எண்ண வைத்து விட்டது இந்தப் பட்டிமன்றம். இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்களுமே திறமையாக வாதாடியிருக்கிறார்கள். முதலில் அடிப்படையான ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சினிமாக்களை உருவாக்குகிற படைப்பாளி, எங்கோ வேற்று கிரகத்திலிருந்து கை நிறையப் பத்துப் பதினைந்து கதைகளோடு குதித்தவன் அல்ல. இந்த சமுதாயத்தில்தான் அவனும் வாழ்கிறான். இங்கே நடக்கும் சம்பவங்கள், அவனை பாதிக்கின்றன. நிஜ சம்பவங்கள் கதை பின்ன அவனைத் தூண்டுகிறன. இன்னொரு பக்கம், நமது சினிமா வியாபாரமாக இருக்கிறது. வியாபாரத்தையும், லாபத்தையும் நம்பியே இங்கிருக்கும் சினிமாக்காரர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இரண்டரை மணி நேரத்துக்குப் பொழுதுபோக்குப் படம் எடுக்கிறார்கள். இதில் நேர்மையான பொழுதுபோக்குப் படங்கள் நிறைய உண்டு. என்றாலும் விரசமும், ஒழுங்கீனமும் மேலோங்கி நிற்கும் படங்களை மக்கள் அமோகமாக வரவேற்கிறார்கள். இது போன்ற படங்களை நாம் தடை செய்ய வேண்டும் என்று போராடியிருக்கிறோமா?

வெளிப்படை உண்மைகள் கொஞ்சமே என்றாலும், சினிமா சித்திரிப்பில், வியாபாரப் பொய்யாகத் திரித்துக் காட்டுகிறார்கள். காசையும் கொடுத்து தீய எண்ணங்களைத் திரையரங்கிலிருந்து வீட்டுக்குச் சுமந்து வராமல், இது போன்ற படங்களைப் புறக்கணியுங்கள். அப்போது யதார்த்த சினிமா வளரும். வியாபாரப் பொய்கள் குறையும்; மறையும். ○

தொகுப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**



மோர்க்குழம்பு பிரசாதம்!

டாக்டர் எல்.மகாதேவன்

அஷ்ட வைத்தியர்களில் ஒருவரான வெள்ளோடு நம்பூதிரி என்பவர், கேரள நாட்டின் 'வைக்கம்' என்ற இடத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வைத்தியராக இருந்தார். ஒழுக்க சீலர். ஏழை எளியவருக்கு இலவசமாய் வைத்தியம் பார்த்ததால், அவரை மக்கள் கொண்டாடினர். கார்த்திகை மாதம் வைக்கத்தில் கோயில் கொண்டிருந்த சிவ பெருமானுக்கு, அஷ்டமி நாளில் 'தீர்த்தவாரி' என்னும் முக்கிய பூஜையும் தடபுடல் விருந்தும் நடைபெறும்.

ஒரு சமயம், கார்த்திகை தீர்த்தவாரித் திருவிழா அன்று, வயதான பிராமணர் ஒருவர், வெள்ளோடு நம்பூதிரியைக் காண வந்தார். "ஐயா, வைத்தியரே. திருவிழாவில் நிறைய விருந்து சாப்பிட்டு விட்டேன். வயிறு வலிக்கிறது. ஏதாவது வைத்தியம் செய்யுங்களேன்" என்று முனகினார்.

ஆயுர்வேதத்தில் உணவையே மருந்தாகக் கொடுக்கும் சிகிச்சை முறை உண்டு. உணவை, சில மருந்துகளோடு சமைத்து, சாப்பிடக் கொடுப்பார்கள். தனி மருந்தின் தாக்கத்தைத் தாங்க முடியாதவர்கள், மருந்தான உணவைச் சாப்பிட, குணம் கிடைக்கும். இந்த முறைப்படி மருந்து தர எண்ணிய வெள்ளோடு நம்பூதிரி, "ஐயா, பெரியவரே! நான் சில அரிய மருந்துகளைச் சேர்த்து, ஒரு மோர்க் குழம்பு ('கலம்' என்கிற ஆயுர்வேத மருந்து) செய்து தருகிறேன். அதைச் சாப்பிட, உங்கள் வயிற்று வலி குணமாகும். கவலைப்பட வேண்டாம்" என்று ஆறுதல் கூறினார்.

"மிக்க நன்றி ஐயா... கோவில் பூசாரி எனது நெருங்கிய நண்பர்தான். நீங்கள் மருந்து அரைத்து, கோவில் நடையில் நாளை காலையில் வைத்து விடுங்கள். நான் பூசாரியிடம் சொல்லி, மோர்க்குழம்பு (கலம்) வைத்துத் தரச் சொல்கிறேன்." என்று கூறி வயோதிகரும் விடை பெற்றார்.

அன்றிரவு கோவில் பூசாரி, நகர அதிகாரி, வைக்கம் ராஜா எல்லோரும் ஒரே போலக் கனவு கண்டார்கள். கனவில், மிகுந்த அழகும், ஒளியும் பொருந்திய தேவன் ஒருவன் தோன்றி, "நாளை காலை, வெள்ளோடு நம்பூதிரி ஒரு மருந்து அரைத்துக் கொண்டு வருவார். அதை வைத்து மோர்க் குழம்பு தயாரித்து, எனக்கு நிவேதனம் செய்யுங்கள்" என்று கூறி மறைந்தார். மறு நாள், எல்லோரும் இதனை விவாதித்து அதிசயித்தனர்.

"இது நிச்சயம் தற்செயலாக நேர்ந்த கனவு இல்லை. இதில் ஏதோ தெய்வக் குறிப்பு உள்ளது" என்று உணர்ந்த வைக்கம் ராஜா, தேவ பிரச்னம் வைத்து, கனவுக்கான பலனைக் கேட்டார். "இது வைக்கத்து அப்பனான சிவ பெருமானின்

ஆணை'' என்று பிரச்னத்தில் குறிப்பு வரவே, கோயிலுக்கு ஓடினார்கள்.

அதேசமயம், மருந்துடன் அங்கு வந்த வெள்ளோடு நம்பூதிரி, மன்னரும், அதிகாரியும், சொன்ன சேதி கேட்டு, வியந்து போனார். நோயாளி போல தம்மை நாடி வந்த வயோதிகர், சாட்சாத் சிவனே என்றும், தாம் மருந்து தயாரித்திருப்பது வைத்தியர்களுக்கே வைத்தியரான வைக்கத்தப்பனுக்கே என்றும் அறிந்து புளகாங்கிதமடைந்தார்.

பயபக்தியுடன் மோர்க்குழம்பு தயாரித்து, வைக்கத்து அப்பனுக்கு நிவேதனம் செய்து ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

வைக்கத்துக் கோயிலில், இப்போதும் வெள்ளோடு நம்பூதிரி பரம்பரையில் வந்தவர்கள், இந்த வழிபாட்டைச் செய்து வருகிறார்கள். கடும் வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் வைக்கத்தப்பன் பிரசாதம் சாப்பிட்டால், வலி பறந்து போகும் என்பது நம்பிக்கை.

வாழ்க்கை முறையைச் சரியாக அமைத்துக் கொள்ளாமல் வைக்கத்தப்பன் அருளை மட்டும் நாடினால் பலனிராது.

நெஞ்சு எரிச்சல், வயிற்று வலி, புளித்த ஏப்பம் போன்ற அறிகுறிகள் அல்சர் நோயின் அடையாளம். ஜீரண உறுப்பில் புண் ஏற்பட்டால் அதன் காரணமாக இவை தோன்றலாம். வயிற்றில் உள்ள குடல், சிறுகுடல் மற்றும் ஜீரண உறுப்புக்களின் மேல் அரிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக புண்ணாவதற்கு அல்சர் என்று பெயர். வயிற்றில் உண்டானால் அதற்கு 'கேஸ்ட்ரிக் அல்சர்' என்று பெயர். சிறுகுடலில் உண்டானால், டியோடினல் அல்சர் என்று பெயர்.

வயிறு என்று சொல்லக்கூடிய ஆமாசயம், அதன் மேல்பகுதி கபத்தினால் ஆனது. அதன் கீழ்ப் பகுதியோ, பித்தத்தினால் ஆனது. பித்தம் தனது உஷ்ண குணத்தைக் கூட்டி, கபத்தை அழித்து, புண்களை ஏற்படுத்தும் தன்மை உடையது. நாம் உண்ணும் உணவு செரிப்பதற்கு, வயிற்றில் ஹைட்ரோ குளோரிக் அமிலமும், பெப்சின் என்ற பொருளும் உற்பத்தியாகின்றன. இவற்றின் சமநிலைமை பாதிக்கப்படும் போது அல்சர் தோன்றுகிறது.

'ஓ பாசிடிவ்' என்ற இரத்த வகையைச் சார்ந்தவர்களுக்கு வயிற்று நோய்கள் அதிகமாகக் காணப்படுவதாக குறிப்பு கூறுகிறது. நமது சாஸ்திரப்படியும் இவர்கள் பித்தப் ப்ரக்ருதிகளாகவே இருக்கிறார்கள்.

குடலின் மேற்பகுதியில் அரிப்பு ஏற்படாமல் இருக்க, அதற்கு மேல் மெல்லிய படலம் ஒன்று உள்ளது. தவிர, சிறுகுடல் அட்வான்ஸ் அமிலக் கலவையின் வேகத்தைத் தணிக்க ஆல்கலைன் என்ற பொருளை தானே உற்பத்தி செய்து, அல்சர் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்கிறது. இதெல்லாம் மீறி அல்சர் ஏற்படுகிறது என்றால் ஆச்சரியமான விஷயம்தான். காரம், புளி, ஊறுகாய், கோழிக்கறி போன்ற உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவது, பரபரப்பான வாழ்க்கை, நேரத்திற்குச் சாப்பிடாமல் இருப்பது, இரவில் தூங்காமல் இருப்பது, அதிகப்படியான மதுப்பழக்கம் போன்றவை, அல்சர் நோய்க்குக் காரணமாகின்றன. சரியான

சிறு தூண்டில் காதல்!

இசையைப் பின்னணியாகக் கொண்டு கொஞ்சம் நகைச்சுவை, கொஞ்சம் சென்டிமெண்ட் என்று கொஞ்சும்படி 'ஸரிகம பாப்பா'வை சீதா ரவி வடிவமைத்திருந்தது வெகு நேர்த்தி!

- சாந்தி சுந்தர், நெய்வேலி

கதை நாயகியை எவரெஸ்ட் உயரத்திற்குத் தூக்கி, காதலெனும் சிறு தூண்டில் மூலம் வெகு சாமான்யளாக்கிய கதைப் படைப்பு அற்புதம்.

- கொ.மூர்த்தி, குட்டலாடம்பட்டி.

சுருதி மாறாத கச்சேரித் தொடர் ஸரிகம பாப்பா, சீஸனுக்கேற்ற சிரிப்பு!

- ஆர். நாகராஜன், சென்னை

அமரர் கல்கி போலவே மெல்லிய நகைச்சுவையுடன் 'மங்களமாக'க் கதையை முடித்தது ரசிக்க வைத்தது.


- முகதி. சுபா, நெல்லை



ஒட்டிக்கவா... கட்டிக்கவா...?

பயனீர் எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் என்ற டி.வி. நிறுவனம் 'லிக்விட் க்ரிஸ்டல் டிஸ்ப்ளே' எனப்படும் எல்.ஸி.டி. டி.வி.க்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த டி.வி.யைச் சட்டையிலோ கைப்பையிலோ ஒட்டிக் கொள்ளலாம் அல்லது வாட்ச் போல கட்டிக் கொள்ளலாம். இந்த டி.வி.யின் விலை? ஒரு லட்சம் மட்டுமே!

- ஆர். லலிதா.



நேரத்தில் சாப்பிடுவதைப் போல சரியான நேரத்திலும் வயிற்றைக் காலி செய்ய வேண்டும். சில நேரங்களில் கிருமிகளால் வயிற்று வலி ஏற்படலாம். ஹெச் பைலோரி என்ற கிருமியினால் வயிற்று வலி ஏற்படலாம். சில நேரங்களில் பேரியம் மீல் அல்லது எண்டோஸ்கோபி பரிசோதனை தேவைப்படுகிறது.

இரைப்பையில் ஏற்படுகின்ற புண்ணை இரைப்பைப் புண் என்றும், குடலில் ஏற்படுகின்ற புண்ணை குடல் புண் என்றும் வழங்குவர். ஆயுர்வேதத்தில் இதற்கு, பித்த குல்மம், பரிணாம சூலம், அன்னத்ரவ சூலம் என்று பெயர்.

அல்சர் நோயாளிகள் ஒரே வேளையில் உண்பதைவிட, இடைவெளிவிட்டு சிறிதாக உண்ண வேண்டும். இதற்கு small frequent meals என்று பெயர். இரைப்பையில் புண் இருந்தால் சாப்பிட்டவுடன் வயிற்றில் வலி உண்டாகும். சில சமயம் இவர்கள் வாந்தி எடுப்பார்கள். ஆகவே உடல் மெலிந்து சற்று தேறாமல் போவதுமுண்டு. சில நேரங்களில் அல்சர் ஏற்பட்டு மலம் வழியாக இரத்தம் வெளியேறி, சோர்வை ஏற்படுத்துவதும் உண்டு. சிறுகுடலில் புண் இருந்தால் மேல் வயிற்றில் வலி இருக்கும். இரைப்பையில் உணவு இல்லாமல் காலியாக இருக்கும்போது வலி அதிகமாக இருக்கும். சாப்பிட்டவுடன் வலி குறைந்து விடும். மேலும் சாப்பிட்டவுடன் குமட்டல், வாயில் புளிப்பு நீர் ஊறல், நெஞ்செரிச்சல் போன்ற அறிகுறிகள் இருக்கும்.

அல்சர் நோய் உள்ளவர்கள் பரபரப்பில்லாத வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மன அமைதியாக இருக்க வேண்டும். குளிர்ந்த பாலை தினசரி பருகலாம். புளிக்காத மோர், இளநீர் இவற்றைப் பருகலாம். வெண்பூசணி, முட்டைக்கோஸ் போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தலாம். மணத் தக்காளிக் கீரையை அகத்திக் கீரையுடன் சேர்த்து கஞ்சியிலோ, குழைந்த சோறிலோ, நெய்விட்டுச் சாப்பிட்டு வரலாம். கத்தரிப் பிஞ்சு, வெண்டைப் பூ, புடலைப் பிஞ்சு, வாழைத்தண்டு இவற்றை அதிகமாகச் சாப்பிடலாம். பேயன் வாழைப் பழம் மிகவும் சிறந்தது.

ஆயுர்வேதத்தில் அல்சரைக் குணப்படுத்துவதற்கு மஹா திக்தகம் கஷாயம், திரிபலா சூரணம், காமதுகா ரசம், தாடிமாதி நெய், மஹா சங்கவடி போன்ற மருந்துகள் முக்கியமாக உள்ளன. அவிபத்தி சூரணம் என்ற சூரணத்தைப் பாலில் சேர்த்துக் கொடுத்து, வயிற்றை சுத்தி செய்த பிறகு இந்த மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இந்துகாந்தக்ருதம் என்று சொல்லக்கூடிய மிகப் பிரசித்தமான ஒரு க்ருதத்தையும் புண் ஆறுவதற்காகக் கொடுக்கின்ற பழக்கம் இருந்து வருகிறது. பிச்சி இலைக் கஷாயம் வயிற்றுவலிக்கு ஒரு சிறந்த மருந்தாகும். மருந்து, உணவுக் கட்டுப்பாடு, மன அமைதி, இந்த மூன்றும் சேரும்போது, அல்சர் விரைவில் குணமாகும்.

(தொடரும்)

கபிலன் வைரமுத்து



'இளைஞர்கள் புகைக்கக் கூடாது, மது அருந்தக் கூடாது, போதைப் பொருள்களின் பக்கம் தலைவைத்தும் படுக்கக் கூடாது. மாறாக, அவர்கள் சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும்.'

இதையெல்லாம் மூத்தவர்கள் சொன்னால் அதன் பெயர் உபதேசம் - வழக்கமானதுதான். ஆனால் இளைய தலைமுறையின் ஒரு பிரதிநிதியே செய்தால்! - அதுவும் ஓர் இயக்கத்தின் மூலம் இதை நடைமுறைப் படுத்த முயற்சித்தால், அது மகிழ்ச்சியான செய்திதானே? அப்படி ஓர் இயக்கத்தை ஈடுபாட்டுடன் துவங்கியிருக்கிறார் கபிலன். கவிஞர்கள் வைரமுத்து பொன்மணியின் மகன்.

இரு கவிதைத் தொகுப்புகளை வெளிக்கொணர்ந்திருந்தாலும் "எனக்குக் கவிதை கூட இரண்டாம் பட்சம்தான். இந்த சமூக இயக்கம்தான் எனக்கு மிக முக்கியமானதாகப் படுகிறது" என்கிறார் கபிலன்.



'அப்பா அடிக்கடி என்னிடம் பகிர்ந்து கொண்ட ஓர் ஆதங்கம்தான், இந்த இயக்கம் உருவாக முக்கியக் காரணமாக அமைந்தது. ''தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சென்ற நூற்றாண்டை சுதந்திரப் போராட்டக் காலம், திராவிட இயக்கங்களின் காலம், தொழில்நுட்பக் காலம் என்று மூன்றாகப் பிரிக்கலாம். சுதந்திரப் போராட்டக் காலத்தில் மற்ற பல நாடுகளைப் போலவே, தமிழகத்திலும் இளைஞர்களிடையே ஒருங்கிணைப்பு இருந்தது. நாடு விடுதலை அடைந்த பிறகு சற்று தொய்வு கண்ட அந்த இளைஞர் ஒருங்கிணைப்பு, திராவிட இயக்கங்களின் எழுச்சியின் போது மீண்டும் புத்துயிர் பெற்றது. இப்போதைய தொழில்நுட்பக் காலத்தில் இளைஞர்கள் பல்வேறு திசைகளில் சிதறியிருக்கிறார்கள். அவர்களை எந்த இயக்கமும் இணைப்பதாகத் தெரியவில்லை" என்பார் அப்பா.

ஏன் அப்படி ஓர் ஒருங்கிணைப்புக்கு நானே முயற்சிக்கக் கூடாது? என்று எண்ணினேன். அதுவும், இந்த இயக்கம் சகோதரத்துவத்தை பரப்புவதாக இருக்க வேண்டும் என எண்ணினோம். ஜாதி மத வேறுபாடில்லாத வருங்கால சமுதாயம் உருவாகவும் எங்களுடையதைப் போன்ற இயக்கங்கள் உதவும் என்ற நம்பிக்கை இருந்தது. எங்கள் தமிழாசிரியரிடம் கேட்ட போது ஊக்கமளித்தார். "இது ஒரு முதல் புள்ளியாக இருக்கலாமே. எல்லாப் பெரிய இயக்கங்களுமே ஒரு சிறிய புள்ளியிலிருந்துதான் தொடங்கின" என்றார்.

'ப்ளஸ் டூ' படித்த பிறகு எங்கள் பள்ளி நண்பர்கள் வட்டம் பல்வேறு கல்லூரிகளுக்

குப் படர்ந்தது. அங்கங்கே அவரவரும் முயற்சி செய்ய, இயக்கத்தின் எண்ணிக்கை அதிகமானது. வெறும் பத்துப்பேர் என்று ஆரம்பித்த எங்கள் இயக்கத்தில், இன்று எழுபதுபேர் உறுப்பினர்கள். எங்கள் கல்வியை பாதிக்காத அளவில், ஞாயிற்றுக் கிழமைகளில் சில சின்னச் சின்ன சமூக சேவைகளில் ஈடுபடுகிறோம். மாணவர்கள் என்பதால் பொருளாதாரக் கோணத்தில் பெரிய அளவில் செய்ய முடிவதில்லை என்றாலும், உடலுழைப்பை இளைஞர்களால் அதிகமாவே அளிக்க முடியுமே!

'User Group Integration 03' என்ற வலைத்தளமும் எங்கள் இயக்கத்துக்கு உண்டு. உலக அளவில் இதைப் பரப்ப உள்ளோம்.

ஆனந்தப் படுகின்றனர் கபிலனின் பெற்றோர்.

கவிதைக்கு வெளியே...

''கபிலன் தேர்ந்தெடுத்திருப்பது சரியான பாதை என்றே எனக்குப் படுகிறது. படிப்பு, தொழில், எதிர்காலம் என்ற ஒரே பாதையில் இளைஞர்களை அழைத்துச் செல்லக் கூடாது. உணவு போல நல்ல உணர்வுகளையும் பெற்றோர் வளர்க்க வேண்டும். அந்த உணர்வு விதைகள் விருட்சமாக வளரும் போது பெற்றோருக்கு நிச்சயம் பூரிப்பு உண்டாகும்'' என்கிறார் கவிஞர் பொன்மணி வைரமுத்து.

"பெரிய மகனுக்கு நெய்தல் நிலக்கவிஞன் கார்க்கியின் பெயரையும், சின்னவனுக்கு குறிஞ்சி நிலக் கவிஞன் கபிலன் பெயரையும் வைத்தோம். கபிலன் தொடக்கத்தில் எழுதிய கவிதையே தற்செயலாகக் குறிஞ்சி நிலம் தொடர்பானதாக அமைந்தது. 'சிறுமலை' யில் இயற்கையைப் பற்றி அவன் ஒன்பது வயதில் எழுதிய கவிதையே அவனுடைய முதல் கவிதை. பறவைகள், விலங்குகள், மலை ஆகியவை குறித்துத்தான் அவனுடைய முதல் கவிதை இருந்தது.



கபிலன் எப்போதாவது தேர்வில் கொஞ்சம் குறைந்த மதிப்பெண்கள் பெற்றாலும், அது குறித்து நான் கடிந்து கொள்வதில்லை. ஏனென்றால் கல்வி மட்டுமே வாழ்க்கை இல்லை. கபிலனிடம் வாசிப்புப் பழக்கம் மிகவும் அதிகம். தத்துவம், உளவியல் பார்வை ஆகியவையும் உண்டு. பத்து வயதிலேயே அவனது வயதுக்கு மீறிய பக்குவம் ஏற்பட்டு விட்டது! மகாத்மா காந்தி, லெனின், விவேகானந்தர், பாரதியார் ஆகியோரை அப்போதே அவனால் உள்வாங்கிக் கொள்ள முடிந்தது. அதற்காக இளம் வயதுக்குரிய இயல்பான சின்னப் பொழுது போக்குகளில் ஈடுபட்டதில்லை என்று கிடையாது. என்றாலும் அவன்





"நான் இந்த அளவு உயர்ந்ததுக்கு நீங்க தான் காரணம்!"

"நான் எதுவும் பண்ணலையே, உன்னைக்கூட சிஷ்யனா சேர்த்துக்க முடியாதுன்னு சொன்ன என்னைப் போய் பாராட்டுறியேப்பா!"

"அதனாலதான் சார் நன்றி சொன்னேன்!"

- அ. செந்தமிழ்

தனிமையை நேசிப்பவன். அவனைப் பொறுத்தவரை அறிவுரைக்கு அதிக அவசியமின்றிப் போனது. பொறியியல் கல்லூரியில் சேரும்போது "இனிமேல் என்னால் கவிதை எழுத முடியுமாம்மா?" எனறு கவலையுடன் கேட்டான். ஆனால் இப்போது காலையில் கல்லூரிக்கு பஸ்ஸில் ஒருமணி நேரப் பயணத்தின்போது ஒரு கவிதை, மாலை வரும்போது ஒரு கவிதை என்று எழுதுகிறான்.'

'கணவருக்கும் மகனுக்குமிடையே கவிதைகள் எழுதும் விதத்தில் ஏதாவது முக்கிய வேறுபாடு தென்படுகிறதா?' என்று கேட்டோம். "அவர் எழுத்துக்களில் ஒரு முதிர்ச்சி இருக்கும். கபிலனின் எழுத்து இறுக்கமில்லாமல் லகுவாக ஒரு பட்டாம் பூச்சியின் பயணம் போலச் செல்வதாக எனக்குப் படுகிறது. கபிலனின் தொடக்க காலக் கவிதைகளில் ஒரு கவியரங்கம் போன்ற ஒரு 'மலைப் பிரசங்க'த் தொனி வெளிப்படும். இப்போது அது மாறியிருக்கிறது" என விமர்சிக்கிறார்.

இவரது கவிதைகளைப் பெற்றோர் மெருகேற்றியிருக்கிறார்களா? நீளம் குறித்தும் எங்காவது நேர்ந்திருக்கக் கூடிய ஒற்றுப்பிழைகள் குறித்தும் ஆலோசனைகள் கூறியதுண்டு. மற்றபடி அதிக மாறுதல்கள் தேவைப்பட்டதில்லையாம்.

"கல்லூரிக்குப் போகும் போதும், அங்கு பயிலும்போதும், அங்கிருந்து வரும் போதும் கண்ணில் தென்படும் நிகழ்வுகள் எனக்குள் ஏற்படுத்தும் பாதிப்புகளைத்தான், கவிதையாக வடிக்கிறேன். "என்சைக்ளோபீடியா" படித்த போது, பூச்சிகள் உறங்குவதில்லை என்ற விந்தையான உண்மை தெரிய வந்தது. தூக்கத்தைப் பார்த்துக் கூறுவதான 'கலைவதில்லை' கவிதைக்கு அது உந்துசக்தியாக அமைந்தது. தமிழ்மீடியம் படித்து விட்டு பொறியியல் கல்லூரியில் சேர்ந்த சில சக மாணவர்களின் முகத்தில் கண்ட பயம், என்னை மிகவும் பாதித்தது. பெற்றோர்களின் கட்டாயத்தினால் பலியாடுகளைப் போல அவர்கள் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப் பட்டிருந்தார்கள். இதுவும் கவிதை வடிவம் பெற்றது.

அண்ணன்தான் என் கவிதைகளை நிறைய விமர்சிப்பார். அவரும் நிறைய கவிதைகள் எழுதுவார். என்றாலும், தொழில் நுட்ப வழியிலேயே முழுமையாக இறங்கி விட்டார். தனது படைப்புகள் பிரசுரமாவதில் அவருக்கு ஆர்வமில்லை.

கவிதைகளில் ஒரு மாற்றம் வந்துவிட்டது என்பதில் குறை இருக்கிறது கபிலனுக்கு. 'முன்பெல்லாம் கவிஞர்கள் உலகின் பிரச்னைகளை எடுத்துரைத்தார்கள். ஆனால், வரவர சொந்தவீடு, தனது தொலைந்து போன கைக்குட்டை, மறதியில் எங்கோ வைத்துவிட்ட பர்ஸ் போன்றவற்றையே முக்கியமாக எழுதத் தொடங்கி விட்டார்கள். தவிர யதார்த்தம் என்ற பெயரில் அவநம்பிக்கையை கவிதைகள் உருவாக்கக் கூடாது என்பது என் எண்ணம் என்கிறார்.

வைரமுத்து எனும் பெரும் பிம்பத்தின் மகன் என்பது சுகம் மட்டுமா அல்லது அதுவே அதிக எதிர்ப்பார்ப்பை உண்டாக்குவதால் சுமையா?

"எனக்கு நிறைய ஊக்கம் கொடுத்தது அப்பாவும் அம்மாவும்தான். அவங்க இல்லேன்னா நான் யார் என்பதே பலருக்குத் தெரியாமல் போயிருக்கும். அந்த விதத்தில் அவர்கள் எனக்கு பலம் மட்டுமே" என்கிறார் கபிலன்.

இப்போது பல இளைஞர்கள் திரைப் பாடல் எழுத வந்து விட்டார்கள். அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தால் கபிலனும் களம் இறங்கிவிடுவாரோ? "மாட்டேன். எனக்கு சினிமாவில் ஆர்வம் இல்லை அரசியல் பற்றிய அனுபவம் இல்லை. தவிர சேவை, இயக்கம் என்று இறங்கி விட்டால் அதில் முழு வீரியத்துடன் ஈடுபட வேண்டும் கவனம் சிதறக் கூடாது என்று எண்ணுகிறேன்" என்கிறார் கபிலன்.

- ஜி.எஸ்.எஸ்.

அட்டை, வண்ணப்படங்கள்: யோகா



திருமாலின் இரண்டு அவதாரங்களான ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் வந்து புனித நீராடிய பெருமை இராமேஸ்வரத்திற்கு உண்டு!

புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில்
தை அமாவாஸை திதியில்
அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். திருமாலின் அவதாரங்களான ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலனை கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் நீராடி அன்னதானம் செய்தால் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளில் நீராடிய புண்ணிய பலனும் ஒருசேர கிடைக்கிறது. இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோக க்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: 4900303, 4900603 Fax: (044)4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

உடைந்தால்
கலங்குவாயென்று
ரப்பர் வளையல்கள்
வாங்கிக் கொடுத்தேன்
நீயோ
அளவு சரியில்லை என
இளைக்கத் தொடங்கிவிட்டாயே...

அப்போது அவனுக்கு வயது பத்தொன்பது. சினிமா பார்ப்பதை முழு நேரத் தொழிலாகவும், கல்லூரிக்கு வருவதை உப தொழிலாகவும் கொண்டிருந்தான். அவன் கல்லூரிக்கு வருகிற நாட்களில் எங்கள் முகத்தில் உற்சாகமும், கதை கேட்கிற ஆர்வமும் நிரம்பி வழியும், எனில், கதைகளின் பெட்டகம் அவன். பெரும்பாலான கதைகளில் வருகிற காதல் சாகசவீரன் அவனாகவே இருப்பான்.

அவனால் அட்சரம் பிசகாமல் ஒரு பாடலைச் சிறப்பாகப் பாட முடிந்தது. பாடலுக்கான பாவங்களை இயல்பாக அவன் முகம் பொருத்திக் கொள்ளும். எங்களால் அவனைப் போல பாடவோ, கதையளிக்கவோ முடிவதில்லை. 'எங்கள்' என்றால் ஆறழுபேர். அறந்தாங்கி தொழில்



காதல் பிசாசே

நுட்பக் கல்லூரி முதலாமாண்டு மாணவர்கள். 'ராக்கிங்'கை ஒழிப்பதற்காக ஒன்றிணைந்து செயல்பட்டவர்களில் நான்தான் வயது குறைந்தவன். என்றாலும் வாடா, போடா என்றழைக்கும் உரிமையைத் தந்திருந்தார்கள். அந்த ஏழு பேரில், எப்போதாவது கல்லூரிக்கு வந்து எப்போதும் அவனைப் பற்றியே பேசுமளவுக்கு, கதைகளும் பாடல்களும் சொல்லிப் போகிறவன் அவன் மட்டுந்தான். அடுத்த வாரம் நல்ல சேதியோடு வருகிறேன் என விடை பெற்றுப் போனவன்தான்.


யுகபாரதி

சாகசம் நிரம்பிய அவனது காதல் கதையின் முதல் அத்தியாயம் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த வித்யாவதியின் கவிதைகள் போல இதமானவை. இந்தியத் தொல் கதை மரபை அடியொற்றி, மைதிலி மொழியில் புனையப்பட்ட இப்பாடல்கள், பரவசமூட்டுவன மட்டுமல்ல, பாதுகாக்கத் தக்கன. கவிஞர் பாலாவின் மொழிபெயர்ப்பு. ஒவ்வொருவருக்கும் கண்ணன் ஒரு கவர்ச்சிகரமான கதாநாயகனாகவே தென்படுகிறான். எத்தனையோ அவதாரம் கொண்டிருந்த போதும் கண்ணன் என்றதும் கோபியர்கள் சூழ அவன் குதூகலித்த கதைகளே நினைவில் வரும். எனில், கண்ணன் காதலர்களின் காதலன், ராதை காதலிகளின் தலைவி. வித்யாபதியின் கவிதையும் இதை வழி பற்றியே எழுதப்பட்டுள்ளது. அரசர்களின் அந்தப்புரத்துக்காக எழுதியவைதான் இவை, என்றாலும் மனித உணர்வுகள் மீளிர; காலத்தால் காப்பாற்றப்பட்டிருக்கிறது. கண்ணனாய், தானே மாறி, ராதையின் அழகைப் பாடுகிறார் வித்யாபதி.

பௌர்ணமிப் பொன்னிலவை

உரைகல்லில் தேய்த்து
உருவாக்கியதுதான் உன் முகம்
அப்போது
உதிர்ந்த பொடிகளே

உயரச் சென்று
நட்சத்திரங்களாயின.
மிஞ்சிய துகளை
மேலும் தூய்மை செய்து



உன் நெஞ்சிரண்டையும்
இறைவன் வடித்தான்.

உடல் தொடர்பான வர்ணனைகள் தமிழைப் போலவே வடமொழியிலுமுண்டு. சில சமயம் நம்மை விடவும் காத்திரமான சொல்லாலே காண முடிகின்றது. உடலின் உணர்வெழுச்சியை பக்தியோடோ, இயற்கையோடோ ஒப்பிட்டுத் தப்பித்துக் கொள்வது தமிழ் மரபு. வடமொழியில் பெரும்பாலும் அந்தச் சிக்கலில்லை என்கிறார்கள். கண்ணனாய் இருந்த வித்யாபதி இப்போது ராதையாகிப் பேசுகிறார். கூடுவிட்டு கூடு பாய்தல் என்பது கவிஞர்களாலும் மந்திரவாதிகளாலும் மட்டுமே இயலும். கவிதையும் மந்திரமும் ஒட்டிப் பிறந்த ரெட்டைக் குழந்தைகள்

அவன் புல்லாங்குழலிலிருந்து
வெளிவந்த விஷமூச்சு
என்
மேனியில் வந்து கவிந்தது.
தடைகள் மீறி
என் செவிக்குள் நுழைந்தது
என் கர்வம் கரைத்து
இதயத்தையே உருக்கியது
மகிழ்ச்சி ஊசிகள்
உடலைக் குத்தின

மகிழ்ச்சி ஊசிகள் உடலைக் குத்தின என்பதுதான் இந்தக் கவிதையின் சாறு. நானென்னும் கர்வம் கரைந்து, என் காதலன் நீயென்கிற கர்வத்தை உண்டாக்குவது காதலின் தனித்துவம். ஒருவரின் வாழ்வில் நேர்கிற காதலனுபவங்கள் கேட்கிறவனின் இதயத்தில் தங்கிவிடும்.

எங்கள் இதயத்திலும் அவன் கதை தங்கிவிட்டது. அடுத்த வாரம் வருகிறேன் என்றவன், வந்தான். பேசுவதற்கு முடியாமல் மருத்துவமனையில் கிடக்கிறான் என்கிற செய்தியாக.

கல்லூரியில் இருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில்தான் அவன் வீடிருந்தது. இவ்வளவு நெருக்கத்தில்

11



''உன் சமையலை கழுதைதான் திங்கணும்!''

''சத்தமாச் சொல்லாதீங்க... உள்ளே உங்கம்மா சாப்பிட்டுக்கிட்டிருக்காங்க!''

— உ. ராஜாஜி

கல்லூரி இருந்தும், அவன் கல்விக்குத் தொலைவில் நிற்பதையே விரும்பினான். மருத்துவமனையில் இருக்கிறான் எனத் தெரிந்ததும் கல்லூரியே கிடுகிடுத்தது. அவன் சொன்ன சில கதைகளில் வந்த யுவராணிகளால் நேர்ந்த காயமோ என அவரவர் கற்பனைக்கு எட்டிய தூரம் பேசிக் கொண்டே புறப்பட்டோம். 'உயிருக்கு ஆபத்தில்லையே' என்பதுதான் செய்தி சொல்லி வந்தவரிடம் கேட்ட முதல் கேள்வி. எனவே, பரபரப்பு மங்கியிருந்தது.

கூட்டங் கூட்டமாய் மாணவர்கள். மருத்துவமனையிலும் அன்று கதாநாயகன் அவன்தான். 'எங்கிருந்தாலும் பேசப்படுகிறவனாகவே இருக்க விரும்புகிறான் போல' செவிலியரும் மருத்துவரும் கிசுகிசுத்துக் கொண்டனர். வெளியில் அவனின் தாய் கதறிக் கொண்டிருந்தாள். "நீங்களெல்லாம் இல்லையா ராசா... அழுகு போல. இந்தப் பய மாத்திரய முழுங்கி செத்துப் போறேன்னு படுத்துட்டாம்பா... ஒத்த மகன்னு ஆசயா வளத்தோம்... தம்பீ.. தம்பீ..." பதறிய தாயை அமைதியாக இருக்கச் செய்ய, பலரும் பாடுபட்டோம். உள்ளே சென்று அவனைப் பார்த்தோம். தப்பிப் பிழைத்தவனின் கண்கள் பிரகாசமாய் விரியத் தொடங்கின. இதழ்கள் எதையோ சொல்ல வந்தும் முடியாமல் தவித்தன. மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டு விடுதிக்குத் திரும்பினோம்.

அன்று மொட்டை மாடியில், நிலவு அவனைக் கேட்டிருந்தது. காற்று முழுவதும் அவன் செய்கை, அவன் பாடல். அவன் கவிதை. அவன் உடை, என பறந்து பறந்து அவன் காதலி என்பதில் போய் முட்டி நின்றது. அதுவரை, அவன் காதலிப்பதாகச் சொன்ன பல கதைகளை, கற்பனையென்றே நம்பியிருந்தோம். அவன் காதலித்த பெண் வீட்டிற்கு விஷயம் தெரியப்போக, இருவரும் முடிவெடுக்கத் தெரியாத வயதில் திணறித் திணறி செத்துப் போகத் துணிந்திருக்கிறார்கள்.

அந்த வயதில் இதுவொரு வீரச் செயல். மறுபடி அது போன்று பல வீரச் செயல்களைக் கேள்விப் பட்டாலும் முதல் வீரன் கல்லூரியில் அவன்தான். உயிர் பிழைத்து, ஓராண்டு படிப்பில் பின் தங்கி, வாழ்வின், குடும்பத்தின் பொறுப்பை தலையேற்றி, இப்போது அவன் எங்கேயோ இருப்பான். நிச்சயமாக முதல் காதலின் பூவை அவன் இதயம் சூடியிருக்கும். இயல்பு அதன் இதழ்களை மென்று தின்றிருக்கும். வித்யாபதி சொல்வது போல,

அவன் கண்ணில் வழிந்த நீர்
காலில் விழுந்து குளமாயிற்று
அதனால்
நிலத்தில் வளர்ந்த தாமரை கூட
நீரில் வளரும் தாமரை
ஆயிற்று
பனி கழுவிச் சென்று
இளந்தளிர் போன்று
அவன் இதழ்கள்
நிறமிழந்து போயின

கண்ணில் வழிந்த நீர் காலில் குளமாக அழுத தாயை விட, காதலி முக்கியமானவளா? பெற்றோரைச் சார்ந்து வாழும் நிலைமை இருக்கும்போது இன்னொருவர் இதயத்திற்கு நெருக்கமாவது எப்படி? ஊரை, உறவை, தூக்கி எறிந்துவிட்டு சாகவும் துணியும் தைரியத்தை எது கொடுக்கிறது? கல்லூரி தோறும் இப்படிச் சில கதைகளாவது இருக்கக் கூடும். ஒருவன் கதாநாயகன், ஒருத்தி கதாநாயகி. கல்லூரியின் இறுதி நாட்களில் கண்கள் சிவக்க சிலரின் தற்கொலை முயற்சிகள். பிறகு, தப்பித்தல். இருவர் பங்கு பெற்று அரங்கேறும் தற்கொலைக் காதல். இது, மருத்துவமனையில் அவன் சொன்னது. அந்த அவனை நேற்று எதேச்சையாகச் சந்தித்தேன். கைக்குழந்தையோடு. யார் குழந்தை என்றேன். விஷயமே தெரியாதா உனக்கு? எனக்குக் கல்யாணமாயிடுச்சு என்றான். குழந்தைக்கு என்ன பேரு என்றேன், காயத்ரி என்றான். எந்த காயத்ரி என நானும் கேட்கவில்லை. அவன் சொன்ன எந்தக் கதையிலும் காயத்ரி என்கிற கதாநாயகி வந்ததில்லை.

(தொடரும்)

மதுரையை நோக்கி கூடல் எக்ஸ்பிரஸ் நூறு கி.மீ. வேகத்தில் விரைந்து கொண்டிருந்தது. தாம்பரம் ரயில் நிலையத்தில், தனக்கென்று ஒதுக்கப்பட்ட தனிப் பெட்டியிலிருந்து இறங்கி, மக்களின் குறைகளைக் கேட்பதற்காக அடுத்த பெட்டிக்குச் சென்றார் மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் ஏ.கே. மூர்த்தி. கூடவே வர முயன்ற ஒரு டஜன் அதிகாரிகளை "நீங்கள் வர வேண்டாம்" என்று சொல்லி விட்டு இரண்டு மூன்று அதிகாரிகளுடன் சென்றார். பயணிகளுக்கு அவரைக் கண்டதும் ஒரே ஆச்சர்யம்.

"கூடல் எக்ஸ்பிரஸில் 'பாண்ட்ரி கார்' இல்லை. தற்காலிகமாக விடப்பட்டிருக்கும் இந்த ரயிலை நிரந்தரமாக விடவேண்டும். நெல்லை வரை நீட்டிக்க வேண்டும்" என்றெல்லாம் கோரிக்கைகள். ஒவ்வொரு பயணி சொல்வதையும் கூர்மையாகக் கேட்டு, புன் சிரிப்பு மாறாமல் "கட்டாயம் செய்ய முயல்கிறேன்" என்றார் அமைச்சர். சீஸன் டிக்கெட் வைத்துக் கொண்டு விரைவு ரயில் வண்டியில் பயணம் செய்யக் கூடாது. அப்படிப் பயணம் செய்த மாணவரின் அடையாள கார்டை பரிசோதகர் பறிமுதல் செய்து விட்டார். குறைகளை விசாரித்து வந்த அமைச்சரிடம் புலம்பின அந்த மாணவர், சோழன் எக்ஸ்பிரஸ் ரயிலைத் தவற விட்டு விட்டதால், கூடலில் பயணம் செய்தாராம். "வாழ்க்கையில் எதையும் மிஸ் பண்ணக் கூடாது தம்பி" என்று செல்லமாகக் கடிந்து கொண்டு அடையாள அட்டையை வாங்கிக் கொடுத்தார். திரும்பி, "வண்டியை அந்த ஸ்டேஷனில் நிறுத்துங்கள். இந்த ஸ்டேஷனில் நிறுத்துங்கள். எங்கள் ஊருக்கு ரயில் விடுங்கள்" என்றெல்லாம் கேட்கிறார்கள். ஒரு விஷயம் சொல்லட்டுமா?
எனது சொந்த ஊருக்கு ரயில்





ஊக்கமூட்டும் புதிய பகுதி!



இளமை ஸ்பெஷல்!

பாதை கிடையாது. முதன் முதலாக நான் ரயிலைப் பார்த்ததே என்னுடைய எட்டாவது வயதில். ஊரிலிருந்து கூண்டு வண்டியில் கிளம்பி, விக்கிரவாண்டி ஸ்டேஷனுக்கு வந்து, அம்மாவை சென்னைக்கு வழி அனுப்பி வைத்தோம். ரயிலைப் பார்த்து பிரமித்தது அப்போதுதான்"

மூர்த்தியின் கொள்ளுத்தாத்தா செஞ்சி வட்டாரத்தில் பிரபலம். ஏராளமான நில புலன்கள். செஞ்சியிலிருந்து கீழ்மாம்பட்டு கிராமம் எட்டு கி.மீ. இருக்கும். மூர்த்தி பிறந்தபோது கிராமத்திற்கு மின் வசதி கிடையாது. பள்ளிக்கூடம் கிடையாது.

"எனக்கு ஐந்து வயதாகும்போதுதான் ஊருக்குப் பள்ளிக்கூடம் வந்தது. அதுவும் ஒரு வீட்டு மண் திண்ணையில் துவங்கினார்கள். அப்பா ஒரு பை நிறைய நெல்லைக் கொண்டு ஆசிரியரிடம் கொடுக்க, அதை ஆசிரியர் தரையில் பரத்தி 'அ' என்று கையைப் பிடித்து எழுதியது, நேற்று நடந்தது போலிருக்கிறது. பல நாட்கள் பள்ளி உணவு இடைவேளையுடன் முடிக்கப்பட்டு விடும். அதன் பிறகு கழனி வேலைதான். ஏர் ஓட்டுவது, 'கவலை'யில் தண்ணீர் அடிப்பது, நாற்று நடுவது, களை பிடுங்குவது, அறுப்பது என்ற எல்லா வேலையும் கற்றுக் கொண்டாகி விட்டது. அறுவடை சமயத்தில் பயிருக்குக் 'காவல் இருக்க யார் போவது?' என்று கேள்வி எழும். பயம் காரணமாக அண்ணன் ஒதுங்க, நான் கையில் அரிக்கன் விளக்கு மற்றும் கம்புடன் கிளம்பி விடுவேன். கிணற்று மேட்டில் கயிற்றுக் கட்டிலில் படுத்து காவல் காத்த நாட்கள் நிறைய. நரிகள் அருகில் வந்து ஊளையிட்டுச் செல்லும். என் செல்ல நாய் மணி, அவற்றை விரட்டி அடிக்கும்.

மூர்த்தியை மிகவும் பரவசப்படுத்தியது கிராமத்துக்கு வந்து செல்லும் பஸ். நாளுக்கு இரண்டு முறை வரும் பஸ்ஸை, குனிந்தும் நிமிர்ந்தும் பார்த்து, ஆராய்ச்சி செய்வார்.



குட்டினைன் திறந்தது!

ஸ்டியரிங் பிடித்து ஓட்டும் டிரைவர், ஏதோ கடவுளால் அனுப்பப் பட்டவர் போலத் தோன்றினார். அப்போது எட்டாவது படித்துக் கொண்டிருந்தார். "அப்பாவிடம் பஸ் மெக்கானிக் ஆகப் போகிறேன்" என்ற வுடன் அவருக்குக் கோபம். "நம்மகிட்ட பத்து பேர் வேலை செய்யறாங்க.. நீ ஏண்டா இன்னொருத்தர் கிட்ட வேலை செய்ய ணும்" என்ற அப்பாவின் கண்டிப்பைப் பொருட்படுத்தாமல், திண்டிவனத்துக்கு வந்து, ஒரு மெக்கானிக் ஷெட்டில் சேர்ந்து விட்டார். எட்டாம் வகுப்போடு படிப்புக்கு குட் பை சொல்லியாகிவிட்டது.

வேலை கற்றுக் கொள்வது அவ்வளவு சுலபமாக இல்லை. பையன் கொஞ்சம் வசதியான வீட்டுப் பையன் என்று தெரிந்தும், ஷெட் ஓனர் வழக்கமான தனது கெடுபிடிகளைக் கொஞ்சம் கூட தளர்த்தவில்லை. எட்டாம் நம்பர் ஸ்பேன ருக்குப் பதில் பத்தாம் நம்பர் தவறுதலாகக் கொடுத்து விட்டால், நறுக்கென்று விழும் குட்டு. "என் பொறுமை வீண் போகலை. மெக்கானிஸம் முழுதும் இரண்டு வருடத் தில் கற்றுக் கொண்டு விட்டேன். ஊருக்கு வரும் அதே பஸ் நிறுவனத்தில், சொற்ப சம்பளத்துக்கு வேலையும் கிடைத்து. அந்தக் கால கட்டத்தில் போலீஸ் அல்லது மிலிட் டரியில் சேரும் ஆசையும் வந்தது. நண்பர் களுடன் கிளம்பி பெங்களூர் செலக்ஷனுக் குச் சென்றுவிட்டேன். மிலிட்டரிக்கு தேர் வாகிவிட்டேன். ஆனால் அப்பா விட வில்லை. "என் கண்ணுக்கு முன் எந்த வேலை வேணும்னா செய்" என்று தடுத்து விட்டார்." மெக்கானிக் வேலையில் காசு சேர்ந்தது. ஆனால் சினிமா, ஹோட்டல் என்ற ஆசையெல்லாம் மூர்த்திக்குக் கிடையாது.

மூர்த்திக்குப் பன்னிரண்டு வயதான போது, குடும்பம் திருப்பதிக்குச் சென்று வந்தது. ஊருக்குத் திரும்பியவுடன் எல்லோ ருக்கும் காய்ச்சல். அதிலும் அம்மாவுக்கும் மூர்த்திக்கும் காய்ச்சல் நின்றபாடில்லை. திண்டிவனத்தில் கொண்டு போய், தனியார் கிளினிக்கில் சேர்த்தார்கள். "பையன் போயிடுவான்" போலிருக்கே என்று காது பட பேசினார்கள். ஆனால் டாக்டர், சிறு வனை ஒரு வாரம் தம் வீட்டிலேயே வைத்து குணப்படுத்தி விட்டார். அந்த டாக்டர்தான் இன்று மூர்த்தியின் ஆதர்ச தலைவராக இருக்கும் டாக்டர் ராமதாஸ்! "ஆனால் ஐயாவை அப்புறம் பல வருடங்கள் கழித்து, வன்னியர் சங்கத்தில் இணைந்தபோதுதான், பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது."

கீழ் மாம்பட்டும், செஞ்சியும் மூர்த்திக் குச் சலித்துவிட்டன. கிளம்பி விட்டார் சென்னைப் பட்டினத்துக்கு. முதலில் செய்தது, ராயபுரத்தில் லோடு அடிக்கும் மஹிந்திரா வேன் வண்டியில் கிளீனர் வேலை. நாளும், பொழுதும் வண்டியிலேயே வாசம். ஊரில் அரைகுறையாகத் தெரிந்து கொண்டிருந்த டிரைவிங், முழுதாகத் தெரிந்து லைசென்ஸ் எடுத்தாகிவிட்டது.

"நான் ஸ்டியரிங் பிடித்தாலே ஓனர் பயங்கரமாகக் கடிப்பார். ஓட்டுநரை அனு சரித்து டிரைவிங் பழகியது என்பது இப் போது சொல்வதற்குச் சுலபமாக இருந்தாலும் அந்தக் கால கட்டத்தில் பல சிரமங்களுக்கு நடுவில் தான் கற்றுக் கொண்டேன். "என் னுடைய முன்னேற்றத்துக்கு ஒரு முக்கியக் காரணம், விடாப்பிடியான முயற்சி. பல நேரங்களில் சோதனைகளில் துவண்டு விடும்போது, 'விடக் கூடாது" என்று எங்கோ யிருந்து வரும் குரல் என்னைத் தூண்டி விடும்" என்கிறார் மூர்த்தி.

மிகுந்த சிரமத்திற் கிடையில் மூர்த்தி வங்கியின் உதவியுடன் மகேந்திரா வேன் ஒன்றை வாங்கினார். அந்த வேன் அவர் வாழ்க்கையை மாற்றியது.

(அடுத்த இதழில் முடியும்)

படங்கள் : **ராஜன்**


"எங்க அம்மாவுக்கு சப்போர்ட்டா பேசுனது தப்பாயிட்டுது."


"ஏன்?"

"பயங்கரவாதத்துக்குத் துணை போனதா என் மனைவி போலிஸ்ல புகார் குடுத்துட்டா!"

- தூத்துக்குடி வி. சகிதா முருகன்




நாளைய
நட்சத்திரம்!
புதிய
பகுதி
இளமை
ஸ்பெஷல்!



பெயர்	: இனிகோ ('இனிய அரசன்' என்று பொருள்)
வயது	: கடந்த தேர்தலில் முதல் வோட்டு போட்டிருக்கிறார்.
படிப்பு	: பி.ஏ. டூரிஸம்
சொந்த ஊர்	: ரெட்டிவேப்பங்குளம் (நெல்லை)
பிடித்த ஊர்	: சிங்காரச் சென்னை
பிடித்த நடிப்பு	: நடிப்புக்கு கமல், ஸ்டைலுக்கு ரஜினி, டான்சுக்கு விஜய், சாதனைக்கு அஜித், சண்டைக்கு சூர்யா...
லட்சியம்	: நடிப்பில் புலியாக மாறுவது...

– விவரம் சேகரிப்பு : ஜெ.



"எனக்கு நானே பாஸ்!"

ஏஞ்சலின் சுந்தர்ராஜ்... பெங்களூரிலிருக்கும் தமிழ் கிறித்துவப் பெண். சிறு வயதில் நோய் வாய்ப்பட்ட காரணத்தினால் உடல் வளர்ச்சியில்லாமல் சுமார் மூணரை அடி உயரமே இருக்கிறார். கை கால்களும் வளர்ச்சி பெறவில்லை. கால்ஷியம் குறைவாம்.

"மூணு மாதக் குழந்தையா நான் இருந்தப்ப டயரியா வந்தது. அடிக்கடி ஜுரம் வரும். 'அக்கோண்ட்ராப்ளேசியா' வியாதி என்றார்கள். 'இலிஸாரொ ட்ரீட்மெண்ட்' கொடுத்தும் பலனில்லை. ஸ்கூலில் படிக்கும்போது என் குட்டை உருவத்தையும், நீண்ட மூஞ்சியையும் பார்த்து கிண்டலடிப்பார்கள். 'ஓ' என்று அழுவேன். ஆனால் நாளாக நாளாக என்னை திடப்படுத்திக் கொண்டேன்" என்றார். "ஓவியம் படிக்கலாம்னு சித்ரகலா பரிஷத் போனேன். ஊன்றுகோல் வைத்து தொங்கிக் கொண்டு போன என்னை நிராகரித்து விட்டார்கள். என் அம்மாவின் கெஞ்சலுக்குப் பிறகு சீட் கிடைத்தது. இரு வருடங்கள்தான் படித்தேன். என் மனத்தில் என்னவோ ஒரு தேடல். பிறகு, சென்னைக்கு கிளம்பி விட்டேன்" என்றார்.



இளமை ஸ்பெஷல்

சென்னைக்கு வந்த ஏஞ்சலின் அடையாறில் இருக்கும் மிலிடுனில் பணியாற்றிக் கொண்டே, கிராஃபிக் டிஸைனிங்கில் தேர்ச்சி பெற்றுவிட்டார். அனிமேஷன் ஃபிலிம் என்றால் வெகு இஷ்டமாம். சவுண்ட், எடிட்டிங், கிராபிக்ஸ் என்று ஏஞ்சலின் ஒவ்வொரு துறையையும் கற்றுத் தெரிந்து கொண்டிருக்கிறார். 'எனக்கு நான்தான் 'பாஸ்'. என்னால் சுதந்தரமாகச் செயல்பட முடிகிறது' என்கிறார்.

நாம் ஏஞ்சலினுடன் பேசிக் கொண்டிருந்தபோது அடிக்கடி தொலைபேசி மணி அடித்துக் கொண்டேயிருந்தது. வெட்கமும் பொய்க் கோபமும் கலந்து பேசிக் கொண்டிருந்த ஏஞ்சலினை மடக்கினோம். "அவர் பேர் உபேஷ். நேபாளி. அவர்தான் பிரபோஸ் பண்ணினார்... நடுவில் கொஞ்சம் மனக் கஷ்டம். அவங்க வீட்டில் சம்மதிக்கல்லை. பிறக்கப் போற குழந்தை நார்மலா இருக்குமான்னு ஒரே சப்தம் போட்டாங்க. நானும் சென்னையிலிருந்து இங்கு வந்து விட்டேன். ஆனால் உபேஷ் அவங்க வீட்ல பேசி சம்மதிக்க வைச்சுட்டாரு. ஜனவரியில் கல்யாணம்" என்கிறார் முகம் சிவக்க! முக்கியமான விஷயம் உபேஷின் உயரம் ஆறடி!

கட்டுரை, படங்கள்:
லதா சேகர்

"நீங்க எது பண்ணினாலும் சரியாக இருக்கும்."

ராதாகிருஷ்ணன் சங்கரய்யரிடமிருந்து மான் தோலை வணங்கி வாங்கிக் கொண்டார்.

"ரேவதி, எப்படியிருக்கு [illegible]ம்பரம்?"

சங்கரய்யர் படி இறங்கும்போது கேட்டார்.

"உங்க ஆசிர்வாதத்துலே எந்தக் குறையும் இல்லை. அப்பப்போ காளிகாம்பாள் ஞாபகம், உங்க ஞாபகம் வரும். ஒரு மாசத்துக்கு ஒரு தடவை வந்து பார்த்துடறோம் இல்லையா. அதனால அந்தக் குறையும் இல்லை.

மனம் உருகுதே



அதுவும் தவிர மந்திர ஜபத்துல மனசு லயிச்சா எழுந்திருக்கவே முடியலை. எப்போ வீட்டு வேலைகள் முடியும், எப்போ ஜபத்துக்கு உட்காருவோம்னே உள்ளுக்குள்ள ஒரு பரபரப்பு இருக்கு."

"ஆஹா... ஆஹா... என்ன அழகா சொல்ற..."

"என் பொண்ணு சுபத்ரா ப்ளஸ் டூ முடிச்சுட்டு காலேஜ் சேர்ந்திருக்கா. அடுத்த வருஷத்தோட படிப்பு முடியும். அப்படி முடிஞ்சுடுத்துன்னா வரன் பார்க்க ஆரம்பிக்கலாமா?" ரேவதி கேட்டாள்.

"யெஸ்... வரன் பார்க்கணும். பொண்ணுக்கு வரன் பார்க்கறதுதானே பெத்தவாளுடைய கடமை. ஆனா அவ பார்த்துண்டா சரின்னு சொல்ல மாட்டியா?"

சங்கரய்யர் கேட்க, ராதாகிருஷ்ணனும் ரேவதியும் திடுக்கிட்டுப் பார்த்தார்கள்.

"நீங்க என்ன சொல்றேள்?"

"நாம சுதந்தரம் கொடுத்து குழந்தேளை வளர்க்கறோம். சுதந்திரம்கறது அத்து மீறுவதுன்னு சில பேர் அர்த்தம் எடுத்துண்டிருப்பா. என்னவேணா பண்ணலாம், அப்படின்னு தனக்குள்ள நினைச்சுப்பா. பொண் குழந்தேளுக்கு நூறு விதமான பயங்கள். யாரோ முகம் தெரியாதவனோட குடித்தனம் பண்றதவிட, மாமியார், நாத்தனார்னு அவஸ்தைப் படறதவிட, தெரிஞ்சவனைச், சொடுக்கினா எழுந்து நிக்கறவனை கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணும். இது தப்பில்லை. நாம முக்கியமா, குழந்தை சந்தோஷமா இருக்கறது முக்கியமா, அப்படின்னு ஒரு அம்மாக்கிட்டே கேட்டா, குழந்தை சந்தோஷமா இருக்கறதுதான் முக்கியம்னு சொல்லுவா. சுபத்ரா சந்தோஷமா இருப்போ. அவளுக்கு அடங்கி அவள்

பாலகுமாரன்



மாப்பிள்ளைய நீங்க கொண்டாடுவேள். அப்படித்தான் நடந்துப்பான்."

"என்னால ஒத்துக்க முடியாது."

ராதாகிருஷ்ணன் வேகமாகச் சொன்னார்.

"உம்மை யாரும் அனுமதி கேட்கப் போறதில்லையே. உமக்குப் பிடிக்குமா பிடிக்காதான்னு விசாரிக்கப் போறதில்லையே. அது பாட்டுக்கு நடக்கும்யா. மந்திர ஜபம் பண்றவன் கோவப்பட்டு தன்னுயை சக்தியைச் சிதற விட்டுடக் கூடாது. மந்திர ஜபம் பண்றதுக்கே அடிப்படையான விஷயம் அமைதி. அமைதியைத் தேடுகிற அமைதி. அமைதியை அடைய விரும்புகிற அமைதி. அதனால ஏதாவது ஏடாகூடம் பண்ணி, எடுத்தேன், கவிழ்த்தேன்னு பேசிடாதீங்கோ. குழந்தையினுடைய எதிர்காலம் முக்கியம். நாளைக்கு அவ புருஷன் வீட்டுக்குப் போறபோது, என்ன உங்கப்பன் இப்படிப் பேசினானாமே, அப்படின்னு ஒரு வார்த்தை வரக் கூடாது. உங்களால அந்தக் குழந்தை இழிவு படக் கூடாது."

"நிச்சயமா என் குழந்தை வேற ஜாதிக் காரனைத்தான் கல்யாணம் பண்ணிப்பாளா?"

"சந்தோஷமா இருப்பான்னு சொல்றேனே. அதை ஏன் மறந்துடறேள்?"

"பிள்ளைக்காவது சரியானபடி கல்யாணமாகுமா?"

"ஆஹா... உன் பிள்ளைக்கு உன் இஷ்டப்படியே கல்யாணம் ஆம்படையான் நடந்துண்டிருப்பான்."

ரேவதிக்கு அழுகை வந்தது.

"ராதாகிருஷ்ணனை உடன்பிறந்தவராகதான் நினைச்சுண்டிருக்கேன். நல்லதோ, கெட்டதோ வாயைத் திறந்து சொல்லிடறதுதான் எனக்கு சந்தோஷம். நமக்கென்னமோ அபத்தமா, அச்சான்யமா தோனும். ஆனால், பயப்பட வேண்டாம். உங்க வீட்டு

34

பண்ணி வைக்கலாம்."

"இவளுக்கு இப்படி கல்யாணம் நடந்தா அவனுக்கு...?"

"வந்து கேட்பா. எல்லாத்தையும் உதறிட்டு இவ்வளவு படிச்ச மாப்பிள்ளை, இத்தனை நல்ல பதவியில இருக்கற மாப்பிள்ளை எங்க பொண்ணுக்குக் கொடுங்கோன்னு வந்து கேட்பா?"

"நிச்சயமா நடக்குமா?"

ராதாகிருஷ்ணன் சங்கரய்யரைக் கேட்டார்.

சங்கரய்யர் அவரைப் பார்த்துச் சிரித்தார்.

"நான் என்ன பலத்துல சொல்றேனோ அந்த பலம் உனக்குக் கிடைக்கும். அந்தப் பலத்தை உள் வாங்கிண்டு உம்முடைய குடும்பத்துக்கு மட்டுமில்லை, ஊர் உலகத்துக்கெல்லாம் நல்லது சொல்ல பிறந்திருக்கேள். இது உம்மைக் கீழ இறக்கி வக்கிறதா நினைக்க வேண்டும். இது உனக்கு உதவி செய்யும். இது உன் மனோநிலையைப் பலப்படுத்தும். உன்னை கம்பீரப்படுத்தும். மகன் பாசம்; மகள் பாசத்துக்கு அப்பால் உன்னைச் சிந்திக்க வைக்கும். அவரவர் வாழ்க்கை, அவரவர் பக்கம், நாம் நம்முடைய வேலையைச் செய்துகொண்டு போவோம் என்று தனித்திருக்க வைக்கும். இது உன் நல்லதுக்காக ஏற்பட்டது. கடவுள் உனக்கு கொடுக்கப் போகும் பரிசு."

ரேவதி முகம் பொத்தி விசும்ப, ராதாகிருஷ்ணன் கண்ணிலிருந்து ஜலம் வந்தது.

"புரிகிறது" ராதாகிருஷ்ணன் கைகூப்பினார்.

"காளிகாம்பாள் உங்களுக்குண்டான பலத்தைத் தருவாள். இப்போது, இங்கே இதைச் சொல்வது என் கடமை. அதனால் சொல்லிவிட்டேன். போய் வாருங்கள்" சங்கரய்யர் கை கூப்பினார்.

"என்னம்மா ரொம்ப நேரம் பேசிண்டிருந்தார். நீங்க இரண்டு பேரும் கைகூப்பி கேட்டிண்டிருந்தேள். என்ன சொன்னார்."

மகன் வெகுளியாகக் கேட்டான்.

"நீ ரொம்ப உசந்த இடத்துக்குப் போவே. ரொம்ப நன்னாயிருப்பேன்னு சொன்னார்."

"அப்படியா...?"

ஆவலாக மகன் கேட்டுக் கொண்டான்.

ஆனால், மகன் அதைப் பற்றிய அக்கறையே படாமல் இருந்தான். வாய் ஒரு சினிமாப் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

காரின் பின்ஸீட்டில் மிக ஒயிலாக சாய்ந்து கொண்டு, 'இந்த உலகம் முழுவதும் எனக்குச் சொந்தம். நான் அதை பவனி வருகிறேன்' என்ற ஒரு நினைப்போடு அவள் உட்கார்ந்திருந்தாள்.

காது ஜிமிக்கி ஆடியது. குழல்கள் அசைந்தன. உதடுகள் கண்கள் எல்லாம் பளபளக்க, தான் மற்றவரைப் பார்த்து, மற்றவர் தன்னைப் பார்த்து வியப்பதை மெல்ல ரசித்துக் கொண்டிருந்தாள்.

சங்கரய்யர் சொன்னது போலவே...

கொரியாவின் கார் கம்பெனி ராஜாராமனைக் கூப்பிட்டது. இந்தோனேஷியாவிலுள்ள வாக்யூம் க்ளீனர் தயாரிக்கும் ஜப்பான் கம்பெனி அழைத்தது. வளைகுடாப் பகுதியிலிருந்தும் அழைப்பு வந்தது.

"உங்க பொண்ணு பத்து நிமிஷம் சும்மா உக்காந்திட்டு இருக்கா. அப்புறம் அஞ்சு நிமிஷத்துக்குப் 'பரபர'ன்னு வீட்டு வேலை செய்யறா. மறுபடி பத்து நிமிஷம் உக்காந்துடறா. ஏன் இப்படி?"

"டீவி சீரியல்களின் விளம்பர இடைவெளிகளில் வேலை செஞ்சு, செஞ்சு இப்படிப் பழக்கமாயிடுச்சு."

– ரா. ரகோத்தமன்

ராஜாராமன் ஜப்பானுக்குப் பயணமானான். ஜப்பானிய மொழி கற்றுக் கொண்டான்.

நான்கு மாதம் தாண்டி இந்தோனேஷியாவில் வந்து இறங்கினான். தாயையும், தகப்பனையும், தங்கையையும் அழைத்துப் போனான். ஒரு வாரம் தங்க வைத்து, ஊர் சுற்றிக் காட்டி, திருப்பி அனுப்பினான். இந்தோனேஷியாவில் இந்துக் கோவில்களைப் பார்த்து அவர்கள் திகைத்தார்கள். ஊர் முழுவதும் இந்துக் கலாசாரம் இருப்பது, பார்த்து வியந்தார்கள்.

எங்கு போனாலும் இந்தத் தாம்பரம்தான் சொர்க்கம், என்று இங்கு வந்து கொண்டாடினார்கள்.

இந்திய விமானத்தில் சிவப்பாய் வளர்த்தியாய், உயரமாய் இருந்த கோவிந்தன், சுபத்ராவை விழுந்து விழுந்து உபசரித்தான்.

விமானத்திற்கு உள்ளே வருகிறீர்களா, காக்பிட் பார்க்கலாம் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போய், பைலட்டுக்கு அருகேயுள்ள நாற்காலியில் உட்கார வைத்து, விமானத்திற்கு எதிரே நீலக்கடல் கீழே தெரிவதைக் காட்டினான்.

வந்து இறங்கின மறுவாரம் வீட்டிற்கு வந்து சிங்கப்பூர் சாக்லெட் கொடுத்தான். இத்தாலி பிஸ்கெட்டுகள் கொடுத்தான்; அரபு தேசத்து திராட்சைகள் கொடுத்தான். அவரோடு வாசலில் உட்கார்ந்து பேசிவிட்டுப் போனான்.

"ஏர் இந்தியாலேர்ந்து பிரிட்டிஷ் ஏர்வேஸுக்குப் போகலாம்னு நினைச்சுட்டிருக்கேன். மாறட்டுமா?"

ஜாதகம் கொண்டு வந்து நீட்டினான்.

அவனோடு அவன் தாயும் தந்தையும் வந்திருந்தார்கள். பையனுக்குத் திருமணம்



முடிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

"ஊர் ஊரா போற வேலை, 'யாரும் பொண்ணு கொடுக்க மாட்டேன்றாங்க. இவனுக்கு முப்பது வயசாகிப் போச்சு. சொத்துல மூணு பொண்ணுங்க இருக்கு. கட்ட மாட்டேன்றான். இங்கிலீஷ் பேசணுமாம். ரொட்டி வெண்ணெய் தடவி சாப்பிடறவதான் வேணுமாம். எங்கனா வெள்ளக் காரியக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்துடுவானோன்னு பயம்."

விதி தன்னை நோக்கி காய்களை நகர்த்துவதை தெள்ளத் தெளிவாக ராதாகிருஷ்ணன் உணர்ந்து கொண்டார்.

'இப்போது என்ன செய்வது?' உள்ளுக்குள் யோசனை செய்தார்.

யோசனை செய்யும் முன்பு மந்திர ஜபம் செய்தார். ஆழ்ந்து அமைதியாகத் தன் மனம் எதை விரும்புகிறது, என்று கேள்விகள் கேட்டுக் கொண்டார்.

சங்கரய்யரிடமிருந்து உடனே வரச் சொல்லி போன் வந்தது.

அவர் கிளம்பி ஜார்ஜ் டவுன் போக, அந்தப் பனியா உட்கார்ந்திருந்தார். பனியாவோடு அந்தச் சகோதரர்கள் அமர்ந்திருந்தார்கள்.

"இந்தக் கட்டடத்தை விக்கவே முடியலை. வேற புதுக்கட்டடம் கட்டலாம்னா, அதுவும் முடியலை. எது பண்ணாலும் தடங்கல் வருது. எத்தனையோ விதமா எல்லாவித தந்திரமும் பிரயோகம் பண்ணிப் பார்த்துட்டேன். ராதாகிருஷ்ணன் காலி பண்ணும்போது எப்படி இருந்ததோ, வீடு அப்படியேதான் இன்னமும் இருக்கு, அப்படின்னு வருத்தப்படறான். எங்கயோ போய் யார் கிட்டயோ போய் குறி கேட்டிருக்கான். நீ வாங்கின இடத்தை யாரோ ரொம்ப அருமையா பாதுகாத்து வச்சுண்டிருந்தா. அதை நீ பிடுங்கிண்டா மாதிரி வாங்கினதுனால அவாளுக்கு மன வருத்தம். அந்த மன வருத்தத்துனால இது விக்க முடியாம இருக்கு. யாரை அனுப்பினியோ அவங்களைக் கொண்டு வந்து ஒரு மூணு மாசமாவது இங்க குடித்தனம் வை. எல்லாம் சரியாப் போகும்னான். இப்போ உன்னை அப்படிக் கேட்கறதுக்காக வந்திருக்கார். "தாம்பரத்தினுடைய நிம்மதிலேர்ந்து இந்தச் சந்தைக்கு மறுபடியும் வருவியா?"

சங்கரய்யர் கேட்டார்.

ராதாகிருஷ்ணனும் ஒப்புக் கொண்டார்.


ஜார்ஜ் டவுனுக்கு மறுபடியும் வந்த போது சங்கரய்யர் மாடியில் தன்னாடி, ஏறி வந்து ஆசி தந்தார்.

அடுத்து வந்த நாட்களில் எந்தப் பேச்சும் இல்லை. யாரோடும் இல்லை. இடையறாது உள்ளுக்குள் மௌனம். மௌனத்தின் போது மந்திர ஜபம். மந்திர ஜபம் முடிந்து ஒரு மௌனம். ஒரு வெறுமை. ஆழ்ந்து இறுக்கம்.

தரையில் பெரிய பலகை போட்டு, பலகையின் மீது மான்தோல் போட்டு, முதுகைச் சுவரில் சாய்த்து வெறுமே உட்கார்ந்திருப்பது, தரையைப் பார்த்துக் கொண்டிருப்பது. வெளியே வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது தொடர்ந்தது. பார்வை வேறெங்கேயோ இருக்குமே தவிர, உள்ளே ஆழ்ந்து தன் மனத்தை மனம் கவனித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு நாள் உடம்பு முழுவதும் குலுக்கிப் போட்ட அந்த அனுபவம் ஏற்பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)



இளமை ஸ்பெஷல்

தங்கத்தில் குரலெடுத்து...

"நான் அவருக்காக இசையமைப்பாளர்களிடம் எவ்வித சிபாரிசும் செய்வதில்லை. அதை அவரும் விரும்பமாட்டார்."

"பீஹாரில் ஏழை விவசாயிக்குப் பிறந்தவன் நான். குடும்பத்தில் ரொம்ப கஷ்டம். சாப்பாட்டுக்கே வழியில்லாததாலே பாதியிலேயே படிப்பை நிறுத்தினேன். ஆனால் பாட்டு என்னைக் கைவிடவில்லை. 'ஓ. மித்வா' (லகான்) பாடலுக்காக தேசிய விருது கிடைச்சப்போ, கடவுள் எத்தனை கருணை உள்ளவர்னு நினைத்து, கரைந்து போனேன்" என்கிறார் இந்தியாவின் நம்பர் ஒன் பின்னணிப் பாடகர் உதித் நாராயண்.

இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் என இருபத்தைந்து மொழிகளில், தினம் இரண்டு பாடல்கள் ஒலிப்பதிவு, செய்து கொண்டிருக்கும் உதித் நாராயண் ஒரு பாடலுக்குக் கால் லட்சம் கேட்டாலும் தயாரிப்பாளர்கள் தயங்குவதில்லையாம்.

"கிஷோர் குமார், முகமது ரஃபி போன்றவர்கள் சாதித்ததை விட, என்ன பெரிசாகச் செய்துவிடப் போகிறேன். இருந்தாலும் என்னவோ இசையின் மீதுள்ள காதலால் பாடிக் கொண்டிருக்கிறேன். புதியதாக ஒரு குரலைக் கேட்கும் போதெல்லாம், நான் போட்டிக்குத் தயாராகி வருகிறேன். அந்த விதத்தில் பார்த்தால், ஒவ்வொரு பாடலுமே எனக்கு அக்னிப் பரீட்சைதான்" என்கிறார் உதித் நாராயண்.



தமது தமிழ் உச்சரிப்பு பற்றி இலேசாக வெட்கப்படும் உதித் நாராயண், தமக்கு தென்னிந்திய மொழிகளில் இன்னும் கொஞ்சம் பயிற்சி தேவை என ஒப்புக் கொள்கிறார்.

"என்னுடைய மனைவி தீபாவும் நல்ல பாடகிதான். ஒரியா, ராஜஸ்தானி, பெங்காலி படங்களில் பாடி வருகிறார். ஆனால் நான் அவருக்காக இசையமைப்பாளர்களிடம் எவ்வித சிபாரிசும் செய்வதில்லை. அதை அவரும் விரும்பமாட்டார்" என்கிறார். அனுமாலிக், ஏ.ஆர். ரஹ்மான் போன்றவர்களின் செல்லப் பாடகர், வெல்லக் குரல் உதித்!



ஒரு வெட்டு! ஒரு வெட்டு!

"அவருடைய தலையில் கையை வைத்த நாள் இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. நான் தொழிலுக்குப் புதுசு. என்னுடைய அப்பா, அஹமது ஹபீப் என்னுடைய கையில் கத்திரிக்கோலைத் திணித்தவாறே "இவர் மிகப் பெரிய மேதை. அதிகம் பேசி, அவரது சிந்தனையைக் கலைக்காதே." என்று கிசுகிசுத்து, எச்சரிக்கை செய்தார். ஆனால் அவரோ, மிக இயல்பாகப் பேசினார். "என்னுடைய முக அமைப்புக்கு எந்த ஹேர் ஸ்டைல் பொருத்தமாயிருக்குமென நினைக்கிறாயோ, அது போலவே வெட்டிவிடு" என்று உற்சாகம் தந்தார். உள்ளுக்குள் சின்னதாய் ஒரு நடுக்கம். எப்படியோ சமாளித்துக் கொண்டு பின்புறம் பிளன்ட் கட், பக்க வாட்டுகளில் ரேஸர் கட், முன் பக்கம் ஃபிரென்ட் ஃபிரின்ஜ் என மூன்று விதமான ஸ்டைல்களையும் இணைத்து, முடி அலங்காரம் செய்தேன். கண்ணாடியில் தமது பிம்பத்தைப் பார்த்துக் கொண்டவருக்கு, ஏக திருப்தி. அன்றிலிருந்து பதின்மூன்று ஆண்டுக் காலமாக, என்னிடமே முடிவெட்டிக் கொள்கிறார்" என்கிறார் உலகப்புகழ் பெற்றுவிட்ட அப்துல்கலாமின் ஹேர் ஸ்டைலை உருவாக்கிய அம்ஜத் ஹபீப்.

"உங்கள் கலைத் திறன் பிரமாதம்.. குறிப்பாக முன் நெற்றியில் விழும் சுருள் எனக்கு இளமையான தோற்றம் தருகிறது" என்று கலாம் பாராட்டினாராம்.

புது தில்லியின் லோதி ஹோட்டலிலிருக்கும் ஹபீப் பார்லரில் எப்போதும் வி.ஐ.பி. நெரிசல்தான். இப்போது கலாமின் ஹேர் ஸ்டைல் பாப்புலர் ஆன பிறகு, 'ப்ரெஸிடென்ட் கட்' என்று குறிப்பிட்டு வெட்டிக் கொள்கிறார்களாம்.

"ஜனாதிபதி கலாமின் சுருண்ட ஹேர் ஸ்டைல் பலத்த சர்ச்சைக்குள்ளானபோது, எனக்கு ஒரு பக்கம் பெருமை, இன்னொரு பக்கம் கவலை. எங்கே 'சிம்பிள் கட்' செய்து கொண்டு விடுவாரோ, என வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை, அவரது தனி ஸ்டைலை மாற்றவில்லை. ஜனாதிபதி ஆன பிறகும் ஷாம்பூ, கண்டிஷனர், போட்டு அலசிக் கொண்டு என்னைத் தடவி அவர் தலை முடியைக் கவனமாகப் பராமரிப்பதால், கலாமுக்கு வழுக்கை விழ வாய்ப்பே இல்லை. எனக்கும் வேலை நிரந்தரம்" என்கிறார் தமாஷாக.

ஹபீபின் வி.ஐ.பி. வாடிக்கை





யாளர்களில் சோனியா காந்தி, மேனகா காந்தி, அனில் கபூர் போன்றவர்களும் அடக்கம்.

- அப்ஸரா



ஆளுக்கு ஒண்ணு!



''எதுக்கு ஸார் இதை தொண்ணூற்று ஏழு ஜெராக்ஸ் காப்பி எடுக்கச் சொல்றீங்க?''

''தமிழ்நாடு காங்கிரஸின் ஐம்பத்தொரு மாவட்டத் தலைவர்களுக்கும் நாற்பத்தெட்டு பொதுச் செயலாளர்களுக்கும் ஆளுக்கு ஒண்ணு அனுப்பியாகணுமே!''

– உ. ராஜாஜி

''உங்களுக்குத்தான் ரிட்டயராகிற வயசாயிட்டுதே, வேலையில எப்படி எக்ஸ்டென்ஷன் கிடைச்சுது?''

''வீட்டுல சும்மா இருந்தா புத்தகம் எழுதுவேன்னு மிரட்டினேன்!''

– தூத்துக்குடி வி. சகிதா முருகன்





''மந்திரி ஏன் 'கடு கடு'னு இருக்காரு?''

''அவர் படத்தைப் போட்டு 'நாளைய முன்னாள் மந்திரி அவர்களே வருக! வருக!'னு யாரோ போஸ்டர் ஒட்டிட்டாங்களாம்!''

– தஞ்சை தாமு

''எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்யாத காரணத்தாலும், ஆளுங்கட்சியைக் கண்டித்து யாரும் அமளி – துமளி செய்யாத காரணத்தாலும், சபையைத் தொடர்ந்து நடத்த முடியாததால், பிற்பகல் இரண்டு மணி வரைக்கும் சபை ஒத்திவைக்கப்படுகிறது...''

– நாமக்கல் பாலு



பா. தட்சிணாமூர்த்தி

சேதி சொல்லு கிளியே!

கீழ ஆம்பூருக்கும் மன்னார் கோவிலுக்கும் மூன்று மைல் இடைவெளி. இந்த இடைவெளியில் இருக்கும் சிறு சிறு கல் பொற்றைகளின் ஊடாக ஓர் ஒற்றையடிப் பாதை சென்றது. இந்த ஒற்றையடிப் பாதையில்தான் அறிவம்மையும் ஆவுடையானும் தினம் பயணிப்பர்.

குறி சொல்லும் அறிவம்மை கீழ ஆம்பூரைச் சேர்ந்தவள்.

கிளி ஜோஸ்யன் ஆவுடையான் மன்னார் கோவில்காரன்.

இவன் கீழ ஆம்பூரிலிருந்து அதன் மேல் பக்கமுள்ள கிராமங்களுக்கு கிளி ஜோஸ்யம் சொல்லப் போவான். மன்னார்கோவிலிலிருந்து அதன் கிழ்ப்புறமுள்ள கிராமங்களுக்குக் குறி சொல்லப் போவாள் அறிவம்மை.

ஆக, கல் பொற்றை ஒற்றையடிப் பாதையில், தினம் ஒருவரையொருவர் கடந்து செல்லும் அவர்கள் இருவரும், ஒரு நாளும் பேசிக் கொண்டதில்லை.

> "அம்மே, உனக்கு யோகம்தான். நான் குந்தியதும் மன்மதனின் இந்த வாகனம் குரல் கொடுத்திட்டுதே!"

இவர்களது திருமணம் பற்றி, சமீப காலமாக, இவர்களின் விதவை மாதாக்கள் கவலை கொள்ள ஆரம்பித்தனர்.

அறிவம்மையின் தாய் இருவாட்சியம்மை, "கத்தரிக்காய் பருக்கும். உடனே அதைப் பறிச்சடணும். இல்லாட்டி அது முற்றிப் போகும். பொண்ணும் இப்படித்தான். அவ சமைஞ்சதும் அவளைக் கட்டிக் கொடுத்திடணும். இல்லாட்டி அவ அம்மன் சரஸ்வதியா குந்திடுவா" என்று ஒருநாள் புலம்ப, தன் தொழிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அறிவம்மை பட்டென்று அடக்கினாள்.

"இந்தா பாரு, சும்மா புலம்பாதே. என் இருபது வயசுலேயே இதை நீ எண்ணியிருக்கணும். அப்போ இதை எண்ணாமே 'போடி, குறி சொல்லப் போடி'ன்னு என்னைத் துரத்தினே. நானும் போனேன். ஊருக்கெல்லாம் குறி சொல்லியே என் தெம்பெல்லாம் போச்சு. இப்போ முப்பது வயசுக் குதிர். என்னை எவன் கட்டுவான்?" கோபமாய் அல்ல, சாந்தமாய்க் கேட்டாள், போய் விட்டாள்.

இருவாட்சியம்மை நொந்து கொண்டாள். "நிசந்தான். நான்தான் தப்பு செஞ்சிட்டேன்."

ஆவுடையானின் தாய் ஐயம்மா, "பையன் ஆம்பளையா மாறிட்டான்னா அவனுக்குத் தொண்டை கனத்திடும். அவன் உள்ளுக்குள்ளேயே சமைஞ்சிடுவான். உடனே காலம் கடத்தாமே அவனை ஒருத்திக் கையிலே ஒப்படைச்சிடணும். இல்லாட்டி அவன் பிள்ளையாரப்பனா உட்கார்ந்திடுவான்" என புலம்ப, அதைக் கேட்ட ஆவுடையான் தனக்குள்ளேயே நகைத்துக் கொண்டான்.



மத்தியான வேளை. முற்



றத்து வேப்பமரத்தடியில் உட்கார்ந்து உரலில் குத்திய கேப்பையைப் புடைத்துக் கொண் டிருந்தாள் இருவாட்சியம்மை.

தெருவில் குரல் கேட்டது.

"கிளி ஜோஸ்யம்... கிளி ஜோஸ்யம்."

புடைப்பதை நிறுத்திய இருவாட்சி யம்மை "ஏய்! கிளி ஜோஸ்யம்..." எனக் கூவினாள்.

மறுநிமிடம் ஆவுடையான் அவள் வீட்டு முற்றத்தில் நுழைந்தான்.

"அம்மே, நீதான் கூப்பிட்டியா?"

"ஆமாப்பா." எழுந்த இருவாட்சியம்மை தான் உட்கார்ந்திருந்த ஓலைப் பாயை எடுத்து உதறி, ஆவுடையானுக்கு முன்னால் விரித்துப் போட்டாள். "உட்காரு" என்றாள்.

ஆவுடையான், 'முருகா! வடிவேலா! உன் துணை!" என்று சொல்லி ஓலைப் பாயில் உட்கார்ந்தான். கிளிப் பெட்டியைத் தன் இடப்பக்கம் வைத்துக் கொண்டான்.

பாவம், சிறகுகள் முறிக்கப்பட்ட ஜீவன். ஆவுடையானின் ஜீவனோபாயத்துக்கு வழி செய்யும் அந்தப் பச்சைப் பறவை 'கீ! கீ!' என்று கத்தியவாறே கூண்டுக் கம்பிகளுக் கிடையே சிவந்த மூக்கை நுழைத்து ஆவுடையானைப் பார்த்தது.

"அம்மே, உனக்கு யோகம்தான். நான் குத்தியதும் மன்மதனின் இந்த வாகனம் குரல் கொடுத்திட்டுதே!" என்றவன் வசதியாகச் சம்மணமிட்டுக் கொண்டான்.


வெள்ளைச் சேலை முந்தானையை உதறி இடுப்பில் வரிந்துக் கட்டிக் கொண்ட இரு வாட்சியம்மை "ஜோஸ்யம் பார்க்கத் துட்டு

எவ்வளவு?" என வினாவிய படியே அவன் முன்பு உட்கார்ந்தாள்.

ஆவுடையான் சலித்துக் கொண்டான். "ஆமா கோடி ரூபா கேட்டுறப் போறேன். நீயும் கொடுத்திடப் போறே? பயப்படாதே. எட்டணாத்தான் ஆத்தா."

"ஏன், நாலணா போதாதா?"

"போதாது ஆத்தா. கிளிக்குப் பழமெல்லாம் வாங்கிக் கொடுக்கணுமே? பழங்களோ யானை விலை, குதிரை விலைக்கு உசந்திட்டுதே? உனக்குத் தெரியாதா?"



இருவாட்சியம்மை சிரசை ஆட்டிக் கொண்டாள். "சரி, என் மகளுக்கு ஜோஸ்யம் பார்க்கணும்."

"மகளுக்கா?"

"ஆமா. அவளுக்கு எப்போ கலியாணம் ஆகும்னு பார்க்கணும்."

"அவ பேரு?"

"அறிவம்மை."

"பேரு நல்லாருக்கே? உம். தட்சணை வை" என்ற ஆவுடையான் கிளிக் கூண்டின் கதவைத் திறந்தான்.

இருவாட்சியம்மை சேலை முந்தியில் போட்டிருந்த முடிச்சை அவிழ்த்து, அதிலிருந்து இரண்டு நான்கணா நாணயங்களை எடுத்து, கிளிக் கூண்டின் முன் வைத்தாள்.

கதவு திறக்கப்பட்டு விட்டாலும் கிளி வெளியே வரவில்லை. கூண்டின் கதவு வாசலில் நின்றது. வெளியுலகத்தைப் பார்த்தது. அப்படியே பறக்க ஆசைப்பட்டு இருக்கிற மொட்டைச் சிறகுகளை விரித்துப் படபடவென அடித்துக் கொண்டு மேலே எழுந்தது. பாவம், மூன்று அங்குல உயரம் போனதும் அப்படியே கீழே விழுந்துவிட்டது.

ஆவுடையான் இதையெல்லாம் அசிரத்தையாகக் கவனித்த படியே, கிளிக் கூண்டின்மேல் பொருத்தப்பட்டிருந்த சிறு பெட்டியைத் திறந்து அதிலிருந்து பத்துக்கு மேற்பட்ட ஜாதகக் குறிப்பு அட்டைகளை எடுத்துப் போட்டான்.

விழுந்த கிளி எழுந்து நின்றது. அதனிடம் அவன் சொன்னான். "பச்சையப்பா, பாட்டிக்கு நல்ல சேதி வேணும். ஒரு யோக ஜாதகத்தை எடு."

பழக்க தோஷம். அந்தப் பழம் தின்னிப் பறவை ஆவுடையான் சொன்னதைப் புரிந்துகொண்டது. அலகால் மூன்று ஜாதகக் குறிப்பு அட்டைகளை ஒதுக்கித் தள்ளி, நாலாவது அட்டையை அந்த அலகால் கவ்வியெடுத்து அவனிடம் கொடுத்தது.

ஆவுடையான் ஜாதகக் குறிப்பு அட்டையைக் கண்ணில் ஒற்றிக் கொண்டவன், கிளியைக் கூண்டுக்குள் தள்ளிக் கதவை அடைத்தான்.

"அம்மே கேளு. படிக்கேன். ஆனைமுகன் துணை. இது யோக ஜாதகம். நீ எண்ணியது கைகூடும். வியாபாரத்தில் லாப விளைச்சல் வரும். வயலில் நல்ல வெள்ளாமை பொங்கும். அழகு பொங்கி நிற்கும் கன்னியின் கழுத்தில் காளை கை வைப்பான். தாலி பூக்கும்."

ஆவுடையான் இருவாட்சியம்மையைப் பார்த்தான்.

தன் மூளிக் கழுத்தைத் தடவிக் கொண்டு "ஜோஸ்யம் நிச்சியம் பலிக்குமா? கடவுளே" என்றவளிடம் ஆவுடையான் இப்படி அழுத்தமாகச் சொன்னான்:

"ஆமா. நிச்சயம் பலிக்கும். சத்தியமா உன் மக கழுத்தில் தாலி ஏறும். இது முருகன் சொல்!"

இருவாட்சியம்மை தலையை ஆட்டிக் கொண்டு "எனக்குக் கொள்ளை சந்தோஷம். ஆமா, நீங்க எவ்வளவு நல்லதை நல்லா அடிச்சுச் சொல்லுதீங்க? ஆனா, ஊருக்கெல்லாம் குறி சொல்லும் அந்த மூதேவிக்கு இப்படிச் சொல்லத்

தெரியுதா?" என்று அறிவம்மையைக் குறிச்சு ஆதங்கம் பட்டுச் சொன்னவளை, ஆவுடையான் ஏறிட்டு நோக்கினான்.

"அம்மே, என்ன சொல்லுதே?"

"என் மக அறிவம்மையைத்தான் சொல்லுதேன். அவ நார்ப் பெட்டியையும் சிறு கோலையும் தூக்கிக்கிட்டுக் குறி சொல்லப் போறாள்ல்லா ஊர் ஊரா? அதைச் சொல்லுதேன்."

"நார்ப்பெட்டியையும் சிறு கோலையும் தூக்கிக்கிட்டா?"

"ஆமா. தினம் வெய்யில்லே அந்தப் பொத்தை ஒத்தையடிப் பாதையிலே போறாளே ஒண்டியா?"

"அப்பமன்னா?"

"தம்பிக்கு எந்த ஊரு?"

"மன்னார்கோவில்!"

"மன்னார்கோவிலா? எம் புள்ளை அந்த ஊரையும் தாண்டித்தானே குறி சொல்லப் போறா. வயது முப்பதாச்சு. முழு மரமா நிக்கா. கல்யாணப் பூப் பூக்காமெ."

ஆவுடையானின் மனக் கண்ணில் அந்தக் கல் பொற்றையின் ஒற்றையடிப் பாதையில் தினம் தான் பார்க்கும் பூச்செண்டுப் போன்ற மேனி - பெண்மேனி, பொன்மேனி சதிராடியது.

இதே நேரத்தில் அங்கே மன்னார்கோவிலில் ஆவுடையான் வீடு. அவனின் தாய் ஐயம்மா அந்தப் பூச்செண்டு மேனி அறிவம்மையிடம் "நல்லவேளை, நீ வந்து சேர்ந்தே. நல்லா குறி சொல்லிட்டே? எம் மவனுக்கு நிச்சயமா கலியாண யோகம் வந்திட்டுதுங்கே?" என மனத்திருப்தியுடன் கேட்டவள், அறிவம்மைக்கு அரைப்படி நெல் கொடுத்தாள்.

அறிவம்மை கைக்கோலை ஆட்டிக் கொண்டாள். "நிச்சயமா பாரம்மே, வள்ளிக் குறத்திக் கள்ளன் என் நாவிலே நடமாடிச் சொல்லியிருக்கான். உன் மவன் ஒரு பொட்டை மயிலுக்குப் பொட்டு வச்சிடுவான்."

ஐயம்மா ரொம்ப மனம் மகிழ்ந்து போனாள். "அடி என் ராசாத்தி குறமகளே, நீ சொல்றது எவ்வளவு சந்தோசமா இருக்கு எனக்கு? ஆனா, இப்படிச் சொல்லத் தெரியுதா என் மவனுக்கு? அவன் ஊருக்கெல்லாம் கிளி ஜோஸ்யம் சொல்லுதான்."

"ஊருக்கெல்லாம் கிளி ஜோஸ்யம்... அம்மே, என்ன சொல்லுது?"

"ஆமா தாயி. எம் மவன் ஆவுடையான் கிளி ஜோஸ்யக்காரன், கிளிப்பெட்டியைத் தூக்கிக்கிட்டு அந்தப் பொத்தை ஒத்தையடிப் பாதை வெயில்ல, வெந்துக் கருகிக்கிட்டுப் போய் கிளி ஜோஸ்யம் சொல்லுதான்."

"அப்படியா...?"

"ஆமா. கிழ ஆம்பூரு. அதுக்கு மேக்காலெ உள்ள ஊர்களுக்கெல்லாம் போவான். நல்ல பேரு. ஆனா, அவனுக்குத் தன் கல்யாணத்தைப் பத்தித்தான் ஜோஸ்யம் சொல்லத் தெரியலே. வயது முப்பதைத் தாண்டி அஞ்சையும் தொட்டாச்சு."

இப்படிச் சொல்லி ஓர் ஆயாசப் பெருமூச்சு விட்ட ஐயம்மாவைப் பார்த்தாள் அறிவம்மை. அவள் மனத்தில் கருட்டைத்

தலை, நெற்றி முட்டத் திருநீற்றுப் பூச்சு. ஒரு சந்தனப் பொட்டு. அந்தச் சந்தனப் பொட்டின் நடுவில் செங்குங்கும சிறு பொட்டு. மேல் சட்டை மேல் ஒரு டவல். ஒரு கையில் கிளிக்கூண்டு. இத்தியாதி நிலையில், தினம் அந்த ஒற்றையடிப் பாதையில் தன்னைக் கடந்து சொல்லும் ஒல்லி உருவம்



தோன்றியது. அவள் மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள்.

மறுநாள்.

அறிவம்மை என்றைக் குமில்லாதபடி தன்னை அலங்கரித்துக் கொண்டு குறி சொல்லக் கிளம்பினாள்.

மானுட மரம்

மண்ணைப் பற்றிடும்
மார்க்கமல்ல மானுடம்!
கருத்தரித்த நாளது முதலாய்
கட்டையெரிக்கும் நாளதுவரை
புலம் பெயருதல் உயிரின் மார்க்கம்!



'கற்றல், கேட்டல், அறிதல், புரிதல்
நடத்தல், ஓடுதல், நீந்துதல், பறத்தல்'
புலம் பெயர்த்திட
உயிர் சுமக்கும் வாழ்வியல் ஊர்திகள்

வேர் விட்டு நீருறிஞ்சித்
தன்னை உயிர்க்கும்
தாவர மரமல்ல!
கண்ணீர் விட்டுக்
கசிந்துருகித்
தன்னை உணரும்
மானுட மரம்!

இந்த மரத்தில் இளைப்பாறுபவை
பறவைகள் மட்டுமல்ல
இலைகளும் கிளைகளும்கூட!

இலையுதிர் காலத்தைக் கண்டோ
இல்லை வெட்டும் கோடரியைக் கண்டோ
மரங்களுக்குப் பயமிருப்பதில்லை
மானுடத்திற்குண்டு பயம்
மற்றும்
அதன் மரணம் குறித்தும்.

- நாகரத்தினம் கிருஷ்ணா

அன்று வானத்தில் மேகங்களின் சஞ்சாரம் அதிகமிருந்தது.

ஐயம்மா சொன்ன 'குறி'க் கதையை நினைத்துக் கொண்டே ஆவுடையானும் அந்தப் பொற்றை ஒற்றையடிப் பாதையில் வந்து கொண்டிருந்தான். அவன் தன் உடுப்புக்களில் செண்டு தெளித்திருந்தான்.

அனாதையாய், குசேலன் நிலையில் அந்த ஒற்றையடிப் பாதையில் நின்ற ஓர் உசிலை மரத்து அடியில், அவர்கள் இருவரும் ஒருவர் முன் ஒருவர் நின்றனர். அவர்கள் இருவருக்கும் முன்னுக்கு நகரும் எண்ணம் இல்லை.

அவள் மூக்கில் மல்லிகைப் பூ வாடையும் அவன் மூக்கில் செண்டு வாசமும் புகுந்தன. அந்த வாடையும் அந்த வாசமும் அவர்களின் விருப்பத் தூதுக்களாய் இருந்தன. இருவரும் மூக்கை உறிஞ்சிக் கொண்டனர்.

அறிவம்மை நாணம் மேலிடத் தலை குனிந்தாள். நிலம் நோக்கினாள்.

ஆவுடையான் அவளை நேரே நோக்கினான். "என் அம்மா எனக்கு நீ குறி சொன்னதைப் பத்திச் சொன்னா."

நாணம் ஏறியிருந்த முகத்தை உயர்த்தாமலே கூறினாள். "என் அம்மாவும் சொன்னா இந்தக் கிளியைப் பத்தி" என்றவள் கிளிக் கூண்டைச் சுட்டிக் காட்டினாள்.

"நேசமிக்க நேர் வகிடு உனக்கு. உன் தலையின் நேர்வகிட்டில் செங்குங்குமப் பொட்டு வைக்க எனக்கு ஆசை."

அறிவம்மை தலை தூக்கினாள். அவனைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

உடனே கணக்கம் இல்லை. தயக்கம் இல்லை. ஆவுடையான் கேட்டான். "உனக்குச் சம்மதமா?"

அறிவம்மையின் மேனியில் புல்லரிப்பு. அவள் பேசவில்லை. துடிநடையில் செருகியிருந்த கைக்கோலை எடுத்து நார்ப் பெட்டியில் வைத்தாள். மௌனமாய், நார்ப்பெட்டியைத் தூக்கி அவன் காலடியில் வைத்தாள்.

ஆவுடையான் மட்டற்ற மகிழ்ச்சியுடன் சுமந்து நின்ற கிளிக்கூண்டை அவள் காலடியில் வைத்தான். கிளி 'கீச் கீச்' என்று காதல் பொங்க சப்தமிட்டது....○

பலூன் சிகிச்சை என்பது இதயத்தில் உள்ள தடைப்பட்ட ரத்தக் குழாய்களை சரி செய்வதற்குப் பயன்படும் ஒருமுறை என்பது தெரிந்திருக்கும். ஆனால் இப்போது அதிகப் படியான கருப்பை ரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தவும், இந்தச் சிகிச்சை அறிமுகமாகியிருக்கிறது. அரிசோனாவைச் சேர்ந்த கைனகாலஜிஸ்ட் டாக்டர் பிராங்க்ளின் லோபர் என்பவர், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இது குறித்துப் பேசினார்.

பொதுவாக ஒரு மாதவிலக்குச் சுழற்சியின் போது ஐம்பதிலிருந்து அறுபது மில்லிலிட்டர் வரை ரத்தம் வெளியேறுவது இயல்பானதுதான். ஆனால் இது என்பதுக்கும் அதிகமானால், அதை 'அதீத ரத்தப்போக்கு' என்று குறிப்பிடலாம். மாதவிலக்கு ஏற்படும் பெண்களில் ஐவரில் ஒருவருக்கு இந்தப் பிரச்னை இருக்கிறதாம். இது எப்படி. பிரச்னையாகும்? அதிக ரத்தப்போக்கு ஏற்படும் சமயத்தில் கோபம் மற்றும் அச்ச உணர்வு, உடலின் சக்தி குறைவது, மிகவும் சோர்வு ஏற்படுவது போன்ற பலவிதங்களில் அந்தப் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைப் பிறரிடம் கூறவும் தயக்கம். மருத்தவரிடம் கூறவும் பயம். கருப்பையை நீக்கிவிட வேண்டும் என்று டாக்டர் கூறிவிட்டால்? தெர்மாசாய்ஸ் எனப்படும் கருப்பை பலூன் சிகிச்சை முறையைப் பரிந்துரைக்கிறார் டாக்டர் லோபர். இதற்காக சுமார் எட்டு மணி நேரம் மருத்துவமனையில் செலவிட்டால் போதுமானது. சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியமில்லை. இதில் பலூன் போன்ற ஒரு சாதனத்தால், கருப்பையின் வெளிப்புறச் சுவர் மீது வெப்பம் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது. உட்புறமாக எந்தச் சாதனமும் வைக்கப்படுவதில்லை.

இந்த சிகிச்சையின் பலன் என்ன? குறைந்த நாட்களுக்கு குறைந்த அளவே மாதவிடாய் வரும். அல்லது சுத்தமாகவே மாதவிடாய் நின்று போகலாம். (எனவே 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இது பரிந்துரைக்கப் படுகிறது). சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு சுமார் இருபது வருடங்களுக்குப் பிறகு, மீண்டும் அதிக உதிரப்போக்கு ஏற்படும் வாய்ப்பு நேரலாம் என்பதால், இளம் பெண்களுக்கு இது ஏற்றதில்லை.

இந்த சிகிச்சை முறையை மேற்கொண்ட சில பெண்களும் அப்போலோ மருத்துவ





• ஜெயந்தி

• ஆக்னஸ்

பெண்களுக்கு பலூன் சிகிச்சை!



மனை அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். சிகிச்சைக்குப் பிறகு நல்ல பலன் இருப்பதாகக் கூறினார்கள். இவர்கள் இந்த சிகிச்சையை மேற்கொண்டு ஓரிரு வருடங்களாகின்றன.

திருநெல்வேலி பகுதியில் இந்த சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியிருக்கும் டாக்டர் அக்னஸ் என்பவரிடம் பேசினோம். "ஒரு பலூன் சாதனத்தின் விலை சுமார் இருபதாயிரம். ஒருமுறை பயன்படுத்த வேண்டும் என்கிறார்கள். ஆனால் நடைமுறையில் இதை நன்கு ஸ்டெரிலைஸ் செய்துவிட்டு மீண்டும் பயன்படுத்துகிறோம். சிகிச்சைக்கு, ஐந்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரை ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம்" என்றார்.

அதிக ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்துவதுதான் இந்த சிகிச்சை முறையின் ஒரே நோக்கம் என்பதை வலியுறுத்தினார்கள். அதாவது கருப்பையில் உண்டாகக்கூடிய பிற பிரச்னைகளை, இது தீர்க்காது - அதே சமயம் கருப்பை பிரச்னைகளுக்கு இது காரணமாகவும் இருக்காது என்கிறார்கள்.

இதுவரை உலகம் முழுவதும் இந்தச் சிகிச்சையை மேற்கொண்ட இரண்டு லட்சம் பெண்களில், 96 சதவீதம் பேர் மூன்றாண்டுகளுக்குப் பின்னும் எந்தப் பிரச்னையுமின்றி சந்தோஷமாக இருக்கின்றார்கள் என்கிறது 'பலூன்' தயாரிப்பு நிலையம். மேல் விவரங்களுக்கு இதற்கென்று உள்ள இணையத்தளம் www.controlheavyperiods.com/India.

- ஆதர்ஷ்

ஜய ஜய சங்கர   உ   ஹர ஹர சங்கர

ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி பக்த ஜன ட்ரஸ்ட் (Regd)

20/ 36 போஸ்டல் காலனி முதல் தெரு, மேற்கு மாம்பலம் - சென்னை - 600 033. ☎ : 2371971

பக்த கோடிகளுக்கு ஓர் விக்ஞாபனம்,

ஸாக்ஷாத் பரமாத்மாவும் கைலாஸபதியும் பரம கருணாமூர்த்தி வாரி வழங்கும் பெருவள்ளல் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஆனந்த நடராஜ மூர்த்தியுமான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாள் அவர்கள் நாம் இந்த கலியுகத்தில் உய்யும் பொருட்டு அவதாரம் செய்து நம்முடைய பாரத தேசம் எங்கிலும் தம்முடைய திருப்பாதங்களினால் நடந்தே சென்று ஜாதி சமய வேறுபாடின்றி நம்முடைய மூன்று தலைமுறையினருக்கும் அனுக்ரஹம் செய்தவர்கள் ஆவர். அவரை தரிசித்த மாத்திரம் நம்முடைய பாபங்களிலிருந்து விடுபட்டு நமக்கு க்ஷேமம் ஏற்பட வழிவகை செய்த அவர்களை தரிசித்த நாம் மகா பாக்யசாலிகள் ஆவோம்.

நம்முடைய குலகுருவாக விளங்கி வரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீமஹாபெரியவாளின் ஜன்ம நக்ஷத்ரமான அனுராதா (அனுஷம்) சுபதினத்தில் மேற்கண்ட டிரஸ்டின் ஆதரவுடன் ப்ரதிமாதந்தோறும் கடந்த 12 வருடங்களாக ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் மாதாந்திர அனுஷ ஜயந்தி பக்தர்களின் பேராதரவோடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அன்றைய தினம் காலை 9 மணிக்கு கோபூஜை, ஆவஹந்தி ஹோமம், ஸ்ரீஸூக்த ஹோமம், ஸுவாஸினி பூஜையும் இரவு 7 மணிக்கு ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் திருவீதி உலா, மங்களவாத்யம், வேத பாராயணம், தேவார இன்னிசையுடனும், தொடங்கி அன்னதானத்துடன் நடைபெற்று வருகின்றது. இந்த மகத்தான புண்ய கைங்கர்யத்திற்கு ப்ரதி மாதந்தோறும் ரூ.8,500 வரை செலவாகின்றது.

இந்தக் கோலாகலமான வைபவத்தை தொடர்ந்து ஸாஸ்வதமாய் நடத்த உத்தேசித்திருப்பதினால் காஞ்சி மா தெய்வத்தின் அடியார்களாகிய நாம் அனைவரும் ஜாதிமத வேறுபாடின்றி இதில் கலந்து கொண்டும் உடனிருந்தும் ஒத்துழைப்பது நமது பெருங்கடமையாகும். நமது க்ஷேமத்திற்காக காலம் முழுவதும் கடுந்தவம் இயற்றி தற்பொழுது நமக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் அனுஷ ஜயந்தி புண்ய கைங்கர்யத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் அவசியம் கலந்து கொண்டு குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பக்ஷம் ரூ.1 வீதம் (ரூபாய் ஒன்று மட்டும்) காணிக்கை அளித்து தங்களையும் தங்களின் குடும்பத்தினரையும் ஈடுபடுத்தி ஒவ்வொரு மாதமும் நடைபெறும் அனுஷ ஜயந்தியில் அனைவரும் பங்கேற்று ஸத்ய ஸாஸ்வத பரம்பொருளான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் பேரனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்ஸையும் அடையும்படி ப்ராத்திக்கிறோம்.

இப்படிக்கு

ஸ்தாபகர் / மேனேஜிங் ட்ரஸ்டி

<u>நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி பக்த ஜன ட்ரஸ்ட்
20/36 போஸ்டல் காலனி, முதல் தெரு, சென்னை - 600 033.

(நன்கொடைகள் வருமான வரிச்சட்டம் 80 ஜி யின் படி வரிவிலக்கு பெறப்பட்டது)

அம்மாயி

பாபு யோகேஸ்வரன்

"எந்த உலகத்துலயாவது இந்த அநியாயம் உண்டா... ரெண்டு குமரிப்புள்ளைங்க... ஒரு வயசுக்கு வந்த பயலை வீடு தேடி வந்து கூட்டிக் கிட்டு எங்கியோ போறீங்க... வூட்டுல பெரிய மனுசங்க இல்ல? அவங்ககிட்ட விவரம் சொல்ல வேணாம்...? பத்துநா புள்ளையில இருந்து இவனைத் தூக்கிட்டு வந்து வளக்கறேன். இவனுக்கு ஏதாவது ஒண்ணுன்னா தாங்க முடியுமா...? இதெல்லாம் நல்லாவா இருக்குது? நீங்கள்லாம் படிச்ச புள்ளைங்க தானே... ஊருக்குள்ள இப்படி ஜோடி போட்டுக்கிட்டுக் கிளம்பினா... நாலு பேரு நாலு விதமாப் பேச மாட்டாங்க..? கல்லடிக்குத் தப்பினாலும் தப்பலாம்... சொல்லடிக்குத் தப்ப முடியுமா...?"

சுமார் அரை மணி நேரத்துக்கு, தட்டச்சுப் பள்ளித் தெரு முழுவதும் அம்மாயியின் சத்தம் நிறைந்தது.

அதன் பிறகு நான் பெரும்பாலான மாணவர்களைப் போலவே அரசு கலைக் கல்லூரியில் இளம் அறிவியல் படிக்கப் போனதும், கோடம்பாக்கம் கனவுகள் சாகா வரம் பெற்று என்னை சென்னைக்குத் துரத்தியதும் அனிச்சையாக நிகழ்ந்தவை.

"நம்ப விவிங்குகெதர் கான்செப்ட் பத்தி உன் அம்மாயி என்ன சொல்லும்...?" என்று அமலி கேட்ட கேள்விக்கு, வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு விதமாக யோசித்துப் பார்த்தும், அம்மாயியின் பதில் என்னவாக இருக்கும் என்பதை என்னால் யூகம் பண்ண முடியவே இல்லை.

அம்மாயியை, அம்மாயி என்று எப்போதுமே அழைத்ததாக எனக்கு நினைவில்லை. அம்மா என்று அழைப்பதுதான் வழக்கம். அம்மாயிக்கும் அவ்வாறு அழைப்பதில் எந்த அதிருப்தியும் இருந்ததில்லை.

அதிகாலையில் எழுந்து, மாடுகளை தொழுவத்திலிருந்து பிரித்துக்கட்டி, பெரிய வாசல்களையும் தெளித்து, கூட்டி, கழிவுத் தட்டைகளை முக்கல் அடுப்பில் திணித்து, நெல் வேக வைத்து, தனியாளாகக் கீழே இறக்க, நீர் வடித்து, வாசல் நிறைய நெல் பரப்பி, பகல் முழுவதும் காலால் கிளறிவிட்டு, காக்கை குருவிகளிடமிருந்து காப்பாற்றி, கல்மண் இல்லாமல் அள்ளி, குதிரில் சேகரித்து வைக்கும் அம்மாயியைத்தான், எனக்கு நீண்ட நாட்களாகத் தெரியும்.

கலியபெருமாள் காட்டில் பாலை இலை பறிக்கவும், கடலைக் கொடி பிடுங்கவும், வீட்டுக்கிணறில் கூடு கட்டி எச்சம் கழிக்கும் காக்கைக் குடும்பத்தைத் துரட்டியால் துளாவிக் கலைக்கவும் என, ஆரம்பப் பள்ளிக் காலத்தில் அம்மாயியுடன் தான் என் பெருமளவு நேரம் போயிருக்கிறது.


'அஞ்சு போட்டிருக்குதே... இது அஞ்சு ரூவாயா... அம்பது ரூவாயா...?' என்று அம்மாயி கேட்டபோது விழுந்து விழுந்து சிரித்திருக்கிறேன்.

"ஏம்மா... அஞ்சு ரூவா சின்னதா இருக்கும். அம்பது ரூவா பெரிசா இருக்கும். எத்தினி தடவை சொல்லியிருக்கேன்...? நீ கொஞ்சம் கூட படிக்கலியா..?"

"அவ்வளவுதூரம் எங்க ஆயி என்னைப் படிக்க வச்சிருந்தா, நான் ஏன் இப்படி இருக்கேன்..."

விரக்தியோ துக்கமோ அற்ற கண்ணாடித்தளம் போன்ற குரலில் தான் அம்மாயி பேசும், என்றாலும் அதன் பரப்பில் மெல்லிய தூசுப்படலமாய் ஒரு சோகம் படர்ந்திருக்கும்.

ஆனால் ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கையாள, அம்மாயி கற்றுக் கொள்வதற்கான தினமும் வந்தது.



தட்டெழுத்துப் பயிற்சி முடிந்து நான்

ஊர் திரும்பும் பேருந்து, எங்கள் வீட்டு வழியாகத்தான் செல்லும்.

''நல்லப்பநாய்க்கன்பட்டி...'' என்று கத்தியவாறு நடத்துனர் விசிலை ஊத... நான் இருக்கையை விட்டு எழுந்தேன். தற்செயலாக ஜன்னல் வழியாக வீட்டைப் பார்க்க... திண்ணையில் பத்து இருபது பேர் கூடியிருப்பது தெரிந்தது.

பேருந்து நிற்பதற்குள் குதித்து.

பதற்றத்தோடு வீட்டை நெருங்கி, காம்பௌண்ட் கதவைத் திறந்தால்...

''விடுடி... தொடாத...அடச்சீ... வுடு கையை...'' என்றவாறு தாத்தா வாசலில் - இடுப்பிலிருந்து நழுவிய வேட்டியை ஒரு கையில் மடித்துக் கொண்டு அலைந்து கொண்டிருந்தார்...

''ஒனக்குத்தான் கைவி வரமாட்டேங்குது இல்ல...? நான் கட்டிவுடறேன்... வுடு...''

வழக்கமான அதிகாரக் குரலோடு அம்மாயி தாத்தாவின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தது. இவர்கள் இருவரின் போக்குக்கும் ஏற்றவாறு கூட்டம் அசைந்து வழி விட்டுக் கொண்டிருந்தது.

''இந்தாம்மா... உம் பேரன் வந்துட்டான்...'' கூட்டத்தில் யாரோ குரல் கொடுக்க...

அம்மாயி அப்படியே தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்தது.


''எலே தம்பி... உன் தாத்தாவுக்கு பச்சவா கண்ணி வந்துடுச்சுடா... எந் தலையிலே இடிவுழுந்துடுச்சுடா...''

பெருங்குரலெடுத்து அலறியது.

அம்மாயியின் குரலைப் பொருட்படுத்தாமல், நழுவிய வேட்டியை இழுத்துச் செருகும் வேலையில் தாத்தா மும்முரமாய் இருந்தார்.

''இன்னமே நான் என்னா பண்ணுவேன்... எனக்கு என்னா தெரியும்...? ஒரு கையெழுத்து ஒழுங்காப் போடத் தெரியுமா... சந்தை சாவடிக்குப் போவத் தெரியுமா... நாலு காசு அஞ்சு காசு சேக்கத் தெரியுமா...? ஒரு பய இருக்கான்... பாதகத்தி சண்டாளி... படிக்கற வயசில வுட்டுட்டுப் போயிட்டா... இவனை எப்படி வளத்து ஆளாக்குவேன்...''

அம்மாயியின் அழுகை, அடுத்த மாதம் முதல் வாரம் தாத்தாவின் பென்ஷன் பணம்





''அவங்க அடிக்கறாங்க, நீங்க பாட்டுக்குச் சிரிக்கறீங்களே?''

''அவங்க அடிக்க வந்தது வேற யாரையோ. என்னையில்லை, ஏமாந்துட்டாங்க!''

- எம். சங்கர்

வாங்குவதற்காக... நாமக்கல் பேருந்து ஏறும் வரை தொடர்ந்தது.

"இவ்ளோ வண்டியைத் தாண்டிப் போயித் தான் இந்த மனுசன் மாசா மாசம் பணம் வாங்கிட்டு வந்தாங்களா...?''

பிரதான சாலையைக் கடந்து வங்கியை அடையும்வரை வழி நெடுகிலும் அண்ணாந்து பார்த்துக்கொண்டே வந்தது. வங்கிக்குள் நுழைந்ததுமே அம்மாயியின் பேச்சு மூச் செல்லாம் நின்று போனது. நூற்றுக்கணக்கான மனிதர்கள் விதவிதமான காகிதங்களோடும், கத்தை கத்தையாகப் பணக்கட்டுகளோடும், நடமாடுவதைப் பார்த்து ஒருவித திகிலில் உறைந்து போனது.

"இன்னமே நீ வர வேண்டியதில்லம்மா... உங்க வீட்டுக்காரருகிட்ட இதுல கையெழுத்து வாங்கி, உங்க பேரன் கிட்ட கொடுத்துவிடுங்க... நாங்க பணம் கொடுத்துடறோம்...''

''இல்லீங்க... இல்லீங்க.. இன்னமே வர மாட்டேன்...''

''அட.... உங்களை வரவேணாம்னு சொல் லலம்மா.. வீணா அலைஞ்சு சிரமப்படாதீங்க... இந்தப் பையன் உங்க வீட்லதானே இருக் கான்...?''

''ஆமாங்க... மவ வூட்டுப் புள்ள... பத்துநா புள்ளையில இருந்து... நான்தான் சாமி வளர்க்கறேன். மவ செத்துப் போச்சு...''

வங்கியை விட்டு வெளியில் வரும்போது,

''ஏம்மா... நம்ம வூட்டுப் புராணத்தை எதுக்கு எல்லாத்துக்கிட்டயும் சொல்றே... பத்து நா புள்ளையில வளர்த்தேன்... பதினைஞ்சு நா புள்ளையில வளர்த்தேன்னு...''

என்று நான் சிடுசிடுக்க ...

''ஏண்டா... சொன்னா என்னா... அந்த ஆளு எவ்வளோ தன்மையா பேசறாரு...'' என்று பதிலுக்கு அதட்டியது.

ஒரு வங்கிக்குள் முதன் முதலாகச் சென்று வந்த வியப்பு, அம்மாயிக்கு வழி நெடுகிலும் அடங்கவில்லை.

''அவ்ளோ பணம் சம்பாதிக்கறாங்களா...? அந்தப் பணத்தை எல்லாம் இவங்க வாங்கி எங்க வக்கிறாங்க...? நம்ம முருவன் பயமாதிரி காசாசை புடிச்சவன் எவனும் ராத்திரியில உள்ள பூந்து திருடிக்கிட்டுப் போய்ட்டான்னா, என்ன பண்றது...? ஒவ்வொருத்தருக்கும் வர்ற காசை அவங்கவங்க பேருல தனியா பிரிச்சு அடுக்கி வைப்பாங்களா...?''

வீட்டுக்குள் நுழைந்து தாத்தாவை அடையும் வரை இப்படியான கேள்விகள் தொடர்ந் தன.

திண்ணையில் சம்மணமிட்டு எங்கோ தொலைவை வெறித்தபடி அமர்ந்திருந்த தாத் தாவைப் பார்த்ததும் ஒரு விநாடி செயலற்று நின்றது அம்மாயி... கண்களில் எப்போது நீர் கட்டியது என்றும் தெரியவில்லை.

''இன்னிக்குத்தான் நீ வரவு செலவு வச் சிருந்த எடத்துக்குப் போய்ட்டு வந்தேன். எவ்ளோ பெரிய எடத்துக்குப் போய்ட்டு வந்துக்கிட்டிருந்த மனுஷன்... இப்ப இப்படி உட்கார்ந்துருக்கற...?'' என்ற அம்மாயி, தன் சுருக்குப் பையிலிருந்து வங்கிக் கணக்குப் புத்தகத்தையும், பணத்தையும் எடுத்து நீட்டியது.

அம்மாயியின் வார்த்தைகளையோ, உணர்வையோ புரிந்து கொள்ள முடியாத தாத்தா...

''என்னா...? பே...பேங்குக்குப் போய்ட்டு வந்துட்டியா...?'' என்று குழறினார்.

கையில் பிடிக்க முடியாமல் பாஸ் புத்தகமும், ரூபாய் நோட்டுக்களும் தரையில் சிதறிப் பறந்தன...

இரவு பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தபோது...

''அம்மாயி ஃபோன் பண்ணினாங்க...'' என்றாள் அமலி.

''என்ன விளையாடுறே...? அவங்களுக்கு லெட்டர் எழுதுறதுன்னாலே முடியாது''

''ப்ச்! அது அப்ப. இப்ப அவங்களே போஸ்ட் ஆபீஸ்ல பணம் கட்டி டெலிஃபோன் கனெக்ஷன் வாங்கி வச்சிருக்காங்க...''

நான் அமலியின் கண்களில் அவ்வளவு உற் சாகத்தை இந்த இரண்டு ஆண்டுகளில் பார்த்ததே இல்லை.

''என்ன சொன்னாங்க...?''

''உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறதுக் காக - தன்னோட பொண்ணைக் கூட்டிக்கிட்டு வந்து வீட்டோட உக்காந்திருக்கிறாராம், உன் தாய் மாமா... நீ உடனே வரணுமாம்...''

(தொடரும்)



சந்தா கட்டுங்க! பரிசு தட்டுங்க!

கல்கி சந்தாதாரருக்கு புத்தாண்டு - பொங்கல் பரிசு!

அமரர் கல்கி எழுதிய நூல்!

கல்கி பத்திரிகை வாரம் தோறும் உங்கள் வீடு தேடி வர சந்தா செலுத்துங்கள்; பரிசும் பெற்று மகிழுங்கள்.

ஓராண்டுச் சந்தா ரூ.330/-

செலுத்துவோருக்கு பின்வரும் மூன்று புத்தகங்களில் ஏதேனும் ஒன்று பரிசு. நீங்களே தேர்வு செய்யலாம். பரிசுப் புத்தகத்தின் மதிப்பு ரூ.65 முதல் ரூ.75/- வரை.

1. **தியாகபூமி** *(நாவல்)*
2. **மனிதன் எப்படி உயர்கிறான்?** *(கல்கி எழுதிய சினிமா, நாடக விமர்சனங்களின் தொகுப்பு)*
3. **எழுத்துலகில் அமரதாரா** (அமரர் கல்கி பற்றி பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)

இரு ஆண்டுகளுக்கு சந்தா ரூ.660/-

செலுத்துவோருக்கு **'கல்கி களஞ்சியம்'** பரிசாக வழங்கப்படும். (அமரர் கல்கி எழுதிய சிறுகதைகள், குறுநாவல்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் முதலியவற்றிலிருந்து மிகச் சிறந்தவற்றின் தொகுப்பு. கல்கி கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு வெளியீடு. பரிசுப் புத்தகத்தின் மதிப்பு ரூ.150/-

மூன்றாண்டுச் சந்தா ரூ.990/-

செலுத்துவோருக்கு **அமரர்** கல்கி எழுதிய **சிவகாமியின் சபதம்** அல்லது **அலை ஓசை** நாவல் பரிசு. புத்தகத்தின் மதிப்பு ரூ.200/- முதல் ரூ.250/-வரை.

இந்தச் சிறப்புச் சலுகை *07.02.03* **தேதி வரை** மட்டுமே. எனவே முந்துங்கள்! உடனே சந்தா அனுப்பி பரிசு பெறுங்கள்! உங்கள் விலாசத்தைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்.

ஏற்கெனவே சந்தாதாரராக உள்ளவரும் தங்கள் சந்தா எண்ணைத் தெரிவித்து தொகை அனுப்பலாம். உங்கள் சந்தா, முடிவு தேதியிலிருந்து புதுப்பிக்கப்படும். **கல்கி** என்ற பெயருக்கு உள்ளூர் செக்*, மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
47-என்.பி., ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

*(வெளியூர் காசோலைகள் (Cheques) ஏற்க இயலாது.)


சீருக்கு சிறப்பு
PURE GHEE SWEETS
அடையார் ஆனந்தபவனின் சீர் வரிசை பதார்த்தங்கள்
அடையார் ஆனந்த பவனின் பருப்பு தேங்காய் கூடு, கை முருக்கு, தேன்குழல், அதிரசம், லட்டு, ஜாங்கிரி, பாதுஷா – அனைத்தும் சுத்தமான நெய் மற்றும் இரு முறை சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணையில் தயாரிக்கப்பட்டவை. அடையார் ஆனந்தபவனின் சீர் வரிசை பதார்த்தங்கள் உங்கள் இல்லத் திருமண விழாவை மேலும் சிறப்பாக்குகிறது.
அடையார்
ஆனந்த பவன்
ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் (A/C)
அடையார் ✆ 4911265, 7112645 புரசைவாக்கம் ✆ 6421626, 7175534 ஜார்ஜ் டவுன் ✆ 5388845, 5392225.
அண்ணாநகர் ✆ 6206377, 7171328 வண்ணாரப்பேட்டை ✆ 5964291, 5955729 தி.நகர் ✆ 4328550, 4328505
பாண்டிபஜார் ✆ 8157270, 7123669 மகாராணி தியேட்டர் அருகில் ✆ 5955533, 5969259
கோயம்பேடு ✆ 3790403 ஆலந்தூர் ✆ 2335428 சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் ✆ 5354199
மைலாப்பூர் ✆ 4617315, 7108609 வடபழனி ✆ 4881879 காஞ்சிபுரம் ✆ 233295

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 12.1.2003

